செம்மண்

நிலம் 1 துகள் 46 வள்ளுவர் ஆண்டு 2052, 29 மே - 04 ஜூன் 2021 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-

தடம்புரள்கிறதா தடுப்பூசி திட்டம்?

■ வாகடவாணன் ■

நாட்டு மக்களுக்கு விரைவாக தடுப்பூசி வழங்க வேண்டிய நிலையில், முறையற்ற திட்டமிடல் மற்றும் சரியான மேற்பார்வையின்மை காரணமாக விடயம் இழுத்தடிக்கப் பட்டு வந்தது. அதற்கப்பால், ஒக்ஸ்போர்ட் - அஸ்ரா ஸெனீகாவின் கொவிஷீல்ட் வகையின் 2ஆம் கட்ட மருந்தளவு கிடைக்குமா என்ற நிச்சயமற்ற தன்மையும் கறுப்புச்சந்தையில் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வழி சமைத்திருந்தது

பயங்கரவாதத்தை வெற்றிகரமாக ஒழித்த இலங்கைக்கு, கொரொனாவை ஒழிப்பதெல்லாம் சும்மா ஜுஜுபி வேலை என்று மார் தட்டியவர்களுக்கு கொரொனா தன் கைவரிசையை காட்டிக்கொண்டிருக்கிறது. புத்தாண்டுப் பண்டிகைக் காலத்திற்குப் பின்னான கொரொனாவின் பரம்பல் முன்னைய கொத்தணிகளையெல்லாம் தூக்கிச் சாப்பிட்டு விட்டது. இந்த நிலையில், தற்போதுள்ள நிலையை சமூகத்தொற்று என்று கூறி சங்கடப் படாமல் புத்தாண்டு கொத்தணி என பூச்சாண்டி காட்டி விட்டு போர்ட் சிற்றி விவகாரத்தில் பிஸியாகியிருக்கிறது அரசு.

நாளாந்தம் அதிகரித்துவரும் தொற்றாளர்களின் எண்ணிக்கை, வைத்தியசாலைகளில் உள்ள வசதிப் பற்றாக்குறைகள், பொதுமக்களின் அக்கறையீனமான போக்கு என்பவற்றுக்கு அப்பால் தடுப்பூசி வழங்கலில் உள்ள திட்டமிடாமை மற்றும் ஒழுங்கீனங்களும் நாட்டு மக்களை இக்கட்டான நிலைக்கு அழைத்து செல்கின்றது.

தடுப்பூசியேதான் தீர்வு!

உலகளாவிய கொரொனா தொற்றுப் பரவலிலும் சரி உள்ளூர் தொற்றுப் பரவலிலும் சரி தடுப்பூசியே தற்போதைக்கு இருக்கக்கூடிய தடுப்பு முறைகளில் வினைத்திறனானதாகக் கணிக்கப்படுகின்றது. அதுவும் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டு அதனையே மாத்திரம் நம்பியிராது ஏனைய தொற்றுப் பரவல் தடுப்பு பழக்கவழக்கங்களையும் பின்பற்றினாலேயே இப்போதைக்கு தொற்றிலிருந்து தப்ப முடியும்.

தடுப்பூசியேதான் கொவிட்-19 தொற்றுக்கான இறுதித்தீர்வு எனும் சாரம்சத்தை கொண்ட ஊடகக்குறிப்பொன்றிலும் அரசுத் தலைவர் இதையேதான் வலியுறுத்தியிருந்தார்.

கொரொனா நுண்தீமிக்கு (வைரஸ்) இருக்கக்கூடிய வீரியம், மனிதருடைய கவனமின்மை மற்றும் காற்றினூடாக பரம்பலடையக்கூடிய அதன் சாத்தியம், வெளிக்குணங்குறிகள் இல்லாமலும் ஏற்படக்கூடிய நோய்த்தொற்று என்பன காரணமாக உலகெங்கிலும் நோய் பரவலடைய மருத்துவ அறிவியல்துறை திக்குமுக்காடிப் போயிருக்கிறது.

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்

ஏழை மக்கள் மீது கவனிப்பு அவசியம்

கொரோனா கட்டுப்பாடுகள் இறுக்கமாக ஆனி (ஜூன்) மாதம் 7ஆம் நாள் வரையில் நீடிக்கப்பட்டுள்ளன. இரண்டு வாரங்கள் பயணத் தடை. வேலைக்குச் செல்வதற்கும் தடை. கொரோனாவைக் கட்டுப்படுத்த இதுபோன்ற கட்டுப்பாடுகள் அவசியம்தான். அதில் மாற்றுக் கருத்தில்லை. இந்தக் கட்டுப் பாடுகூடப் போதாது, நாட்டை முழுமையாக முடக்கி ஈ, காக்காய்கூட அசையாமல் பார்த் துக்கொண்டால்தான் ஓரளவிற்காவது நிலமை யைக் கட்டுப்படுத்த முடியும் என்று மருத்துவத் துறையினர் ஒற்றைக் காலில் நிற்கின்றனர் என்பதும் உண்மையானதுதான்.

இருந்தாலும் இந்த முடக்கம், பயணத் தடை, கட்டுப்பாடுகள் எல்லாமும் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள ஏழை மக்களைத்தான் மேலும் மேலும் பாதிக்கின்றது. போரின் பாதிப்புக்களில் இருந்து மீண்டெழுந்துவிட அவர்கள் முயன்று கொண்டிருந்தபோதுதான் கொரோனா முதலாவது அலை வந்து அவர்களை மேலும் கீழே தள்ளிவிட்டது.

இப்போது அதிலிருந்து சுதாகரித்துவிட முயற்சிப்பதற்குள் மூன்றாவது அலையின் தாக்கம் அவர்களை மீண்டும் புரட்டிப் போடுகின்றது. நாளாந்தம் கூலி வேலைகளுக்குச் செல்பவர்களும் விவசாயிகளும் சிறு கடைக் காரர்களும் சிறு தொழில் முயற்சியாளர்களும் என பாதிக்கப்படுபவர்களின் பட்டியல் நீளமா னது. இருந்தாலும் நாளாந்த உழைப்பில் வாழும் குடும்பங்களின் நிலைமையே இந்தக் கால கட்டத்தில் மிகப் பரிதாபமானது.

கொரோனாவின் முதலாவது அலையின் போது பெருமளவில் உதவிகள் அரசாலும் தனியாராலும் தொண்டு அமைப்புக்களாலும் வழங்கப்பட்டன. ஆனால், இப்போது அதற் கான சாத்தியங்களை அதிகம் காணமுடிய வில்லை. ஒரு சில ஆலயங்கள், தனிநபர்கள் தங்கள் சக்திக்கு உட்பட்டு உதவிகளைச் செய்தாலும் எத்தனை நாளைக்கு அவர்களாலும் தாக்குப்பிடிக்க முடியும் என்பதே கேள்வி.

வைகாசி (மே) 28ஆம் நாள் உலக பட்டனி தினம். இந்த உலகம் ஏற்கனவே பட்டினியால் அதிகம் உயிர்களை இழந்து வந்திருக்கிறது. கொரோனா அதனை இன்னும் வேகமாக அதி கரிக்கச் செய்திருக்கின்றது. அந்த நிலைமை இலங்கையிலும் வந்துவிடாமல் பார்த்துக் கொள்வது ஆட்சியாளர்களின் தலையாய கடமை.

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும் அதேவேளை ஏழை மக்களின் வாழ்வின் மீதும் ஆட்சியாளர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டியதும் அவசியம்.

கொரொனா நோய்த்தொற்று சிகிச்சை முறைகளிலே கவனம் செலுத்தி வந்த மருத்துவ உலகு, நோயை முன்னரே தடுக்கும் முறைக்குரிய ஆய்வுகளை முடுக்கிவிட்டது. அதன் விளைவாக, கண்டறியப்பட்ட தடுப்பூசிகள் அவசரகால பயன்பாட்டுக்கு அனுமதிக்கும் மார்க்க மூடாக மனித பயன்பாட்டுக்கு விடப் பட்டன.

தடுப்பூசிக்கான உலகளாவிய கேள்வி சடுதியாக உச்சத்தை தொட்டிருந்தது. தமது மக்களில் கரிசனையுள்ள நாடுகள், தடுப்பூசிகளை ஆய்வு நிலையிலேயே முற்பதிவு செய்து அனுமதி கிடைத்ததும் உடனடியாக தடுப்பூசி ஏற்றும் பணியை விரைவுபடுத்தின. செல்வந்த நாடுகள் என்ன விலை செலுத்தியேனும் கொரொனா தடுப்பூசியை கொள்வனவு செய்யத் தயா ராக இருந்த நிலையில், வறிய நாடுக ளுக்கும் அதனை கிடைக்கச் செய்யும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன.

தாமதமாகவே இலங்கைக்கு தடுப்பூசி கிடைக்கும் என நம்பப்பட்ட நிலையில், இந்திய அரசின் உதவியில் எதிர்பார்த் ததையும்விட வேகமாக தடுப்பூசி கிடைத் திருந்தது. சீனாவினாலும் தடுப்பூசிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன. ரஷ்யத் தயாரிப்பான ஸ்புட்னிக் தடுப்பூசிகளும் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு பாவனைக்கு விடப்பட்டன.

தம்மிக்கவின் பாணி தொடர்பில் கரிசனை செலுத்திவந்த அரசு, தொடக் கத்தில் தடுப்பூசி விடயத்தில் கடும் ஆர் வம் காண்பித்திருக்கவில்லை. மற்றைய நாடுகள் போட்டிபோட்ட போதுதான் இலங்கையும் களத்தில் இறங்கியது.

கறுப்புச் சந்தையில் தடுப்பூசி

நாட்டு மக்களுக்கு விரைவாக தடுப்பூசி வழங்க வேண்டிய நிலையில், முறையற்ற திட்டமிடல் மற்றும் சரியான மேற்பார்வை யின்மை காரணமாக விடயம் இழுத்தடிக்கப் பட்டு வந்தது. அதற்கப்பால், ஒக்ஸ்போர்ட் - அஸ்ரா ஸெனீகாவின் கொவிஷீல்ட் வகையின் 2ஆம் கட்ட மருந்தளவு கிடைக்குமா என்ற நிச்சயமற்ற தன்மையும் கறுப்புச்சந்தையில் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வழி சமைத்திருந்தது.

தகவல்களின் பிரகாரம், பொதுச் சுகாதார பரிசோதகர்களின் அனுசரணை யுடன் 5000 ரூபாவிற்கு தடுப்பூசி ஏற்றப்பட்ட தகவல்கள் ஊடகங்களுக்குக் கசிந்திருக்கின்றது. இந்த விடயத்தினை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கின்றது. பதிலுக்கு அரச மருத்தவ அதிகாரிகள் சங் கத்தின் மீது பொதுச் சுகாதாரப் பரிசோத கர்களும் குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசியிருக்கிறார்கள்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தை சேர்ந்த சிலர் தமது பெற்றோர் உள்ளிட்ட தமது குடும்பத்தினர்களுக்கு தடுப்பூசியைப் பெற்றுக் கொடுத்திருக்கும் சம்பவம் இடம்பெற்றிருப்பதாக முறையிடும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள், குறித்த நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பையும் தெரிவித்தனர்.

தடுப்பூசி நிகழ்ச்சித்திட்ட ஒழுங்கு முறைக்குப் புறம்பான வகையில் இடம் பெற்றுள்ளதாக கூறப்படும் இந்தச் செயற்பாடு ஏற்றுக்கொள்ளப்படுமானால், சுகாதாரத்துறை சார்ந்த ஏனைய பணியாளர் களுக்கும் அத்தகைய வசதி ஏற்படுத்தப் படவேண்டுமென பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரியிருக்கிறது.

வேலைநிறுத்த முன்னறிவிப்பு

தடுப்பூசித் திட்டத்தில் தமக்கும் முன்னு ரிமை அளிக்கப்படவேண்டும் என்று கோரி கிராம சேவகர்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கியிருக்கி றார்கள். நாடாளாவிய ரீதியில் பணியாற்றும் சுமார் 12,000 கிராம அலுவலர்கள் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவை தெரிவித்திருக் கிறார்கள்.

சுகாதாரத் தரப்பினருக்கும் பாதுகாப்புத் துறையினருக்கும் வழங்கப்பட்டதைப் போல, கொரொனா தடுப்பூசி பட்டியலில் தமக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று கோரியி ருக்கும் அவர்கள், தமது உறுப்பினர்களில் மூவர் கொரொனா தொற்றினால் இறந்திருக்கி றார்கள் எனவும் ஐம்பது பேர் வரையில் தொற்றுக்குள்ளாகியிருக்கிறார்கள் எனவும் பிறிதொரு நூறுபேர் தனிமைப்படுத்தப்ப ட்டிருக்கிறார்கள் எனவும் தெரி வித்திருக்கி றார்கள்.

நிலைமை இவ்வாறு இருக்க, கடந்த 27ஆம் திகதி வெளியிடப்பட்ட அதி சிறப்பு வர்த்தமானி மூலமாக சேவைகள் பலவற்றை அத்தியாவசிய சேவைகளாக அறிவித்திருக்கும் அரசு, கிராம சேவகர் களின் சேவையையும் அதற்குள் அடக்கியி ருக்கிறது.

தடுப்பூசி கொள்வனவில் அரசு கவனம்

நாட்டு மக்களுக்கு தடுப்பூசியை இலவ சமாக வழங்கி வரும் அரசு, தடுப்பூசி வழங்கல் திட்டத்தினை தொடர்ந்து முன் னெடுத்தே செல்கிறது. அதிக தொற்றா ளர்களை கொண்ட மாகாணமான மேல் மாகாணத்தில் பொதுமக்களுக்கான தடுப்பு மருந்து வழங்கலை தொடங்கிய அரசு, தற்போது அதனை காலி, மாத்தறை மற் றும் குருநாகல் மாவட்டங்களுக்கும் விரி வாக்கியிருக்கிறது. இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்ட தடுப்பூசிகள் கிடைக்காமையினால் நெருக் கடியை எதிர்கொண்ட அரசு, ஏனைய மார்க்கங்கள் ஊடாக தடுப்பூசிக்கான ஒதுக்கிக்கொள்ள நடவடிக்கை எடுத்தி ருக்கின்றது.

மந்திரித்த நீர் தொடர்பிலும் தம்மிக்க வின் பாணி தொடர்பிலும் அக்கறை காண் பித்த சுகாதாரம் சார் அரசியல் தரப்புக்கள், தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் முறையான திட்டமிடலை கொண்டிருக்க வில்லை என்பதே பலருடைய குற்றச்சாட் டாக இருக்கிறது. தடுப்பூசி ஏற்றும் மையங்களில் ஏற்படுகின்ற குழறுபடி தொடக்கம் உரிய காலத்தில் தடுப்பூசி வழங்கப்படாதது வரையான சகல குறை பாடுகளுக்கும் அரச இயந்திரத்தின் அசமந்தத்தினையே குற்றஞ்சாட்டுகிறார்கள் மக்கள்.

பொன்சேகா அப்பொழுதே சுட்டிக்காட்டினார்

கடந்த நவம்பர் மாதம் பாதீட்டின் மீதான விவாதம் நாடாளுமன்றில் இடம் பெற்றபோது அதில் பங்கேற்றுப் பேசிய சரத் பொன்சேகா, பாதீட்டில் தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டத்திற்கென ஒதுக்கீடுகள் எதும் மேற்கொள்ளப்படவில்லை என்ப தைப் பற்றிச் சுட்டிக்காட்டியிருந்தார். அமெரிக்கா தனது நாட்டில் தடுப்பூசி வழங்கலுக்காக நிதி ஒதுக்கியமை பற்றி குறிப்பிட்ட அவர், தடுப்பூசி வழங்கல் திட்டத்தினை இலங்கை ஒரு இலகுவான வேலைத்திட்டமாக கருதிவிடக்கூடாது எனவும் கூறியிருந்தார்.

அரை முடக்கத்தில் நாடு வைக்கப்பட் டுள்ள நிலையில், இப்போது கொரொனா வின் பரவும் வேகம் குறைவடைந்தி ருக்கலாம். ஆனால், பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்படும் நாட்களில் நிலைமை எதிர்மாறானதாகவே இருக்கும். இந்த நிலையில், இனிவரும் நாட்களிலேனும் தடுப்பூசி வழங்கலுக்கான சரியான திட்டம் விரைவாக நடைமுறைப்படுத்தப்பட்டாலே பெருந்தொற்றை வெற்றிகொள்ள முடியும். இல்லையேல், அணை கடந்த பெருந் தொற்று காரணமாக பேரிடர் ஒன்றை இலங்கை சந்திக்க நேரிடும்.

எமையறிதல் 09

ஐயங்கொண்டான் சுவாமிகள்

மனம் ஒரு குரங்கு என்பதில் எந்தவிதமான ஐயப்பாடுகளும் இருக்க முடியாது. அது தாவிக்கொண்டே இருக்கிறது. எதற்காக ஏன் எப்படி எப்போது போன்ற வினாக்களை எழுப்பி விடைகளை சுயமாகக் கண்டடைந்து தெளிவுபெறும்வரை அது ஓரிடத்தில் ஆறியிருக்கும் வாய்ப்பைத் தவறவிடவே செய்கிறது. செய்யும். மனம் தெளிவோடிருக்குமாயின் எம்முன் எமது செயலூக்கமே முன்செல்லும் ஒரு தேர்ந்த வழிகாட்டியாக. அல்லாதவிடத்து அலைபாயவே செய்யும்.

மனதை ஒருமுகப்படுத்துதல் என்பதற்கானதே இறைவழிபாடு எனும் கூற்றை கவனத்துடன் பார்க்கவேண்டியுள்ளது. சமயம் இறை நம்பிக்கை, சடங்குகள் என்ற வலிந்து வடிவமைக்கப் பட்ட விடயங்கள் தற்செயல் களின் அல்லது இயற்கையினது கட்டமைவுடன் அதன் துணையோடு எமது நினைவ கங்களுக்குள் காலத்துக்குக் காலம் புகுத்தப்பட்டிருக்கிறது. புகுத்தப்பட்டுக்கொண்டும் இருக்கிறது. வடிவமைப்புகளின் ஆதிக்கமே எல்லாம்.

மனஒருமைப்பாடு என்பது இறைவழிபாட்டினால் சாத்தியமாகிறதா? அதை எனது மனத்தை என்னாலேயே ஒருமைப்படுத்திக்கொள்ள முடியவில்லை என்பதிலிருந்து தொடங்கவேண்டியுள்ளது. எனது மனம் எனது கட்டுக்குள் இல்லை என்பதற்காக அதைக் கட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியாக கடவுளை நம்புதல் என்பது உள்ளது. இங்கேதான் எமது பரிதாபநிலை உள்ளது. சடமாக உள்ள எமது உடலை விடவும் எமக்குள்ளிருந்து எம்மை இயக்கும் சிந்தனையின் வலிமையைவிடவும் கற்பிக்கப்பட்ட யாரோ கண்டதாகச் சொல்லிய கடவுளை நம்புகிறோம்.

நம்புதல் என்பது எமக்கான தீர்வை, அது மன அமைதியாகட்டும் அல்லது பிற பௌதீகத் தீர்வுகளாகட்டும் பிறனொருவனிடமிருந்துதான் பெறவேண்டுமா? பொளதீகத் தீர்வுகள் விடயத்தில் பிறர்மூலமாக அவை கிட்டுவதற்குச் சாத்தியப்பாடுகள் இருக்கின்றன. இருக்கலாம். எனது மன அமைதியை எப்படி பிறரிடம் எதிர்பார்ப்பது? நாம் தெளிவாக இல்லை. குறித்தவோர் விடயத்தில் நாம் திருப்தியடையவில்லை. அந்தத் திருப்தியீனம் எவ்வாறு உருவானது? குறித்த விடயத்தை சரிவரக் கையாளத் தவறியிருக்கிறோம். எதிர்பார்த்த விளைவை எட்டமுடியவில்லை. அவ்வளவுதான் விடயம்.

அந்த எட்டமுடியா விடயத்திற்காக நாம் செலவு செய்த முயற்சி, காலம், ஆர்வம் தொடர்பாக கவனமேதும் எடுத்திருக் கிறோமா? தவறுகளிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களுக்கூடாக மறுமுயற்சியேதும் செய்திருக்கிறோமா? அதைச் சரிவரச் செய்திருந்தால் எதிர்பார்த்த விளைவை அடைந்தோ அல்லது அண்மித்தோ இருக்கலாம். அப்படியேதும் எப்போதாவது செய்திருக்கிறோமா? ஆறறிவு படைத்தவர்கள் என்று பெருமை பேசும் நாங்கள் எப்போதாவது அந்த ஆறாம் அறிவைப் பயன் படுத்தியிருக்கிறோமா?

நாம் எமது செயலுக்கு அருகிருக்கும் ஒருவனை அழைப்பதை விடுத்து கற்பனையான ஒன்றிடம் முழுமையாகப் பொறுப்பளித் துக்கொண்டிருக்கிறோம். இங்கேதான் நாம் நம்பிக்கையுள்ளவர்கள் என்கின்ற விடயம் கேள்விக்குரியதாகிறது. அயலில் கைக்கெட்டிய கண்களுக்குத் தெரிகின்ற தொட்டுணரமுடிந்த ஒன்றை நம்பவில்லை. இதுதான் உண்மை. நம்பிக்கையீனம் என்பதைத்தான் நம்பிக்கை என்று கொண்டாடும் பரிதாபநிலையில்தான் உள்ளோம். பல்வேறு சுய வினாக்களுக்கூடாக அறிதல் மற்றும் தெளிதல் என்கின்ற ஒப்பற்ற இரு விடயங்களை அறியாமல் அல்லது நம்பாமல் எமது மனதை அலைய விடுகின்றோம். அவ்வளவுதான்.

நம்பிக்கை எதிர் நம்பிக்கையீனம் எனுமிரு அந்தங்களுக்கிடையே அல்லாடி அலைந்து கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டியுள்ளது. இருக்கிற ஒன்றை நம்புவதைவிட இல்லாத ஒன்றை நம்புவதுதான் எமது வழக்கமாகிவிட்டது. கற்பனையாக வடிவமைக்கப்பட்ட ஒன்றை நம்பி கையிலெட்டும் ஏராளமானவற்றை நழுவவிட்டுவிடுகிறோம். நினைத்தது எப்படிக் கிடைக்கும்? மனம் எப்படி நிம்மதியடையும்? அதைவிட எமது எண்ணம் தனது செயலில் அல்லது முயற்சியில் தவறவிட்ட விடயங்களுக்குப் பதிலாக தன்னுள் புகுத்தப்பட்டிருக்கும் நம்பிக்கை எனும் பெயரோடிருக்கும் நம்பிக்கையீனத்தை ஆராய முற்படுகிறது.

காலக் கோளாறு தெய்வக்குற்றம் அதற்குமப்பால் விதி என்ற விடயங்களுக்குள் அமுங்கிப்போய் பரிகாரம் தேடியலைகிறது. பரிகாரத்தை தன்புள்ளியிலிருந்து தூரவாகி கற்பனைப்புள்ளியி லிருந்து தேட முயல்கிறது. நிலையான தன்புள்ளியை ஒதுக்கி வைத்துவிட்டு நிலையற்ற இருப்பற்ற ஒரு புள்ளிக்குள் தேடிக் களைத்து இற்றுப்போகிறது. தன் செயல் மீதான நம்பிக்கையை நம்பிக்கையீனமாக்கிக்கொள்கிறது. கற்பனைச் சரக்கு மீது நம்பிக்கையீனத்துக்குப் பதிலா நம்பிக்கை வைக்கிறது.

நம்பவேண்டியதை நம்பாமல் நம்பக்கூடாததில் நம்பிக்கை வைக்கிறது. ஆக மன அமைதியென்பது கிடைக்க வேண்டும் என வழி தேடுவதைவிட, அது தொலைந்தமைக்கான காரணத்தைக் கண்டடைய வழி தேடுவதும் தொலையாமலிருக்க வழிதேடுவதும் நாமாக இருக்க அவசியம். சிந்திப்போம்.

கொரோனா: மீண்டும் சர்ச்சை

ஒன்றரை ஆண்டைக் கடந்தும் தீவிரமாக உலுக்கி வரும் கொரோனா நுண்தீமி (வைரஸ்) எங்கிருந்து எப்படி உருவானது என்கிற சர்ச்சைக்கு இன்னும் முடிவு கிட்டவில்லை. தொடக்கத்தில் சீனாவின் வுகான் மாகாண உயிர்ச் சந்தையில் விற்கப்பட்ட வௌவால்களில் இருந்து நுண்தீமி பரவியிருக்கலாம் என்று அறிவிக்கப்பட்டபோதும் நீண்ட ஆய்வுகளுக்குப் பின்னர் அந்தக் கருதுகோள் தவறு என்று சீனா அறிவித்தது. உலக சுகாதார நிறுவனமும் அதனை ஏற்றுக்கொண்டது.

கொரோனாவின் பரவலுக்கான காரணம் திட்டவட்டமாக, பக்கச்சார்பற்ற வகையில் கண்டறியப்படாவிட்டாலும், சீனாவின் வுகான் மாகாணத்தில் உள்ள சர்சதேச நுண்தீமி (வைரஸ்) ஆய்வு மையத்தில் சீனாவால் உற்பத்தி செய்யப்பட்டதே இந்தக் கொரோனா என்கிற குற்றச்சாட்டும் ஆய்வகத்தில் ஏற்பட்ட கசிவு காரணமாகவே கொரோனா வெளியே பரவியது என்கிற குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டு வருகின்றன.

சந்தர்ப்ப சூழல் சாட்சியங்களின் அடிப்படை யில் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டாலும் அதனை நிரூபிப்பதற்கு இன்னும் போதியளவு ஆதாரங்கள் எவையும் முன்வைக்கப்படவில்லை. குறிப்பாக அமெரிக்கா தொடர்ந்து இந்தக் குற்றச்சாட்டை வலியுறுத்தி வருகின்றது. இந்தக் குற்றச்சாட்டின் தொடர்ச்சியாக இப்போது மீண்டும் இந்த விடயம் விவாதத்திற்கு வந்திருக்கிறது.

அதற்குக் காரணம், சீன அரசு கொரோனா நுண்தீமி தொடர்பில் உத்தியோகபூர்வமாக வெளி உலகிற்கு அறிவிப்பதற்கு முன்பாக வுகான் நுண்தீமி ஆய்வுகூடத்தைச் சேர்ந்த மூன்று ஆராய்ச்சி யாளர்கள் கொரோனா அறிகுறிகளுடன் மருத்துவ சிகிச்சைக்காக வைத்தியசாலைகளை நாடியிருக்கின்றனர் என்கிற தகவலை அமெரிக்காவின் வோல் ஸ் ரீட் ஜேர்னல் பத்திரிகை வெளியிட்டது.

இதுவரை பகிரங்கப்படுத்தப்படாத அமெரிக்கப் புலனாய்வு அறிக்கை ஒன்றை மேற்கோள் காட்டி அது இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. எத்தனை ஆராய்ச்சியாளர்களின் உடல்நிலை பாதிக்கப்பட்டது, சரியாக எப்போது அவர்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டது, மற்றும் எப்போதெல்லாம் அவர்கள் மருத்துவமனையை நாடினார்கள் என்பது பற்றியும் அந்த அமெரிக்கப் புலனாய்வு அறிக்கை புதிய தகவல்களை அளித்துள்ளதாக `வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' கூறியிருக்கிறது.

இது வுகான் வைராலஜி ஆய்வகத்தில் இருந்துதான் கொரோனா பரவியது என்கிற குற்றச்சாட்டுக்கு மேலும் வலுச் சேர்ப்பதுபோன்று உள்ளதால் சர்ச்சை தொடர்கின்றது.

■ ரதிதேவி, மானிப்பாய் ■

108 ரூபாய்

"5436 ரூவாய் மிஸ்" கவுண்டரில் நின்ற பெண் கூறினாள்.

தெஹிவளை பூட் சிட்டியின் கண்ணாடிச் சுவர்கள் வழியே வெளியில் பெய்யும் கனத்த மழையை ரசித்த வண்ணம் நின்றுகொண்டிருந்த நான், அக்குரல் கேட்டுத் திரும்பினேன். மயில் தோகை அலங்காரம் போட்ட பேர்ஸ் ஸைத் திறந்து, HNB atm அட்டையை எடுத்து நீட்டினேன். இணையத்தின் வழி பணம் பரிமாறப்பட சில வினாடி கள் தாமதமானது. மௌனம் நிரப்பிய அந்த நிமிடங்களில், அந்த கவுண்டரில் நின்ற பெண்ணின் முகத்தில் தெரிந்த விரக்தியையும் கோபத்தையும் கவனித்தேன்.

வரிசையில் பின்னால் நின்ற ஒருவன், அவளை பார்த்துக்கொண்டி ருந்ததே அதன் காரணம். அழகை ரசிப்பதை தவறென்று உரைக்க முடியாது, ஆனால் அவள் கண்களில் வெளிப்படையாகத் தெரிந்த வெறுப்பை, மறுப்பை மதிக்காமல் அவன் பார்வை அத்துமீறியது நிச்சயம் தவறு. ஆனால் இவளை வெறும் சதையாகப் பார்க்கும் அவன் பார்வையை கோபிக்கும் இவள், ஒரு விலை மகளையோ, ஆபாசப் பட நடிகையையோ தன்னைப்போல் ஒரு பெண்ணாக சமமாகப் பார்ப்பாளா? தன் வேலையைப் போன்று பாலியல் தொழி லையும் வெறும் வேலையாகப் பார்ப்பாளா? இவ்வாறான எண்ணங்கள் என் மனதில் ஓடின.

அப்பொழுது அவள் பெயரைக் கவனித்தேன் "மாதவி இளங்கோ விந்தன்", அப்பெயரே அக்கேள்விக்கு பதில்கூறியது. மனிதன் விலங்குகளின் விரிவாக்கம், கடவுளின் தொடக்கம். விலைப்பட்டியலைக் கிழித்து என் கையில் கொடுத்துவிட்டு, வணங்கிய வண்ணம் வழி அனுப்பினாள். நானும் புன்னகையும் நன்றியும் உரைத்து விட்டு அந்த இடத்தை விட்டு நீங்கினேன்.

இரு கைகளில் நான்கு பெரும் பைகள். பின்னால் நிற்கும் 'அவ னையும்' வணங்கி புன்னகையுடன் வழியனுப்பவேண்டிய அந்த பெண்ணின் வேலையின் நிர்ப்பந்தத்தை நினைத்துப் பாவப்பட்டேன். பிறர் கடவுளாகக் கருதும் வேலையில் நான் இருப்பதை நினைத்து சந்தோஷப்பட்டேன். என் முகக் கவசம் வேறு மூக்கிற்கு கீழ் இறங்கி விட, தட்டித் தடுமாறி அதை சரிசெய்துகொண்டு படிகளில் தடக்கி விழாமல் தள்ளாடி பாதசாரிகள் நடைமேடைக்கு வந்தேன்.

மழையிலிருந்து தப்ப ஆபத்பாண்டவராக ஒரு முச்சக்கரவண்டி கிடைக்காதா என சுற்றும் முற்றும் பார்த்தேன். நெருங்கிவந்த ஒன்றும் யாரோ முற்பதிவு செய்த 'ஊபர்' முச்சக்கரவண்டி. என் நல்லநேரம் காலிவீ தியின் மறுபுறம் அந்தக் கரை சென்றுகொண்டிருந்த ஒரு முச்சக்கர வண்டி, என்னைக் கண்டு ஒலிபெருக்கியில் சமிக்கை செய்துவிட்டு குடுகுடு என, வீதியைக் கடக்கும் ஒரு எலியைப்போல் சறுக்கென்று இந்தக்கரை நோக்கி வந்து, சென்.மேரிஸ் தேவாலயம் முன்பு லாவகமாக ஒரு 'U' வெட்டு வெட்டி, அரை நிமிடத்தின் உள் ளேயே பூட் சிட்டி வாசலில் வந்து நின்றது. ஒரு சில மழைக்குண்டுகளை மட்டும் முதுகில் தாங்கிக்கொண்டு கோழையைப்போல் முச்சக்கர வண்டிக்குள் வேகமாய் நுழைந்து அமர்ந்துகொண்டேன்.

மழை காரணமாக கருப்பு றப்பர் திரைச்சீலைகள் இறக்கிவிடப் பட்டிருந்தன. கொரோனா காரணமாக எனக்கும் சாரதிக்கு நடுவில் ஒரு ஒளிபுகும் பொலித்தீன் திரை தொங்க விடப்பட்டிருந்தது. அதனுள் கசியும் வீதி விளக்கொளி, சுகம் விசாரித்துச் செல்லும் பிற வாகனங்களின் ஒளி, அத்து மீறும் மின்னலின் ஒளி, இவை தவிர பிற நொடிகளை இருள் நிரப்பியது.

"டிலிகன்ஸ்" ஆடைக்கடை தாண்டிய ஓரிரு நொடிகளில் முச்சக்கரவண்டி திடீர் என வலப்புறம் திரும்பியது.

"அண்ண நேரத்தானே போகணும்."

"இதுல ஒரு சின்ன வேலை இருக்கிம்மா, டக்கின்னு முடிச்சிட்டுப் போய்டிலாம்."

பயம் பற்றியது. நான் கொழும்பிற்கு வந்து ஒரு சில மாதங்களே ஆகின்றன. திறன்பேசியை எடுத்து தம்பிக்கு என் இருப்பிடத்தை பகிர்ந்துவிட்டு அவனிடம் கதைத்துக்கொண்டு வந்தால் பாதுகாப்பாய் இருக்கும். என் திறன்பேசியை சட்டைப்பை யினுள் தேடினேன். காணவில்லை. மழைக் காக முதுகுப் பையினுள் வைத்தது ஞாபகம் வந்தது. வாங்கிய பொருள்களில் பலதினை முதுகுப் பையினுள் அடைந்திருந்தேன்.

இருளால் பையினுள் கையை விட்டு குத்து மதிப்பாகத் தேடினேன். பயத்தில் கைவேறு லேசாக நடுங்கிய மாதிரி இருந் தது. செதஸ் ஸ்கோப்தான் மறுபடி மறுபடி கையில் மாட்டியது. அதை எடுத்து கழுத் தில் போட்டுவிட்டு, கிளறிக் கொட்டி ஒரு வழியாகத் திறன்பேசியை எடுத்தேன். ஆனால் அதில் சார்ஜ் இல்லை. வாயில் கெட்ட கெட்ட வார்த்தையாக வந்தது. போதாதற்கு இடி வேறு இணைந்து என்னை பயமுறுத்தியது. சரி, இங்கேயே இறங்கி மீண்டும் காலிவீதிக்கு நடந்து போவோம் என எண்ணி வெளியில் சற்று எட்டிப்பார்த்தேன்.

வலக் கரையில் காலிவீதியின் அரை அளவு அகலம் உள்ள நீண்ட பெரும் கால்வாய், பெரிய அனோகொண்டாப் பாம்பினைப்போல் வளைந்து நெளிந்து ஓடியது. வீதியும் அதை ஒட்டி வளைந்து நெளிந்து ஓடியது. முச்சக்கரவண்டி எதோ அந்தப் பாம்பின் வயிற்றுக்குள் முழுங்குப்பட்ட எலிபோல் பயணித்தது.

இடக்கரையில் நெருப்புக்குச்சிகளை அருகருகே அடுக்கி வைத்தாற் போல் சின்னச் சின்ன வீடுகள், அவ்வீடுகளின் வாசலும் வீதியும் ஒன்றே. வயதான பெண்மணிகள் சிலர் வீதிக்கரையில் கதிரைகளைப் போட்டு விட்டு இருந்து அரட்டை அடித்துக்கொண்டிருந்தனர். சில இளைஞர்கள் முக்கால் காற்சட்டை, சரம் மட்டும் அணிந்துகொண்டு பெரும் மரத்தடியில் இருந்து பீடி பிடித்துக்கொண்டிருந்தனர். சில சிறுவர்கள் வீட்டு வாசல்களில் நின்று கொண்டு மழை நீரில் காலை எட்டி நனைத்து, மழை நீரை ஏந்தி, எத்தி விளையாடிக்கொண்டிருந்தனர். ஒரு குழப்படிகாரக் குழந்தை,

அக்காவின் பேச்சைக் கேட்காமல் மழைக்குள் ஓடி வர, பின்னாலேயே ஒரு இளம்பெண் வந்து அடித்து இழுத்துக்கொண்டு போனாள். மழையின் சோவுடன் அவனின் அழுகையும் கலந்தது. யாரோ சிலர் காயப்போட்ட துணிகளை எடுக்க மறந்துவிட அவை மழையில் நனைந்தபடி கம்பி வேலி மீது கொடிகளுடன் உறங்கிக் கிடந்தன. வீதியின் முனையில் ஒரு பெண்மணி பொதுக்குழாயில் நீராடிக்கொண்டிருந்தாள். விளிம்பு நிலை மக்களின் வாழ்வில் தனிமை என்பது ஆடம்பரம் ஆக்கப்பட்ட அத்தியாவசியம். ஒரு நரைத்த மீசைக்கா ரர் மழை நீரை மீண்டும் வீதிக்குக் கூட்டித் தள்ளிவிட்டு, ஒரு அஸ்பஸ்டஸ் கூரை சீற் துண்டை வாசலில் வைத்து அணை கட்டினார்.

முச்சக்கரவண்டி அங்கு ஒரு வீட்டின் முன் நின்றது. ஓட்டுநர் ஒரு குட்டி ஷொப்பிங் பையை எடுத்துக்கொண்டு அந்த வீட்டிற்குள் ஓடினார். அப்பொழுது அந்த வீட்டிலிருந்து ஒரு ஆறுவயது மதிக்கத் தக்க பெண் பிள்ளை ஓடி வந்து அந்த முச்சக்கரவண்டியின் சாரதி இருக்கையில் ஏறியிருந்து கற்பனையில் ஓடுவதுபோல் விளையாடினாள்.

கற்பனையில் அவள் எங்கு சென்றுவிட முடியும்? லண்டனிற்கா? அவுஸ்திரேலியா விற்கா? மிஞ்சி மிஞ்சிப் போனாள் இந்த வீதியின் முனைவரைதான். மருத்துவபீடம் போகமுடியவில்லை என்று நான் மனமு டைந்து போய்விடக்கூடாதென்று என் அப்பா என்னை ரஷ்யா அனுப்பிப் படிப் பித்தார். ஆனால் இவளின் அப்பாவால் இவளிற்கு இந்தக் கொரானாக் காலத்தில் இணையவழிக் கல்வியைக்கூட ஏற்பாடு செய்துகொடுக்க முடியாது. அந்த முச்சக்கர வண்டியில்கூட இணையவழி "ஊபர்" செயலி பயன்படுத்தப்படுவதாய்த் தெரியவில்லை.

(23ம் பக்.பார்க்க)

இப்பிடி கொரோனாவை வரபண்ணதுக்கு, கொலை பண்றவனையும் ரேப் பன்றவனையும் கொல்றமாறி ஒரு வைரஸ உருவாக்கிவிட்டிருக்கலாமே, நல்லவங்களாவது நல்லா இருந்திருப்பாங்களே எந்தக் கெட்டவன் எப்ப நல்லவனா மாறுவான், எந்த நல்லவன் எப்ப கெட்டவனா மாறுவான் எண்டு கடவுளுக்கே தெரியாது

கொரோனா தடுப்பூசி குறித்த ஐயமும் பதிலும்

இலங்கையில் கொரோனா 3ஆம் தொற்றின் பாதிப்புடன் தடுப்பூசிதான் அதிலிருந்து மீள்வதற்கான ஒரே வழி என்கிற விழிப்புணர்வு மக்களிடம் ஏற்பட்டிருக்கின்றது. இதற்கு முன்னர் தடுப்பூசி போடுவதால் ஏற்படும் பாதிப்புக்களை முதன்மைப்படுத்தி தடுப்பூசி போடுவதைத் தள்ளி வைத்து வந்தவர்களும்கூட இப்போது தடுப்பூசியைப் போட்டுக்கொள்வதற்குத் தயாராகி விட்டார்கள். இருந்தாலும் தடுப்பூசி தொடர்பான சந்தேகங்களும் ஐயங்களும் இல்லாமலில்லை. அவற்றில் சில கேள்விகளையும் அவற்றுக்கான விடைகளையும் இங்கே பார்க்கலாம்.

"கொரோனா தடுப்பூசி எதிர்காலத்தில் குழந்தைப் பேற்றைப் பாதிக்குமா?"

"தடுப்பூசி குழந்தைப் பெற்றுக் கொள்ளும் தன்மையைப் பாதிக்கும் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. இது முற்றிலும் தவறானது"

"கர்ப்பிணிப் பெண்கள் கொரோனா நுண்தீமி (வைரஸ்) தடுப்பூசி எடுத்துக்கொள்ளக் கூடாதா?"

அமெரிக்காவின் நோய் தடுப்பு மையத்தின் தகவலின்படி பிறரைக் காட்டிலும் கர்ப்பிணி பெண்களுக்கு கோவிட்-19 தொற்று ஏற்பட்டால் அதிகமான உடல்நலக் குறைவு ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் கருவுற்றிருந்தாலும் கோவிட்-19 தடுப்பூசி எடுத்துக் கொள்ளலாம் என்று அந்த அமைப்பு கூறுகிறது.

இதன் மூலம் கொரோனா தொற்று ஏற்பட்டால் தீவிரமான பாதிப்பிலிருந்து கர்ப்பிணிப் பெண்களை காப்பாற்ற முடியும் என்கிறது அந்த அமைப்பு.

"கோவிட்-19 தடுப்பூசி போடுவதாலும் கொரோனா தொற்று வருமா?"

கொரோனா தடுப்பூசி போட்டபின் கொரோனாவின் அறிகுறிகளான காய்ச்சல், சளி, உடல்வலி போன்றவை சிலருக்கு ஓரிரு நாட்கள் இருக்கும். ஆனால், அவை கொரோனா தொற்று காரணமாக உண்டானவை அல்ல.

இவ்வாறு தென்படும் அறிகுறிகள் தானாகவே மறைந்துவிடும். கொரோனா தொற்று உண்டானதைப் போல சிகிச்சை தேவைப்படாது.

"கொரோனா தடுப்பூசி போட்டபின் குருதி உறைதல் மற்றும் இதய பாதிப்பு வருமா?"

ஒக்ஸ்ஃபோர்டு - ஆஸ்ட்ராசெனிகா தடுப்பூசி எடுத்துக்கொண்டவர்களில் பல லட்சம் பேரில் ஓரிருவருக்கு இவ்வாறு குருதி உறைதல் ஏற்பட்டு இறந்துள்ளதால், அவர்களுக்கு இரண்டாம் டோஸ் வேறு தடுப்பு மருந்து வழங்கப்படும் என்று சில நாடுகள் கூறியுள்ளன.

இலங்கையில் இதுவரையில் அவ்வாறு யாரும் குருதி உறைதல் பிரச்சினையால் உயிரிழந்தார்கள் என்று தகவல் இல்லை. கொரோனா தடுப்பூசி போட்டதால் ஒருவருக்கு இதய நோய் உண்டானதாகவும் இதுவரை உலகில் எங்கும் நிரூபிக்கப்படவில்லை.

"தடுப்பூசியில் பன்றி இறைச்சி இருக்கிறதா?"

பல தடுப்பு மருந்துகளில் போர்க் ஜெலடின்களை நிலைப்படுத்தும் வேதிப் பொருள்களைப் பயன்படுத்துவார்கள். கோவிஷீல்டு, ஸ்புட்னிக்-v மற்றும் கோவேக்சின் ஆகிய கொரோனா தடுப்பு மருந்துகளின் உட்பொருட்களில் போர்க் ஜெலடின் இல்லை. ஃபைசர் மற்றும் மாடர்னாவின் கொரோனா தடுப்பு மருந்துகளின் உட்பொருட்களிலும் போர்க் ஜெலடின் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"கொரோனா தடுப்பூசி போட்டபின் இறைச்சி உண்ணலாமா?"

கொரோனா தடுப்பூசி செலுத்தி கொண்டவர்கள் இந்த உணவைத்தான் உண்ணவேண்டும் என்று கட்டுப்பாடுகள் எதையும் உலக சுகாதார நிறுவனமோ, உலக நாடுகளின் அரசு அமைப்புகளோ விதிக்கவில்லை.

ஒரு குறிப்பிட்ட உணவை உண்பதால் தடுப்பூசி பயனளிக்காமல் போய்விடும் என்பதற்கான அறிவியல் ஆதாரமும் இதுவரை இல்லை. எனவே கோவிட் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள் இறைச்சி உண்பதற்கு தடையில்லை.

"கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டபின் மது, புகைப் பழக்கம் இருக்கலாமா?"

மது உடலில் நோயெதிர்ப்பு மண்டலத்தை எதிர்மறையாக பாதிக்கிறது. எனவே உடலில் ஆல்கஹால் அளவு அதிகமாக இருந்தால் தடுப்பூசியின் நோயெதிர்ப்பு செயல்திறன் எதிர்பார்த்த அளவிற்கு இல்லாமல் போக வாய்ப்புள்ளது. புகைப் பழக்கத்துக்கும் இதே நிலைதான். ஆனால் இவற்றை நிரூபணம் செய்வதற்கான அறிவியல் ஆய்வுகள் எதுவும் இதுவரை நடத்தப்படவில்லை.

கோவிட் தொற்று ஏற்பட்டுள்ள சமயத்தில் மது மற்றும் புகைப் பழக்கம் இருந்தால் அது உடல் நிலையை மேலும் மோசமாக பாதிக்கக்கூடும்.

இரண்டாவது முறை தாக்கும் கொரோனா வைரஸ், மரபணு மாற்றமடைந்த வேறு ஒரு திரிபாக இருந்தால் முதலில் தொற்று உண்டானபோது உடலில் உண்டான நோய் எதிர்ப்பான்கள் இரண்டாவது முறை தொற்று வரும்போது உடலுக்குள் வந்த கிருமிகளை எதிர்த்து சிறப்பாக செயல்படும் என்றும் கூற முடியாது

"அமெரிக்கா, பிரிட்டனில் கொரோனா தடுப்பூசியைப் பணம் கொடுத்துப் போட்டுக் கொள்ளலாம்"

இலங்கையில் கொரோனா தடுப்பூசி இலவசம். அரசே ஒழுங்கு செய்து அனைவருக்கும் வழங்குகின்றது. எனவே உங்கள் முறை வரும்போது தவறாமல் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளுங்கள். பணம் கொடுத்து அவசரப்பட்டு போலியான மருந்துகளைப் பெற்றுக்கொள்ளாதீர்கள்.

"பெண்கள் மாதவிடாய் காலத்தில் பெண்கள் கொரோனா தடுப்பூசி எடுத்துக்கொள்ளலாமா?

இந்தக் கருத்துத் தவறானது என்கிறார்கள் மருத்துவர்கள். மாதவிடாய் காலத்திலும் பெண்கள் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளலாம். மாதவிடாய் சுழற்சி என்பது உடலில் இயல்பாக நடப்பது. அது எந்த திகதியில் வேண்டுமானாலும் வரும். ஒருவேளை உங்களுக்கு தடுப்பூசி கிடைக்கும் தேதியன்று மாதவிடாய் இருந்தாலும் எடுத்துக் கொள்ளத் ஸ

"கோவிட் தடுப்பூசி போட்டபின்னும் கொரோனா தொற்று வருமா?"

கொரோனா தடுப்பூசி எடுத்துக் கொண்ட பின்னரும் சிலருக்கு கொரோனா தொற்று வருவதை கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால், அவர்களுக்கு லேசான கொரோனா அறிகுறி மட்டும் தென்படும். வீட்டிலேயே சுய தனிமைப்படுத்தல் அல்லது சில நாட்கள் மருத்துவ சிகிச்சையிலேயே குணமடையும்.

தடுப்பூசி போடப்பட்ட ஒருவருக்கு மீண்டும் தொற்று ஏற்பட்டாலும் அவரது உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்படாது. ஒருவேளை தடுப்பூசி போடாமல் இருந்தால் தொடக்கமே ஆபத்தாகும் நிலைகூட வரலாம். தொற்று மிதமான அளவில் மட்டுமே உண்டாகி குணமாக தடுப்பூசியே காரணம்.

"இளம் வயதினர் மற்றும் குழந்தைகளுக்கும் கொரோனா தடுப்பூசி தேவையா?"

கொரோனா முதல் அலை போல் அல்லாமல் உருமாறிய கொரோனாவின் அடுத்தடுத்த அலைகள் இளைஞர்களையும் தாக்குகின்றன. அதனால் இளைஞர்களுக்கும் தடுப்பூசி அவசியம். அதனால் தான் 18 வயதைக் கடந்த அனைவர்க்கும் தடுப்பூசி தேவை என்று வலியுறுத்தப்படுகிறது.

சில நாடுகள் குழந்தைகளுக்கும் தடுப்பூசியைச் செலுத்தி வருகின்றன. அமெரிக்கா, 12 - 15 வயதுள்ள குழந்தைகளுக்கு கொரோனா தடுப்பூசியைச் செலுத்தத் தொடக்கிவிட்டது. அடுத்த ஆண்டு 12 வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்த போதுமான பாதுகாப்பு தரவுகளை சேமித்து வைக்க உள்ளது அமெரிக்கா.

பிரிட்டன் பெரியவர்களுக்கு அதி விரைவாக கொரோனா தடுப்பூசி செலுத்தி வருகிறது. இந்த ஆண்டின் ஜூலை மாதத்துக்குள் இவர்கள் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசியின் முதல் டோஸ் செலுத்தப்பட்டு விடும். ஆனால் குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்துவதில் ஒரு தீர்மானம் எடுக்கப்படவில்லை.

குழந்தைகளுக்கு வரும் கொரோனா வைரஸ் மிகவும் லேசாகவும், அறிகுறிகளை வெளிக்காட்டாததாகவுமே இருக்கிறது. இதற்கு நேர்மாறாக, வயதானவர்கள் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்படுவதில் முன்னுரிமை கொடுக்கப்பட்டு வருகிறது.

(18ம் பக்கம் பார்க்க)

முஸ்லிம் அரசியலும் தமிழ் அரசியல்வாதிகளும்...!

வி.அருணாசலம்

> **20ஆவது திருத்தத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் பலப்படுத்துவதற்காக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்மர் அரசுக்க ஆதரவளித்து அதை நிறைவேற்றச் செய்தனர். இது தமிழ் அரசியல்வாதிகளுக்கு முஸ்லிம்கள் விட்ட சவால்**

முஸ்லிம்களுக்கெனத் தனியான கட்சி ஒன்றை எம்.எச்.எம்.அஷ்ரப் தொடக்க விருந்தபோது அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அவரைச் சந்தித்து, நீங்கள் புதிதாக ஒரு கட்சியைத் தொடக்கவேண்டிய அவசியம் இல்லை. இணைந்த வடக்குக் கிழக்கில் தமிழ்-முஸ்லிம்கள் என்ற அடையாளத்துடன் சுதந்திரமாக வாழ்வதற்கு நாங்கள் உத்தரவாதம் தருகிறோம்-என்று கூறினர்.

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு முஸ்லிம்களுக்குத் தனியான ஒரு கட்சி அவசியம் அதை தொடங்கியே ஆக வேண்டும். பின்னர் சமரசம் செய்து கொள்ளலாம் என்பதாக இதற்குப் பதிலளித்தார் அஷ்ரப்.

அமிர்தலிங்கம் குழுவினரை வழியனுப்பி வைத்த கையோடு 1981ஆம் ஆண்டில் தனியான கட்சி ஒன்றையும் தொடங்கினார். அது வரை அஷ்ரப் தமிழ் அரசுக் கட்சியிலேயே இருந்தார். அவர் புதிதாக ஒரு கட்சியை அமைத்தது என்பது கிழக்கில் தமிழ் அரசுக் கட்சிக்கிருந்த மக்கள் ஆதரவுத் தளம் உடைக்கப் பட்டு அங்கு முஸ்லிம் அரசியல் திசை திரும்பிய சம்பவமாகும்.

இதற்கு முன்னுதாரணமாக இருந்தவர் மேற்குப் பாகிஸ்தானை இந்தியாவில் இருந்து பிரித்தெடுத்த முகமது அலி ஜின்னா.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தால் மாற்றம்

முஸ்லிம்கள் இலங்கையில் தனிச்சைப்படுவதற்கு 1976ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானமே காரணமாக அமைந்தது. இந்தத் தீர்மானத்தைத் தமிழ் அரசுக் கட்சி எடுத்தபோது "இந்த விடயத்தில் நான் உங்களுடன் ஒத்துப்போனால் எனது மக்களான மலையகத் தமிழரை இல்லாதொழிக்கும் செயலாகிவிடும்'' என்று கூறி மலையகத்தின் முன்னணித் தலைவரான சௌமியமூர்த்தி தொண்டமான் விலகிக் கொண்டார்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்பது வடக்குக் கிழக்குத் தமிழருக்குப் பலம் சேர்க்கக்கூடிய இரண்டு சிறுபான்மை இனங்களைச் சிங்களத் தேசியத்தின்பால் சாய வைத்தது. தந்தை செல்வா, அமிர்தலிங்கம் போன்றவர்களின் தீர்க்க தரிசனமற்ற முடிவாகவே இதைக் கொள்ளமுடியும். 2000ஆம் ஆண்டில் அஷ்ரப் சாவடைந்தபோதிலும் அவரால் உருவாக்கப்பட்ட முஸ்லிம்களுக்கான அரசியல் பாரம்பரியம் இன்றுவரை தொடர்கிறது.

பேரம் பேசும் அரசியல்

அஷ்ரப் தனிக்கட்சி ஒன்றைத் தொடக்கித் தனக்குக் கிடைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலத்தை வைத்துப் பேரம்பேசும் அரசியலைத் தொடக்கினார். ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளின் ஆட்சிக்காலத்திலும் முக்கிய அமைச்சுப் பதவிகளைப் பெற்றார்.

தான் விரும்பிய துறைமுக மற்றும் கப்பல்துறை அமைச்சைக் கைப்பற்றியதால் வேலை வாய்ப்பு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தில் முஸ்லிம்களைப் புகுத்தினார் - பலப்படுத்தினார். முஸ்லிம்கள் தமிழரைச் சார்ந்து நின்று சிங்களவரைப் பகைத்துக் கொள்ளாது, சிங்களவரைச் சார்ந்து வாழ்வதை நடைமுறை அரசியலாக்கினார்.

சட்டத்தரணியான அஷ்ரப் பல முஸ்லிம் சட்டத்தரணிகளை அரசியலுக்குக் கொண்டுவந்து (ரவூப் ஹக்கீம் போன்றவர்களை) முஸ்லிம்களின் அரசியல் தளத்தைப் பலப்படுத்தினார். இதற்கெல்லாம் மாறாகத் தமிழ்த் தலைவர்களோ தமது மக்களைப் பலப்படுத்தாது தம்மைப் பலப்படுத்திக் கொண்டார்கள்.

ரிசாத் பதியுதீனின் அரசியல்

1990ஆம் ஆண்டில் வடக்கிலிருந்து புலிகளால் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபோது வெளியேறிய அவர்கள் புத்தளத்தை மையப்படுத்திக் குடியேறினர். இதில் ரிசாத் பதியுதீனும் ஒருவர். அதன் பின்னர் மொரட்டுவப் பல்கலையில் அவர் கல்வி கற்றபோது ஒரு முக்கிய முஸ்லிம் அரசியல்வாதியின்

(08ம் பக்கம் பார்க்க)

நடிகை ஆண்ட்ரியா விடுக்கும் சவால்!

தாவர வளர்ப்பு குறித்த புதிய சவாலை நடிகை ஆண்ட்ரியா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இந்தியாவில் கடந்த ஆண்டு கொரோனா பொது முடக்கத்தின் போது தமிழ் நடிகை, நடிகர்கள் பலரும் சமையல், இசை, ஓவியம் உள்ளிட்ட பல்வேறு பொழுதுபோக்குகளில் ஈடுபட்டு வந்தனர். அதனைப் புகைப்படம் மற்றும் வீடியோக்களாகவும் தங்கள் சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டனர்.

அந்த வகையில் பிரபல நடிகையும், பாடகியுமான ஆண்ட்ரியா தன் வீட்டு மாடியில் தாவரங்கள் வளர்ப்பது குறித்து பதிவிட்டு வந்தார்.

இந்த ஆண்டும் ஊரடங்கு நேரத்தில் தாவரங்கள் வளர்ப்பதாக தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆண்ட்ரியா பகிர்ந்துள்ளார். இது குறித்த தனது பதிவில் அவர் கூறியிருப்பதாவது:

கடந்த ஆண்டு பொதுமுடக்கத்திலிருந்தே நான் என்னுடைய வீட்டுக்கு உள்ளேயும், வீட்டை சுற்றியும் பசுமையான தாவரங்களை வளர்த்து வருகிறேன். எவ்வளவு சிறிய தாவரமாக இருந்தாலும் சரி, நாம் வாழும் இடத்தை உயிர்ப்புடன் வைக்க இது ஒரு எளிய வழி.

இந்த தாவரங்கள் என்னுடைய வீட்டுக்கு உள்ளேயும், வீட்டை சுற்றியும் நேர்மறை ஒளியை உருவாக்குகின்றன என்று உறுதியாக நம்புகிறேன். அதுதான் இந்த இருண்ட காலகட்டத்தில் மிகவும் தேவையான ஒன்று. கடந்த ஊரடங்கின்போது எலுமிச்சை விதைகளை வைத்தேன், தற்போது அது ஒரு அழகான எலுமிச்சை செடியாக வளர்ந்துள்ளது.

இதை நாம் அனைவரும் ஒரு சவாலாக ஏற்றுக் கொள்ளலாம். இந்த வார இறுதியில் உங்கள் வீட்டில் ஒரு பசுமை முனையை உருவாக்க முயற்சி செய்யுங்கள்.



துறைமுக நகரும் நாங்களும்...!

நியூட்டன்

கொழும்புத் துறைமுகத்தில் அமைக்கப்படுகின்ற புதிய நகரமானது இலங்கையின் புவியியல் அமைப்புக்கு வேறாகக் கடலுக்குள் மண் நிரப்பிச் செயற்கையாக உருவாக்கப்படுகின்ற நிலப்பரப்பு. இது இலங்கைத் தீவுடன் ஒட்டிக்கொண்டிருந்தாலும் ஒரு நாட்டில் வெளிநாட்டுத் தூதரகம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கும் நிலம் அந்த நாட்டுக்கே சொந்தமாவதைப் போன்றதாக இருக்கிறது. உதாரணமாக இலங்கையில் அமெரிக்கத் தூதரகம் அமைந்துள்ள நிலம் அமெரிக்காவுக்குச் சொந்தமானதைப்போல (அங்கு பணியாற்றும் படை, காவல், புலனாய்வு அதிகாரிகளும் அமெரிக்க நாட்டவர்களாகவே இருப்பர்). அதேவேளை அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரக நிலம் இலங்கைக்குச் சொந்தமானதாக இருக்கும். இதேபோன்றதொரு முறையில்தான் கொழும்புத் துறைமுக நகர விடயமும் இருக்கிறது. இதுவிடயத்தில் தமிழ் அரசியல்வாதிகள் வெளியிடுகின்ற கருத்துகள் துறைமுக நகர் குறித்த புரிந்துணர்வில்லாமல் அவர்கள் இருப்பதைக் காட்டுகின்றன.

துறைமுக நகரம் அமைந்துள்ள நிலம் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமானதல்ல என்பதும், இதற்கு முன்னர் இப்படியொரு நிலைமை இருக்கவில்லை என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியவை. இன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளைப் பட்டியலிட்டால்கூட இந்தத் துறைமுக விவகாரம் அந்தப் பட்டியலில் இறுதியில் இருப்பதற்காவது வாய்ப்பிருக்கிறதோ என்பது சந்தேகமானது.

தமிழ் அரசியல்வாதிகளின் கருத்து

இந்த அரசு தமிழர்களைப் பகைத்துக்கொண்டு அதிகம் வெளிநாட்டுக் கடன்களைப் பெறுகிறது. தமிழர்களுடன் இணைந்து செயற்பட்டால் தமிழ் முதலீட்டாளர்கள் இதில் அதிக முதலீடுகளைச் செய்திருப்பார்கள். அதேவேளை துறைமுக நகரில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது. சிங்களம், ஆங்கிலம், சீன மொழி ஆகியனவே விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் - என்றுள்ளார் சி.வி.விக்னேஸ்வரன்.

இந்தத் துறைமுக நகரம் எழுச்சி பெற்றால் தற்போதுள்ள தமிழ் முஸ்லிம் வர்த்தகர்கள் பாதிக்கப்படுவார்கள். இப்போது அவர்களிடமிருக்கும் வியாபார முதன்மை வேறு நபர்களின் கைகளுக்கு மாறிவிட வாய்ப்புண்டு. இது சிறுபான்மை இனங்களைப் பாதிப்பதால் இதை அனுமதிக்க முடியாது - என்கிறார் சாணக்கியன்.

தமிழருக்கு வடக்குக் கிழக்கில் ஒரு நிர்வாக அலகைத் தர மறுக்கும் இந்த அரசு சீனாவுக்குத் தனியான ஒரு நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது - என்கிறார் செல்வம் அடைக் கலநாதன்.

சீனாவுக்கு அதிகாரங்களைத் தாரை வார்க்கும் அரசு 70 வருடம் போராடிய தமிழர்களுக்கு அதில் எதையும் வழங்கவில்லை - என்கிறார் தர்மலிங்கம் சித்தார்த்தன்.

மாலைதீவுக்குக் கிழக்கேயுள்ள பகுதியில் டியாகோ காசியா என்ற தீவை அமெரிக்கா தனது படைத் தளமாக ஆக்கியிருப்பதைப் போன்று சீனாவும் தனக்கு உரிமம் உடைய ஒரு பகுதியாக இந்தத் துறைமுக நகரத்தைப் பயன்படுத்திக் கண்காணிப்பு வேலைத்திட்டங்களில் ஈடுபட வாய்ப்புண்டு

இந்த நால்வரின் குற்றச்சாட்டுக்கும் வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்துக்கும் எந்தவித தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. போர் முடிந்து 12 ஆண்டுகள் கடந்தும் அங்கு வாழும் மக்களின் சூழலைச் சென்று பார்க்க முடியாத நிலையில் சம்பந்தர், விக்னேஸ்வரன் ஆகியோர் உள்ளனர். அவர்களுக்குத் தமிழ் மக்கள் எவ்வாறான நிலையில் இருக்கிறார்கள் என்று தெரியாது. இந்த நிலையில், துறைமுக நகரம் எதிர்காலத்தில் தமிழருக்கு என்ன செய்யும் என்று தான் கொழும்பில் நிற்பதை நியாயப்படுத்தி வெறும் அறிக்கை விடுகிறார் விக்னேஸ்வரன்.

வட மாகாண சபை நிர்வாகம்

2013ஆம் ஆண்டில் கிடைத்த நல்ல வாய்ப்பு வட மாகாணசபை. அதன் 5 வருட காலப்பகுதியில் எந்வொரு தமிழ் முதலீட்டாளர்களையும் முதலமைச்சர் விக்னேஸ்வரனால் கொண்டுவர முடியவில்லை. அரசு ஒதுக்கிய நிதியைக்கூடத் தனது செயற்பாடின்மை காரணமாகத் திரும்பச் செய்தவர் அவர்.

இவருக்குப் பதிலாகத் திறமையான ஒருவர் முதலமைச்சராக இருந்திருந்தால் (சமூக அக்கறையுள்ள ஒருவர்) 9 மாகாணங்களில் முதன்மை மாகாணமாக வடக்கைக் கொண்டுவந்திருக்க முடியும். அத்தோடு சாணக்கியன் கூறுவதைப்போல இந்தப் புதிய துறைமுக நகர வர்த்தக நடவடிக்கைகளில் தற்போது தமிழ் முஸ்லிம் வர்த்தகர்கள் மேற்கொள்ளும் வியாபாரம் நடவடிக்கைகள் இடம்பெற வாய்ப்பில்லை. இதில் மிக நவீனமான தொலைத் தொடர்பு, கசினோ, நவ நாகரீக உடைகள், முக அலங்காரம், விபச்சாரம்கூடச் சட்டபூர்வமாக்கப்பட்டு நடக்கவிருக்கிறது (சீன அரசால் துபாயில் அமைக்கப்பட்டுள்ள நவீன நகரத்தை ஒத்ததே இது).

தமிழ் மொழிப் புறக்கணிப்பு

பண்டா - செல்வா ஒப்பந்தம் இடம்பெற்ற பின்னர் 1958 தை முதலாம் திகதி வாகனத் தகடுகளில் இருந்த சிங்களச் சிறி எழுத்தை நீக்கி "சிறி" என இரண்டு தமிழ் எழுத்துகளில் எழுதாது "ஸ்ரீ" எனச் சமஸ்கிருத உச்சரிப்புக் குறியீட்டு எழுத்தைப் பயன்படுத்தினர். 1972ஆம் ஆண்டில் இலங்கை குடியரசாக்கப்பட்டபோது வடக்குக் கிழக்கு அரச திணைக்கள விளம்பரப் பலகைகளில் இருந்த சிங்கள எழுத்துகளுக்கு கழிவு ஒயில், சாணம், தார் என்பவற்றைப் பூசி எதிர்ப்புத் தெரிவித்தது தமிழ் அரசுக் கட்சி.

அரபு நாடுகளின் நிதிப் பங்களிப்புடன் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளின்போது கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்ட பல விளம்பரப் பலகைகளில் அரபு மொழிக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டது. ஆனால் தமிழர்கள் அதுகுறித்து எதிர்ப்பு எதுவும் வெளியிடவில்லை. இது தமிழர் தாயகத்தில் இருப்பது. ஆனால், வடக்குக் கிழக்குடனோ தமிழர் தாயகத்துடனோ எந்த வகையிலும் தொடர்புபடாத துறைமுக நகரில் தமிழ் எழுத்து இல்லை என வாதிடுகின்றனர். அங்கு தமிழ் எழுத்துகளைப் போட வேண்டிய அவசர தேவை இலங்கை அரசிடம் இல்லை.

சீனாவுக்கு முதல் வெற்றி

இந்தத் துறைமுக நகரம்; 2014இல் அப்போதைய தலைவர் மகிந்த ராஜபக்சவால் தொடக்கி வைக்கப்பட்டது. நல்லாட்சி அரசின் காலத்தில் இதன் பணிகள் சற்றுப் பின்னடைவாக இருந்த போதிலும் தற்போது சீனா நினைத்தவாறு நாடாளுமன்றில் பெரும்பான்மையுடன் அனுமதி பெறப்பட்டுள்ளது. மாலைதீவுக்குக் கிழக்கேயுள்ள பகுதியில் டியாகோ காசியா என்ற தீவை அமெரிக்கா தனது படைத் தளமாக ஆக்கியிருப்பதைப்போன்று சீனாவும் தனக்கு உரிமம் உடைய ஒரு பகுதியாக இந்தத் துறைமுக நகரத்தைப் பயன்படுத்திக் (இராணுவத்தளம் அல்ல) கண்காணிப்பு வேலைத்திட்டங்களில் ஈடுபட வாய்ப்புண்டு.

சீனாவின் பட்டுப் பாதை வர்த்தகத் தேவைக்கு இலங்கையில் நடந்த போர் தடையாக இருந்தது. இதனாலேயே இறுதிப்போரின்போது சீன அரசு மகிந்த அரசுக்கு அதிக ஆயுதங்களை வழங்கிப் போரை முடிவுக்குக் கொண்டுவந்தது. ஒரு நாட்டில் பெரியளவு முதலீடுகளைச் செய்பவர்கள் அந்த நாட்டில் குழப்பமற்ற ஸ்திரமான அரசியல் சூழல் இருப்பதையும் வெளிநாட்டு முதலீடுகளுக்கான இறுக்கமான சட்டங்கள் இல்லாதிருப்பதையும் எதிர்பார்க்கின்றனர். அதுவே சீனாவின் எதிர்பார்ப் பும்.

அதிக வரியைச் சிங்கள மக்கள் செலுத்துகின்றனர். இலங்கையின் பெரும்பான்மைச் சிங்களவரின் தொகை 80 வீதத்துக்கு மேல் இருப்பதால் அவர்களே தமக்குத் தேவையான (17ம் பக்.பார்க்க)

தலை விறைக்கிற மாதிரிக் கிடக்குதோ?



கதிரேசன் காத்தவராயன்

"வெளியாலை ஒருக்காப் போகவர முடியாதது மண்டை வெடிக்கிறமாதிரியாயல்லே கிடக்குது" எண்டு புலம்ப மனிசியும் மேளும் "போனா நிலைமையைப் பாக்க மண்டை விறைக்கும்... போகாட்டி வெடிக்குமோ?" எண்டு சிரிக்குதுகள் பாருங்கோ!

"றோட்டிலை சனந் திரியுதுகள்தானே" எண்டதுக்கு "அதுகள் வேலையாய்ப் போகுதுகள்" எண்டு சொல்லுதுகள். "அப்ப... சண் முகத்தின்ரை பெடி மண்வெட்டியோடை என்ன தோட்டங்கொத்தவே போகுது? உங்கை வம்பளக்கவல்லே போகுது... பொலிஸ் ஆமியள் கேட்டா வேலையெண்டு கதைவிட்டுக்கொண்டு... உப்பிடிப் பாருங்கோ கனபேர் நிலைமையை விளங்காமலுக்கு திரியினம்"

"சனிக்கிழமை, மீனைக்கீனை வாங்கலாம், உதிலை காக்கைதீவுக்கு..." எண்டு தொடங்கினதை முடிக்கயில்லை மனிசி மேள் கூட்டணி கொதிச்சு வெடிக்கத் தொடங்கி பொரிஞ்சு தள்ளத் தொடங்கிவிட்டுதுகள். நல்ல காலத்துக்கு கனகன் கோலெடுத்து என்னை அதுக்குள்ளாலை விடுவிச்சிட்டான்.

"என்ன கதிரேசண்ணை நாட்டு நடப்பு எப்பிடிப்போகுது? நல்லா இறுகும்போலை கிடக்குது?" எண்டான். நானிருந்த எரிச்சலிலை "இனி உடையத்தான் இடங்கிடக்கு" எண்டன். அது பாவத்துக்கு விளங்கேல்லை. "என்னண்ணை சொல்லுறியள்?" எண்டு திரும்பிக்கேட்டுது. "அட கனகு இறுகுகிறதுக்கு என்ன கிடக்கு? நல்லாய் இறுகிப்போச்சுது... எனி உடையத்தான் இடங்கிடக்கு" எண்டு சிரிச்சன். கனகனும் சிரிச்சான்.

"அது சரிதானண்ணை, நாட்டு நிலையிலை ஒருத்தரும் கவனமாய் இல்லை. போக்குவரத்துக் தடை எண்டுறது சிரிப்பாயல்லே கிடக்குது. நானிண்டைக்கு காக்கைதீவுக்கு மீன் பாப்பமெண்டு போனால் திகைச் சுப்போனன். அவ்வளவு சனம். மீன் வாங்க இடிபாடுதான்" எண்டுது கனகு.

"உண்ணாணை நீயுமொரு மூளைகெட்ட பிறவிதானப்பா... நாடு கிடக்கிற கிடையுக்கை மீன்வாங்கப் போயிருக்கிறாய்... சனங்கூடுற இடங்களுக்குள்ள ஏன் போறாய்?" எண்டு பேசிப்போட்டு வேறைகதையளைக் கதைச்சிட்டு வைச்சிட்டன். அதிலை செய்தியளைச் சொல்லுற சனலொண்டை மருமோன் பாத்துக்கொண்டிருந்தார். நானும் பாத்தன்.

அதிலை சுகாதாரத்துறைப் பெரியவர் வானிலை அறிக்கை மழைக் கணக்கு சொல்லுற மாதிரி முதல்நாளான் கொரோனாக் கணக்கை வலு நிதானமாச் சொல்லிக்கொண்டிருந்தார். அதுக்குள்ளை ஒண்டு காக்கைதீவு மீன் சந்தையிலை செய்த எழுமாத்துப் பரிசோதினையிலை நாலு பேருக்கு நோயிருந்தது எண்டதைக் கேக்க நம்பமுடியேல்லை.

கொரோனா கண்டு பிடிச்சது உண்மையோ? கனகன் மீன் வாங்கினது உண்மையோ? சனங்கூட்டமாய் நிண்டது எண்டு கனகன் சொன்னது என்னத்தை? குழப்பமாய்க் கிடந்துது.

கனகனுக்கு கோலெடுத்தன் உடனையே எடுத்துப் போட்டான். வீட்டிலை அமளியாய் ரண்டுமூண்டு குரல் ஆரையோ பேசிற மாதிரிக் கேட்டுக் கொண்டிருந்துது... கனகன்தான் குரலிலை ஒரு பயத்தோடை "அண்ணை நீங்கள் சொன்னமாதிரித்தான் மூளைகெட்ட முட்டாள் வேலையைப் பாத்திட்டனண்ணை... இஞ்ச வீட்டிலை மனிசியும் பிள்ளையளும் நெருப்பெடுக்குதுகள்... சந்தையிலை கொரோனாவாம் எண்டு செய்தியிலை சொல்லுறாங்கள்? பயமாய்க் கிடக்குது" எண்டு பதறியடிச்சுது.

அப்ப எல்லாமே உண்மைதான்... முதலநாள் கோரோனா கண்டுபிடிச் சவைக்கு சந்தையை மூட நேரம் வரயில்லையோ அல்லது மூளை வேலைசெய்யேல்லையோ? எண்ட புதுக்குழப்பம் வந்திட்டுது. "கனகு யோசிச்சுப் பயப்பிடாதயப்பா... உதுக்குள்ளை ஏதோ குழப்பங் கிடக்குது போலைக்கிடக்குது... சந்தையை மூடுறதுக்கு ஒண்டும் செய்யாதபடியால்...." எண்டு நான் முடிக்கமுன்னமே கனகு "அண்ணை அவங்கள் கண்டு பிடிக்கிறதுகளை அறிவிக்கிறது பிந்தித்தானாம். அதுக்குப் பிறகுதானாம் அந்த இடத்தைப்பற்றி முடிவெடுக்கிறதாம்..." எண்டுது.

அதுகும் உண்மைதானே. கண்டு பிடிக்கிறது ஒராள். தீர்மானிக்கிறது இன்னொராள். அதை நடைமுறைப்படுத்துறது மற்றொராள். உடனடியாச் செய்யிற வேலையள் இப்பிடியெண்டால் தொத்துவருத்தம் பரவாமலுக்கு உவையளைப்போலை பாத்துக்கொண்டிருக்குமே? கோயில்லையும் கொரோனா? சந்தையிலையும் கொரோனா.. "கனகு பயப்பிடாதை எல்லாம் வழமைதான்" எண்டுபோட்டு வைச்சிட்டன்.

முஸ்லிம் அரசியலும்...

உதவியாளராகச் செயற்பட்டார். அந்த அரசியல்வாதி புத்தளத்தில் தற்காலிகமாகத் தங்கியிருந்த முஸ்லிம் மக்களுக்கு வழங்கிய உதவிப் பொருள்களைப் பகிர்ந்தளிக்கும் பணியில் ஈடுபட்டார் ரிசாத். அதனைப் பயன்படுத்தி அந்த மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை உயர்த்திக்கொண்டார்.

பிற்காலத்தில் அந்த மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்றார். "முஸ்லிம்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டாலும் அவர்கள் அயல் நாடான இந்தியாவுக்குச் செல்லவில்லை. சிங்கள மக்களை நம்பி வந்தோம்" என்று நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக உரையாற்றினார் ரிசாத்.

முஸ்லிம்கள் காணிகளைப் பெற்றமை

முஸ்லிம் ஒருவர் சொத்து ஒன்றை வாங்கிவிட்டால் எதிர்காலத்தில் அதை முஸ்லிம் அல்லாத ஒருவருக்கு விற்காமை என்பதைப் பேணுவது வழமை. தமது பெறுமதியான சொத்து ஒன்றை இன்னொரு முஸ்லிமுக்கு இலவசமாகக் கொடுப்பதை அல்லாவுக்குச் செய்யும் ஒரு புனிதக் கடமையாக நம்புகின்றனர்.

வடக்கிலிருந்து அகதியாகச் சென்ற முஸ்லிம்கள் அன்றைய அரச தலைவர் பிரேமதாசவின் அனுசரனையுடன் (வடக்குக் கிழக்கில் தமிழருக்கு எதிராக முஸ்லிம்களைக் கட்டி வளர்த்ததில் பிரேமதாச மட்டுமல்லாது ஏனைய சிங்களத் தலைவர்களும் அக்கறை செலுத்தினார்கள்) புத்தளம், அனுராதபுரம் பகுதிகளில் காணிகளைத் தம்வசப்படுத்தினர்.

இந்த அரசியல் நகர்வுக்கும் அடித்தளம் இட்டுக் கொடுத்தவர் அஷ்ரப்தான். அம்பாறையில் சீதவாபி புத்தகோவிலை அண்மித்த பகுதிகளில் பல முஸ்லிம் குடியேற்றங்களையும் உருவாக்கினார்.

முஸ்லிம் மக்கள் எத்தகைய வசதிகளற்ற பகுதிகளிலும் குடியேறி அங்கு நிலைபெற்று விடுவர். பல தொழில் முயற்சிகளிலும் வெட்க, துக்கம் பாராது இறங்கிச் செயற்படுவர். இவை தமிழ் மக்களிடம் இருக்கின்ற பெருங் குறைகள்.

ரம்பாவ எனுமிடத்துக்கு அருகில் (மதவாச்சிக்கும் ரம்பாவ சந்திக்கும் இடையில்) இக்கிரிக் கொல்லாவ பகுதியில் முஸ்லிம்களைக் குடியேற்றினார் ரிசாத். வில்பத்துக் காடழிப்பு, அரச காணிகளில் முஸ்லிம்களைக் குடியேற்றுவது என மன்னாரில் மட்டும் 3ஆயிரம் ஏக்கர் காணிகளில் முஸ்லிம்கள் குடியேற்றப்பட்டனர் என்று ரிசாத் மீது குற்றச்சாட்டுகள் உள்ளன.

அதேவேளை முல்லைத்தீவு - முள்ளியவளையை அண்மித்த பகுதியிலும், கற்பூரப் புல்வெளிப் பகுதியிலும் காணிகளைக் கையகப்படுத்த அவர் எடுத்த முயற்சி மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது. இவையெல்லாம் முஸ்லிம் தலைவர்கள் தமது இனத்திற்காக தன்னத்தோடு கூடியதானாலும் ஆற்றிய பணிகள். நல்லாட்சி அரசைக்கூட தமிழ்த் தலைவர்கள் தம்மை வளப்படுத்தப் பயன்படுத்திய அதேவேளை முஸ்லிம் தலைவர்கள் தமது சமூகத்தை வளப்படுத்த பயன்படுத்திக் கொண்டனர்.

அதேவேளை மட்டக்களப்பில் ஹிஸ்புல்லா, முஸ்லிம்களுக்குக் காணிகளை வழங்கவும் முக்கிய கேந்திர மையங்களைக் கையகப்படுத்தவும் முஸ்லிம்களுக்கான ஒரு பல்கலைக்கழகத்தை அமைக்கும் முயற்சியிலும் இறங்கியிருந்தார்.

நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம், வடக்குக் கிழக்கிலுள்ள முஸ்லிம் கட்சிகளைவிடப் பெரும்பான்மைக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, சிறீ லங்கா சுதந்திரக் கட்சி, பொது மக்கள் முன்னணி ஆகியவற்றில்கூட முஸ்லிம்கள் அங்கம் வகிக்கின்றனர். இதனால், இலங்கை முழுவதுமிருந்து முஸ்லிம் பிரதிநிதிகள் நாடாளுமன்றம் செல்லும் வாய்ப்பை உருவாக்கியிருக்கின்றனர். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்புகூட நீதி அமைச்சராக அலி சப்ரி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தமிழ் அரசியல்வாதிகளுக்குச் சவால்

அரசமைப்பி 20ஆவது திருத்தத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் பலப்படுத்துவதற்காக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்மர் அரசுக்க ஆதரவளித்து அதை நிறைவேற்றச் செய்தனர். இது தமிழ் அரசியல்வாதிகளுக்கு முஸ்லிம்கள் விட்ட சவால். அவர்கள் எப்போதும் சிங்களவரைச் சார்ந்தே முடிவுகளை எடுப்பார்கள் என்பதற்கும் நல்ல எடுத்துக்காட்டு.

2012ஆம் ஆண்டில் நடந்த கிழக்கு மாகாணத் தேர்தலின்போது தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு அதிக ஆசனங்கள் கிடைத்தபோதிலும் தமிழருக்கு இடையில் நிலவிய ஒற்றுமையின்மை காரணமாக முஸ்லிம் முதலமைச்சர் ஒருவர் அங்கு பதவியேற்கும் நிலை ஏற்பட்டது. அஷ்ரப் தொடக்கி வைத்த இந்தப் புதிய அரசியல் பாரம்பரியம் முஸ்லிம் மக்களை அரசியல் ரீதியாக அதிகம் பலப்படுத்தியிருக்கிறது. அதைவிட முஸ்லிம்கள் இந்த நாட்டைவிட்டு ஒருபோதும் வெளியேறாது இருப்பதாலும் இன்னும் பல காரணங்களாலும் வெகுவிரையில் இலங்கையின் இரண்டாவது பெரிய இனமாக மாறவிருக்கிறார்கள்.

எதிர்காலத்தில் தமிழர்கள் சனத்தொகை அடிப்படையில் 3ஆவது தரப்பாகவும் ஒற்றுமையின்மையின் உச்சத்தால் 3ஆம் தரப் குடிமக்களாகவும் மாறுவது தவிர்க்க முடியாத ஒன்று. இனி முஸ்லிம்களின் அரசியலைத் தமிழ் அரசியல்வாதிகளால் ஒருபோதும் கட்டுப்படுத்திவிடமுடியாது. அஷ்ரப் 1981இல் தனிக் கட்சியைத் தொடங்கிய காலத்திலேயே தமிழ்த் தலைவர்களின் அரசியல் ராஜதந்திரம் பலவீனப்பட்டுவிட்டது.

கொலம்பஸைக் காணவில்லை...?

சாய்ராம்

பெருந்தேசமான அமெரிக்காவைக் கண்டு பிடித்த கொலம்பஸைக் காணவில்லை...! அவரைத் தேடி அலைகிறார்கள்...! நம்புவது கடினமாக உள்ளதா...? ஆனால், அதுதான் உண்மை.

வரலாற்றில் மறக்கப்பட முடியாதவரும், முக்கியமானவரும் என்று கொலம்பஸைக் கொண்டாடுகிறார்கள். அமெரிக்கா என்கிற தேசத்தைக் கண்டுபிடித்த அவரைப் புகழ்கிறார்கள். ஆனால், அவர் குறித்த அடி முடி தெரியாத பல சுவாரசியங்கள் இன்றும் இருக்கின்றன.

ஐரோப்பியக் கடலோடியும், நாடுகாண் பயணியுமான அவர் கடல்வழிகளிலும் தரைவழிகளிலுமாக அலைந்து திரிந்தபோது அமெரிக்காவைக் கண்டுபிடித்தார் என்றும் அதன் பின்னர் ஐரோப்பாவிலிருந்த மக்கள் அவர் கண்டுபிடித்த அந்தப் புதிய தேசத்தில் குடியேறி, இன்றைக்கு அமெரிக்காவை மாநிலங்களாக்கி ஆண்டும் வருகின்றனர் என்பதும் வரலாறு.

கொலம்பஸ் கண்டுபிடிக்கும் வரை அமெரிக்கா தொலைந்துபோயோ அல்லது யாரும் இன்றிய தேசமாகவோ இருந்ததா என்றால் அப்படியுமில்லை. அங்கு வாழ்ந்த பூர்வீக மக்களைக் கொன்று குவித்துத்தான் ஐரோப்பாவிலிருந்து சென்ற ஆங்கிலேயர்கள் குடியேறி, அதை ஆண்டு, ஆட்சி அதிகாரம் செலுத்தி அந்தத் தேசத்தைத் தமதாக்கிக் கொண்டுள்ளனர். ஆக, ஏலவே மக்கள் வாழ்ந்த நிலத்தை அபகரித்த முதலாவது ஆங்கில மனிதன்தான் இந்தக் கொலம்பஸ் என்று எதிர்த் தரப்பினர் சொல்கின்றனர்.

அமெரிக்கா அவரால் கபளீகரம் செய்யப்பட்டதன்றிக் கண்டுபிடிக்கப்பட்டதல்ல என்பது இவர்களின் வாதம். அங்கு வாழ்ந்த செவ்விந்தியர்களை எறும்புகளைக் கொல்வதுபோல கொன்று குவித்து அந்தத் தேசத்தைக் கையகப்படுத்திக்கொண்டு அமெரிக்காவைப் புதிதாகக் கண்டு பிடித்ததுபோல பீத்திக்கொள்கிறது இந்தக் கொலம்பஸ் வழி வந்த குழு என்கிறார்கள்.

இந்தியாவில் குடியேறிய ஆரியர்கள் தாங்களே இந்தியப் பூர்வீகிகள் என்று வாதிடுவதைப்போலதான் அமெரிக்காவைப் புதிய தேசமாகக் காட்டுகிறது கொலம்பஸ் தலைமையிலான குழு என்பதும் ஒருசாராரின் கருத்து. அதற்குத்தான் ஏலவே மக்கள் வசித்த அமெரிக்காவைத் தாமே கண்டுபிடித்ததாகக் கொலம்பஸ் குழு புதுக்கதை விட்டு வரலாற்றில் பொய்யை நுழைத்துள்ளது என்கிறார்கள்.

எது எப்படியிருப்பினும் அமெரிக்காவில் குடியேறிய முதல் ஆங்கிலேயன் இந்தக் கொலம்பஸ்ஸே... இன்றைக்கு அவர் கண்டுபிடித்த அமெரிக்கா அப்படியே இருந்தாலும் அவர் இல்லை... அவர் குறித்தும் அவரது பூர்வீகம் குறித்தும் பல குழப்பங்கள் உள்ளன. கொலம்பஸ் ஐரோப்பாவின் எந்தப் பகுதிக்குரிய ஆங்கிலேயன்? அவர் ஆங்கிலேயனா? ஆங்கிலேயனல்லாதவரா? என்றுகூடக் குழப்பங்கள் உள்ளன.

அந்தக் குழப்பத்தைத் தீர்ப்பதற்குக் கொலம்பஸ்ஸின் மரபணுக்களை ஆராயவேண்டியிருக்கிறது. அந்த ஆராய்ச்சியில் பலர் இறங்கியும் விட்டார்கள். இந்த ஆராய்ச்சி முடிவு கொலம்பஸ் என்கிற மனிதன் ஏற்படுத்திச் சென்ற வரலாற்றுச் சுவடுகளையும் அவற்றிலுள்ள குழப்பங்களையும் தெளிவுபடுத்தும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். ஆனால், அதுவும் முடிவில்லாமல் நீள்கிறது.

மனித குல மீறல்கள்

அமெரிக்காவைக் கண்டடைந்த புகழுக்குரியவரான (அதுவும் போலியானதுதான்) கொலம்பசின் உருவச் சிலைகளை நிறுவி அவரைக் கொண்டாடுகிறார்கள் அவர் வழிவந்த அமெரிக்கர்கள். ஆனால், அமெரிக்கர்கள் தவிர்ந்த மனிதர்களைப் பொறுத்தவரை கொலம்பஸ் முரண்பாடுடையவர். ஐரோப்பாவின் சுரண்டல்காரன் என்று கொலம்பசைப் பூர்வீக அமெரிக்கர்களான செவ்விந்தியர்கள் சாடுகின்றனர்.

அமெரிக்காவில் குடியேறிய முதல் ஆங்கிலேயன் இந்தக் கொலம்பஸ்ஸே... இன்றைக்கு அவர் கண்டுபிடித்த அமெரிக்கா அப்படியே இருந்தாலும் அவர் இல்லை... அவர் குறித்தும் அவரது பூர்வீகம் குறித்தும் பல குழப்பங்கள் உள்ளன. கொலம்பஸ் ஐரோப்பாவின் எந்தப் பகுதிக் குரிய ஆங்கிலேயன்? அவர் ஆங்கிலேயனா? ஆங்கிலேயனல்லா தவரா? என்றுகூடக் குழப்பங்கள் உள்ளன

கண்ணீர் சிந்தும் பாடகி காரணம் என்ன...?

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல பாடகி பிரிட்னி பியர்ஸ். பாடகியாக மட்டுமன்றி விளம்பரங்கள், கேளிக்கைகள், இசை அல்பங்கள் எனப் பல்பரிமாணம் பெற்றவர் அவர்.

சிறுவயதிலேயே பொது நிகழ்ச்சிகளில் பாடத் தொடங்கிப் பின்னர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் விளம்பரங்களில் நடித்து 16 வயதில் தொழில்முறைப் பாடகரானவர். 1999ஆம் ஆண்டில் வெளியாகிய அவருடைய முதல் இசைத்தொகுப்பான "பேபி ஒன் மோர் ரைம்" சக்கைப்போடு போட்டு பெரு வரவேற்பைப் பெற்றது.

இதுவரை ஏழிற்கும் மேற்பட்ட இசைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். இவரது இசைத் தொகுப்புகள் 100 மில்லியன் பிரதிகளுக்கு மேல் விற்றுள்ளன. இவ்வளவு புகழுக்குரிய அவர் அண்மையில் கண்ணீர் வடித்துள்ளதைப் பன்னாட்டு ஊடகங்கள் பலவும் படம்பிடித்துச் செய்தியாக்கின.

அதற்குக் காரணம் என்னவென்று தேடியபோது, அவரது வாழ்க்கையைப் பேசும் விதத்தில் அண்மையில் எடுக்கப்பட்ட படத்தைப் பார்த்துத்தான் அவர் அழுதுள்ளார் என்று தெரியவந்தது. வாழ்க்கையில் அவர் பட்ட கஸ்ரங்கள், தாண்டிய தடைகள், படைத்த சாதனைகள், இன்றைய நிலை என நீளும் "ஹப்ரேமிங் பிரிட்னி ஸ்பியர்ஸ்" என்கிற அந்த ஆவணப் படத்தைப் பார்த்து அவர் இரண்டு வாரங்களாக அழுது தீர்த்திருக்கிறார்.

படத்தில் அவருடைய வாழ்க்கையில் அவரின் வளர்ச்சிப் பாதையையும், அவருக்கு ஏற்பட்ட தடைகள், அவரின் தந்தையின் பழமைவாத விவாதங்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பலரால் நான் தவறாக நடத்தப்பட்டேன், அவமதிக்கப்பட்டேன், ஊடகங்களால் சங்கடப்படுத்தப்பட்டேன். ஆனாலும், நான் இன்றுவரை இருக்கிறேன் என்று பெருமைப்பட்டுள்ளார் 39 வயதுடைய பிரிட்னி ஸ்பியர்ஸ்.

பழந்தண்ணி...!



இந்த வாரம் சமையல் பகுதியில் பழமை மிக்க ஓர் உணவு குறித்துப் பார்க்கப்போகிறோம். ''பழந்தண்ணி'' என்கிற தலைப்பைப் பார்த்ததும் பழங்களால் ஆக்கப்படுகின்ற பானம் என்கிற எண்ணம் உங்களுக்குள் ஏற்பட்டிருந்தால் அது தவறானது. பழந் தண்ணி என்பது பழைய தண்ணீர் ஆகாரம் என்று பொருள் கொள்ளத்தக்கது. பழையதாய்ப் போனாலும் அந்த ஆகாரம் ஆரோக்கியமானது. ஊட்டங்கள் நிறைந்தது. அதன் முக்கியம் கருதி எமது முன்னோர்கள் அதை அன்றாடம் அருந்தி வந்தார்கள். அதனாலும் அதுபோன்ற பலவுணவுகளாலும், உணவுப் பழக்கங்களாலும்தான் ஆயுளில் கொடி நாட்டினார்கள் - நோய் நெடியின்றி வாழ்ந்தார்கள்.

முதல் நாள் மதியம் சமைக்கின்ற சோறு எஞ்சிப்போகும் பட்சத்தில் அதை வீணடிக்காமலும், அதிகாலை வேலைகள் காரணமான அவசர உணவாகவும் பழைய சோற்றைப் பிசைந்து கரைத்த இந்த நீர் ஆகாரம் முன்னோர்களால் அதிகம் உள்வாங்கப்பட்டது. ஆனால், இன்றையவர்கள் மத்தியில் இதன் பாவனை அருகி வருகிறது.

பழந்தண்ணி அல்லது பழஞ்சோத்துத் தண்ணி என்றழைக்கப்படுகின்ற இந்த நீர் ஆகாரத்துக்குத் தேவையான பொருள்கள் என்ன? என்கிற பட்டியல் தேவையற்றது. முதல் நாள் சமைத்த எஞ்சிப்போன சோற்றையும், சமையலறைக்குள் தினமும் காணப்படுகின்ற ''வெங்காயப் பெட்டிக்குள்'' இருக்கின்ற வெங்காயம், பச்சை மிளகாய், உப்பு ஆகியனவே இதைத் தயாரிக்கப் போதுமானவை. அத்தோடு தேங்காய்ப்பாலும் தேவை. இவையிருந்தால் அவசர உணவான இதைத் தயாரிக்கத் தடைகளிராது.

சுவையாகத் தயாரிப்பது எப்படி?

மதியம் சமைத்துண்டு எஞ்சிப்போகின்ற சோற்றுக்குள் அதற்கு ஏற்றளவு நீரை ஊற்றி மூடிவைக்க வேண்டும். மறுநாட் காலையில் அந்தச் சோற்றுப் பானைக் குள்ளிருக்கின்ற பழைய சோற்றுடனான நீர்க் கலவைக்குள் சின்ன வெங்காயங்கள் சிலதையும், ஒன்றிரண்டு பச்சை மிளகாய்களையும் குறுக்காக நறுக்கிப்போட்டுச் சிறிதளவு உப்பிட்டுத் தேங்காய்ப்பாலைக் கலந்து கலக்கிக் கைகளால் பிசைந்தால் பழந்தண்ணி தயாராகிவிடும். சிலர் தயிர், மோர் ஊற்றிப் பிசைந்து ஊறுகாய் தொட் டுக்கொண்டும் குடிக்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

பெரும்பாலும் காலையுணவாகவே இந்தப் பழந்தண்ணியை அருந்துவது வழமை. பழஞ்சோறு என்கிற பழைய சோற்றை உண்பதால் குடல் வறட்சியை நீக்கி உடல் குளிர்ச்சி பெறுவதைப் போலதான் இந்தப் பழந்தண்ணியின் பயனும் இருக்கிறது. பலமும் இருக்கிறது. கைக்குத்தல் அரிசிச் சோறு அல்லது தீட்டல் எனப்படுகிற சிவப்பு அரிசிச் சோறே இதற்கு உகந்ததும் சிறந்ததும். இந்தப் பழைய உணவில் எவ்வளவோ நன்மைகளும், ஊட்டங்களும் இருந்தும் பாணையும், பணிஸையுமே அதிகாலை யில் நாடும் தலைமுறை உருவாகியிருப்பது கவலைக்குரியதில்லையா...?

கொலம்பஸைக்...

செவ்விந்தியர்களுக்குக் கொலம் பஸ் செய்த கொடுமைகளைப் பற்றி பார்த்த லோம் டி லாஸ் காசாஸ் என் கிற சமயத் தலைவர் எழுதியிருக் கிறார். அவரது ஏகாதிபத்தியம், அக்கி ரமங்கள், அடிமைப்படுத்தல், இனப் படுகொலை, பண்பாட்டுச் சிதைப்புகள் ஆகியன குறித்தும் பல குறிப்புகளுள்ளன. அரசுக்கு ஆதரவ ளித்த வாறும், ஆளுநராக இருந்தும் இனப்படுகொலைகளை நிகழ்த்தினார் என்ற குற்றச்சாட்டுகள் கொலம்பஸ் மீது உண்டு.

யாரிந்தக் கொலம்பஸ்?

1492ஆம் ஆண்டில் அத்திலாந்திக் கடலைக் கடந்து ஸ்பெய்ன் நாட்டுக் கொடியுடன் அமெரிக்காவைச் சென் றடைந்த கடலோடிதான் கொலம்பஸ். இவர் இத்தாலியின் துறைமுக நகரான ஜெனோவாவில் 1451ஆம் ஆண்டில் பிறந்தவர் என்கிறார்கள் வரலாற்றாய்வாளர்கள்.

வணிகக் கடற்பயணியாகக் கப்பல்களில் திரிந்தவர். அந்தக் காலத்தில் தீவுகள், நாடுகள் என ஒன்றுவிடாமல் முழு உலகையுமே சுற்றி வந்தார். ஆனாலும், கொலம் பசின் தாய் நாடு பற்றிக் குழப்பங்கள் நிலவவே செய்கின்றன. ஸ்பானிய மொழியில் தேர்ச்சி பெற்ற அவர், ஏதோ ஒரு மர்மத்தைக் காப்பதற்கா கவே, தன் தாய் நாடு பற்றிய விவ ரங்களை இரகசியமாக வைத்திருந்தார் என்றும் சொல்கிறார்கள்.

கிறிஸ்தவ சமயத்துக்கு மாறிய ஸ்பெய்னைச் சேர்ந்த யூதர் என்று அவரைக் கருதுவோரும் உண்டு. வேறு சிலர், அவர் ஜெனொவா ஆட் சியின் கீழ் இருந்த, தேச எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பெயர் போன கோர்சிகா தீவைச் சேர்ந்தவர் என்கி றார்கள். அவர் கட்டலோனியா, கிரேக்கம், போர்த்துக்கல்லைச் சேர்ந்தவர் என்று கூறுபவர்களும் உண்டு. இதனால் கொலம்பஸ் பற்றிய பூர்வீகம் இன்னமும் சரிவர அறியப் படாமல்தான் இருக்கிறது. இவ்வாறி ருக்க, மே 20, 1506ஆம் ஆண்டு வைகாசி மாதம் 20ஆம் திகதியன்று அவர் இறந்தார். இறந்த பின்னர் ஏற்பட்ட குழப்பத்தால் அடக்கம் செய்யப்பட்ட அவருடை உடல் குறித்தும் அறியப்படாத பல மர் மங்கள் உருவாகின.

கொலம்பஸின் உடல் எங்கே?

54ஆவது வயதின்போது ஸ்பெய்னிலுள்ள வல்லாடோலிட் எனுமிடத்தில் இறந்த கொலம்பசின் உடல் வல்லாடோலிடிலேயே நல்ல டக்கம் செய்யப்பட்டது. பின்னர் தெற்கு ஸ்பெய்னின் ஆளுநராக இருந்த கொலம்பசின் மகன் டியாகோவின் உறுதிமொழிக்கேற்ப செவீயாவின் லா கார்துஜாவிலுள்ள ஒரு தேவாலயத்திற்குக் கொலம்பசின் உடல் மாற்றப்பட்டது. 1542ஆம் ஆண்டில் அது டொமினிக்கன் குடியரசுக்கு மாற்றப்பட்டது. 1795 ஆம் ஆண்டில், தெற்கு ஸ்பெய்னைப் பிரான்ஸ் கையகப்படுத்தியபோது அந்தச் சடலம் கூபாவின் அவானா வுக்கு மாற்றப்பட்டது. 1898ஆம் ஆண்டில் கூபா விடுதலை பெற்றபோது மீண்டும் அந்தச் சடலம் ஸ்பெய்னுக்குக் கொண்டு செல்லப் பட்டு அங்குள்ள செவீயா என்கிற பெருங்கோயிலில் நிர்மாணிக்கப்பட்ட பீடத்தில் வைக்கப்பட்டது.

இவ்வாறாகக் கடலோடியாக அலைந்து திரிந்ததைப்போலவே கொலம்பசின் சடலமும் நாடு நாடாக அலைச்சல்பட்டது. ஒரு கட்டத்தில் 1877ஆம் ஆண்டில் சான்டோ டொமிங்கோவில் 'டான் கிறித்தோபர் கொலம்பசு' என்று குறியிடப்பட்ட ஒரு சவப் பெட்டி கிடைத்தது. அதனுள்ளே எலும்புத் துண்டுகள் சில இருந்தன. இதனால் ஸ்பெய்னில் வைத்துப் பேணப்படுகின்ற சடலம் கொலம்பசின் உடை யது தானா? என்கிற குழப் பம் எழுந்தது. அது நீடித்தது.

அதை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் 2003ஆம் ஆண்டில் ஸ்பெய்னில் இருந்த சடலத்திலிருந்து டி. என். ஏ. கூறுகள் பெறப்பட்டுக் கொலம்பசின் தம்பி, மகன் ஆகியோரின் டி. என். ஏ. கூறுகளுடன் ஒப்பிடப் பட்டது. கொலம்பசின் வயதுக்கும் உடற்கட்டுக்கும் ஏற்றதாக இந்த எலும்புகள் இல்லை, அதிலி ருந்து டி.என். ஏ கிடைப்பதும் கடின மாக இருக்கிறது என்று தெரிவித்து அதிலிருந்து பெற்ற இழைமணிகளின் டி ஒக்சி-ரைபோநியூக்லியிக் காடியின் சிறு கூறுகளைக் கொண்டே ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். முடிவில் கொலம்பசின் அந்தச் சடலமும் சகோதரர்களின் சடலங்களும் பொருந்திப்போவது உறுதியானது. இதனால் செவீயாவிலுள்ள எச்சங்கள் கொலம்பசினுடையதே எனப்பட்டது. ஆனால், சான்ட்டோ டொமிங்கோவில் கிடைத்த சடலத்தை ஆய்வு செய்ய அனுமதிக்கவில்லை. இதனால் அது குறித்த ஆய்வுகள் எவையும் நடக்கவில்லை.

அண்மைய ஆய்வு

ஸ்பெய்னிலுள்ள எச்சத்தின் ஆய்வு முடிவுகள் கொலம்பசினுடைய சகோதரர்களின் எச்சங்களுடன் ஒத்துப்போகின்றன என்று தெரிவிக்கப்பட்டாலும் டி.என்.ஏ மூலமான ஆய்வாக அது இருக்கா ததாலும் சான்டோ டொமிங்கோவி லுள்ள சந்தேகத்துக்கிடமான உடல் குறித்து ஆராயப்படாமலிருப்பதாலும் கொலம்பஸ் குறித்த இந்தச் சர்ச்சை நீடிக்கவே செய்கிறது.



இதற்கு முடிவுகட்டும் ஆய் வொன்றை ஸ்பெய்ன் ஆராய்ச்சி யாளர்கள் முடுக்கிவிட்டிருக்கிறார்கள். ஸ்பெய்னின் கிரனாடா பல்கலைக்க ழகத்தின் டி.என்.ஏ. ஆய்வின் முன்னணி அறிஞர் ஜோஸ் அன்டோ னியோ லோரென்ட் என்பவர் இதற் குத் தலைமை வகிக்கிறார். கொலம் பஸ், அவரது மகன் பெர்னாண்டோ மற்றும் அவரது சகோதரர் டியாகோ ஆகியோரின் எச்சங்கள், மாதிரிகளின் டி.என்.ஏக்களை ஆராய்ந்து அவற்றை ஐரோப்பாவிலும் அமெ ரிக்காவிலும் உள்ள ஆய்வகங்களால் சுயாதீனமாக பகுப்பாய்வு செய்யப் பட்டு எதிர்வரும் ஐப்பசி மாதத்துக்கு இடையில் முடிவு வெளியிடப்பட வேண்டும் என்கிற முனைப்பில் செயற்படுகின்றனர். பொறுத்திருந்து பார்ப்போம் கொலம்பஸ் பற்றி மேலும் அறிவதற்கு...

தொலைதூர காதல்



கலியுக பித்தன்

என்றுமில்லாதவாறு சங்கரன் ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்தான். அவன் மனதை ஏதோ ஒன்று குடைந்து கொண்டிருந்தது. நீண்ட நேர தனிமையை கலைத்துவிட்டு விறுவிறுவென்று முற்றத்திற்கு வந்து சேர்ந்தான். பௌர்ணமி நிலவு முற்றத்தை வெளிச்சத்தில் மிதக்க வைத்து கொண்டிருந்தது.

சுற்றியுள்ள அனைத்து வீடுகளிலும் மின்குமிழ்கள் அணைக்கப்பட்டு இருக்க, அமைதி அந்த சூழலையே மூழ்கடித்து கொண்டிருந்தது. இந்த பேரமைதியைக்கூட இரசிக்கும் அளவிற்கோ அல்லது அந்த அமைதியோடு தானும் சங்கமித்துக் கொள்வதற்கோ அவனது மனம் தயாராக இல்லை.

முற்றத்திற்கு வந்தவன் அண்ணாந்து நிலவைப் பார்த்தான். இரசித்தான். புன்னகைத்தான். தலையைக் கவிழ்த்தான். முகத்தைக் கைகளால் மூடித் திறந்தான். மீண்டும் நிலவை அண்ணாந்து பார்த்து ஏக்கத்தோடு புன்னகையையும் அதனோடு சேர்த்து பெரு மூச்சொன்றையும் விட்டெறிந்தான்.

இடையிடையே முகில்களால் நிலவு முழுமையாகவும், பகுதியாகவும் மறைக்கப்பட்டு கொண்டே இருந்தது. ஓடிக்கொண்டிருந்த முகில்கள் தற்காலிகமாக என்னதான் நிலவை மறைத்தாலும், அந்த நிலவின் வடிவமோ பிரகாசமோ குறைந்தபாடாயில்லை.

முற்றத்தின் நடுவே வெட்டி வீழ்த்தப்பட்ட வேப்பமர அடி குற்றியிலே போய் மெதுவாக அமர்ந்தான். தறித்து வீழ்த்தப்பட்டாலும் அதன் வாசம் விட்டுப் போகவில்லை. வீட்டுக்கே நிழலாய் இருந்த வேப்பமரம் இன்று தரையில் அநாதரவாய் கிடக்கின்றது. அந்த வேப்பமர குற்றியிலே சங்கரனும் அநாதரவாய் அமர்ந்திருந்தான். இடைக்கிடை முகிலால் மறைக்கப்பட்ட நிலவைப் பற்றியோ, வெட்டி வீழ்த்தப்பட்ட வேப்பமரத்தைப் பற்றியோ அவன் சிந்தனைகள் செல்லவில்லை. எங்கோ தொலைக்கப்பட்ட அவன் மனதைதான் அவன் தேடிக்கொண்டிருந்தான்.

சங்கரன் அன்று காலையில் எதிர்பாராத விதமாகப் பதினொராம் வகுப்பு பள்ளி தோழி ரவீனாவை சந்தித்து இருந்தான். பார்த்த உடன் அவனால் இனங்காண முடியவில்லை என்றாலும் ரவீனா அவனை அடையாளம் கண்டு தன்னை அறிமுகப்படுத்தி கொண்டாள். பள்ளியை விட்டு விலகி எட்டு ஆண்டுகள் ஆகியிருந்தது. இந்த எட்டு ஆண்டுகளுக் குள்ளும் இருவருக்குமான தொடர்பு துண்டறவே இருந்திருக்கவில்லை. ஆனாலும் ஒன்றாக படித்தவர்கள் எனும் இருவரின் பட்டியலிலும் இருவரும் இடம்பெற்றிருந்தனர்.

சந்தித்து கொண்ட இருவரும் கை குலுக்கி நலம் விசாரித்த பின் தொலைபேசி இலக்கங்களை பரிமாறி கொண்டு விடை பெற்றுச் சென்று விட்டனர். அந்த ஒரு சந்திப்புதான் இந்த அர்த்த ராத்திரியிலும் சங்கரனை முற்றத்திற்கு இழுத்து வந்து, கொட்டும் பனியிலும் உட்கார வைத்திருக்கிறது.

"எங்களோட படிச்ச ரவீனாவா அது? அப்பப்பப்பா… எவ்வளா வடிவா வந்துட்டாள்… படிக்கேக்க ஒரு நோஞ்சான் பெட்டையாதானே இருந்தாள்… இப்போ ஹீரோயின் மாதிரியெல்லோ ஆயிட்டாள்" தனக்குள்ளேயே பேசி கொண்டிருந்தான் சங்கரன்.

கைத்தொலைபேசியை எடுத்து வாட்ஸ்அப்பில் அவளுடைய ப்ரொபைலை எடுத்து பார்த்தான். பூவில் தேனீயொன்று உட்கார்ந்து இருப்பதை போன்ற ஒரு புகைப்படம்தான் ப்ரொபைலாக விடப்பட்டிருந்தது. அதனை இரசித்து கொண்டிருந்த அவனது முகத்தில் திடீரென சோகம் தொற்றி கொண்டது.

"இந்த சாமத்திலும் இவள் எதுக்கு ஒன்லைனில் இருக்கிறாள்? ஒருவேளை கமிட்டெட் ஆகியிருப்பாளோ?" அவனுக்குள் வினாக்கள் துளிர்விடத் தொடங்கியது.

அவளோடு சாட் செய்து கேட்கவும் முடியாமல், அவள் ஏன் இந்த நேரத்திலும் ஒன்லைனில் இருக்கிறாள் என்பதை புரிந்துகொள்ளவும் முடியாமல் தவித்து கொண்டிருந்தான். முற்றத்தில் பிரகாசித்து கொண்டிருந்த நிலவின் ஒளியும் மங்கலாகத் தொடங்க, சாறத்தை மடித்து கட்டி கொண்டு அறைக்குள் சென்று கட்டிலில் சாய்ந்தான்.

"பனியில இவளா நேரமும் என்னடா செஞ்சிட்டு இருந்தா?"

"ஒண்டுமில்லையம்மா"

"சரி சரி லைட்டை நிப்பாட்டிட்டு நித்திரையைக் கொள் "

"அம்மா!"

"சொல்லுடா… தேத்தண்ணி போட்டு தரவோ?"

"இல்லை வேணாம்மா"

"அப்போ என்னடா வேணும் "

"ஒண்டுமில்லம்மா நான் தூங்கிறன்"

"சரி படு " என்று விட்டு சங்கரனின் தாய் சரஸ்வதி அமைதியானாள். வெளியில் அமைதியானாலும் சங்கரனின் திடீர் நடத்தைகள் அவளின் உள்ளே அமைதியை விதைக்க மறுத்துவிட்டது.

"சரி என்னமோ நாளைக்கு கேப்பம்" என்று சுயமாக தன்னை சாந்தப்படுத்தி கொண்டு அயர்ந்து போனாள். ஆனாலும் சங்கரனால் நித்திரைக்கு போக முடிய வில்லை. அவன் நினைவுகள் யாவும் ஒன்லைனில் இருக்கும் ரவீனாவை சுற்றியே இருந்தது.

இந்த சாமத்திலும் இவள் எதுக்கு ஒன்லைனில் இருக்கிறாள்? ஒருவேளை கமிட்டெட் ஆகியிருப் பாளோ?" அவனுக்குள் வினாக்கள் துளிர்விடத் தொடங்கியது

ஆற்றா வரி

1
குளிர் தூங்கும் முன்னிரவு
சிறு காற்று குறை நிலவு
நினைவென்னும் நீள் ஆற்றை
எவ்வாறு கடப்பேன்
நீ இன்றி தூங்காது என் கண்
விடிவதற்கு இன்னும் இருப்பது எட்டு
மணித்தியாலம் 12 நிமிடம்....

2
சேலையில் நான் சிலை என்றாய்
சிறு நிலவு என்றாய்
மேகம் மூடும் மழை இரவில் பிரிவு சொன்னாய்
ஐந்து மழைக்காலங்கள் கடந்தேன்
ஆயினும் குளிரா என் உடல்
பங்குனி பாலையாய் சுடும்.
என்ன செய்ய போகிறாய்
நீ இப்போது ஏசியை கூட்டிவை

3
மோகம் கொல்
அன்பு இல்லை என்றுரை
நடந்தவை நடந்தவை தான் என்றும்
இனி ஒரு போதும் இணயோம் என்றும்
சத்தியம் செய்
கடைக்கண்ணில் துளிர்க்கிற
ஒரு துளி நீரை சுண்டி எறி
எரியட்டும் எதற்கு
காதல் வனம்.

வேலணையூர்-தாஸ்.

சிறைக்குள்... 6

■ சு.தர்மராசா ■

குமார் பொன்னம்பலம், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சிறிகாந்தா, தவராசா ஆகிய சட்டத்தரணிகள் முன்னிலையாகின்ற வழக்குகள் மிகச் சிறியவையாக இருப்பினும் அவை பெரிய வழக்குகளாக இருக்கக்கூடும் என்று சிங்கள நீதியரசர்கள் நினைப்பதும், அவர்களின் மனநிலையில் அது தெரிவதும் யதார்த்தம்.

இது பல கைதிகளின் விடுதலையைத் தாமதமாக்கியதை நடைமுறையில் காணமுடிந்தது. திரு மாஸ்ரரின் வழக்கில் வாதாடுவதற்கு அப்பாத்துரை விநாயகமூர்த்தி முன்னிலையானதால் அவரது வழக்குக்குத் தொடர்ந்தும் நீண்ட தவணைகள் போடப்பட்டன. வழக்கில் வாதடுவதற்காக நீதிமன்றத்துக்கு வந்தால் பணத்துடன்தான் திரும்ப வேண்டும் என்ற எண்ணத்துடன் சில சட்டத்தரணிகள் வருவார்கள். பணம் வாங்குவதற்காக வாயில் வருகின்ற பொய்களைக் கைதியின் உறவுக்காரர்கள் நம்பும்படியாகக் கூறுவார்கள். சட்ட மற்றும் நீதிமன்ற நடைமுறைகள் மற்றும் உண்மையான விடயங்கள் தெரியாதவர்கள் இதில் ஏமாற்றப்படுவார்கள்.

2002ஆம் ஆண்டு மாசி மாதம் 5ஆம் திகதியன்றைய பத்திரிகைச் செய்தியில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப் பத்திரிகைகளைச் சட்டமா அதிபர் திணைக்களம் மீள் பரிசீலனை செய்யவுள்ளது என்று செய்தி வெளியாகியிருந்தது. எனினும் நான் விடுதலையாகும்வரை (2002.ஆடி.22) அந்த அறிவிப்புக் குறித்த உருப்படியான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

முதல் தடவையாகக் குற்றம் இழைத்தவர்கள் என்ற அடிப்படையிலாவது சில சலுகைகளைத் தமிழ் அரசியல் கைதிகளுக்கு இலங்கை அரசால் வழங்கியிருக்க முடியும். அந்த அரசியல் கைதிகளைப் பிணை எடுப்பதற்கான ஏற்பாட்டை அல்லது அவர்கள் வெளி அச்சுப் பெறுவதற்கான வாய்ப்புகளையாவது ஆட்சியாளர்கள் முன்மொழிந்திருக்கலாம்.

கர்ப்பவதிகள், கைக்குழந்தையுள்ள பெண்கள், அரச ஊழியர்கள், வயோதிபர்கள், மாணவர்கள், தீராத நோயுள்ளவர்கள் போன்ற கைதிகளுக்குக்கூட நிபந்தனையுடனான பிணை வழங்காமல் சிறைக்குள் வைத்திருந்தார்கள். இலங்கை அரசின் சட்டங்கள் தமிழரை ஓர் அந்நிய குடிமக்களாக நடத்தியதை இதன்மூலம் காணமுடிந்தது.

தமிழரை இரண்டாம்தரக் குடிமக்களாக நினைத்ததன் பயனாக மேற்குறிப்பிட்ட மனிதாபிமான நடவடிக்கைகளை அரசால் முன்னெடுக்க முடியவில்லை. இதனால் கைதிகளாக இருந்தவர்கள் நாளுக்குநாள் அரசின் மீது நம்பிக்கை இழந்துபோவதற்கும், வன்மம் கொள்வதற்கும் வழி ஏற்பட்டது.

கைதான அனைவரையும் புலிகள் என்ற அடிப்படையில் நடத்த முற்பட்டதால் அவர்களைத் தனது பக்கம் மாற்றி எடுக்க அரசால் முடியாமல் போயிற்று.

ஐ.நா. செயலரின் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைப் பதிவுசெய்யும் அறிக்கை யாளராகக் கடமையாற்றுகின்ற வாய்ப்பு அப்போது இலங்கைத் தமிழ்ப்பெண்ணான கலாநிதி ராதிகா குமாரசுவாமிக்குக் கிடைத்திருந்தது. ஆனபோதிலும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைத்திருந்த பெண் சிறைக் கைதிகள் பற்றியோ, நாட்டின் சகல பொலிஸ் நிலையங்களிலும் தடுத்து வைத்துத் துன்புறுத்தப்பட்ட தமிழ்ப் பெண்கள் பற்றியோ அவர் எந்த அறிக்கையையும் பதிவு செய்யவில்லை. மாறாக இலங்கை அரசு குற்றம் சாட்டியதற்கு முரணாக எதையும் கூறாது அதை அவ்வாறே அவர் ஏற்றுக்கொண்டதையும் காணமுடிந்தது. அரசுடன் ஐக்கியப்பட்டியங்கிய அவரின் மௌனத்துக்கும் அர்த்தம் இருந்தது.

சடங்குகளால் பெருகும் தொற்று...!

■ ஆன்கொலின்

இளம் மருத்துவரும் கர்ப்பவதியுமான கார்த்திகா என்பவர் கொரோனா வைரஸ் தொற்றால் அண்மையில் இந்தியாவின் சென்னையில் இறந்திருக்கிறார். மருத்துவராகக் கடமையாற்றிவந்த இவர் கடந்த ஒரு வருடகாலமாகப் பரவி வருகின்ற கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தன்னைப் பாதுகாத்தவாறு தனது பணியைத் தொடர்ந்து வந்தவர். தனது ஏழுமாதக் கருவையும் பாதுகாத்துப் பணியாற்றிவர்.

அவரது மருத்துவ நிலையையும் மீறி அவருக்கு அண்மையில் குடும்பத்தினரால் வளைகாப்புச் சடங்கு நடத்தப்பட்டுள்ளது. அந்தச் சடங்குக்கு வருகை தந்தவர்களாலேயே கார்த்திகாவுக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. அதன் பின்னர் சிகிச்சை பயனின்றி அவர் சாவடைந்தார்.

வளைகாப்பு என்ற சடங்கு செய்யப்படுவதற்குப் பழங்காலத்தில் ஒரு நோக்கமிருந்தது. அந்த நோக்கம் இன்றைய நவீன மருத்துவம் வளர்ச்சியடைந்துள்ள நிலையில் தேவையற்றது. முன்னைய காலத்தில் பெண்கள் பலர் இறக்கும் சந்தர்ப்பம் மகப்பேற்றின் போதே அதிகம் ஏற்பட்டது. கிராம மருத்துவிச்சிகளால் பிரசவம் பார்க்கப்படுவதால் கிருமித் தொற்று, குருதிப்போக்கு, குழந்தையைப் பிரசவிக்கும் தாய்க்கு வேதனை தெரியாமல் இருப்பதற்காக மதுபானத்தை அருந்தக் கொடுப்பது எனப் பல்வேறு காரணிகள் இத்தகைய மகப்பேற்று இறப்புக்களை ஏற்படுத்தின. இந்த இறப்புகளை மையமாக வைத்து ஒரு பெண் 7 மாதக் கர்ப்பவதியாக இருக்கும்போது பெண் வீட்டார் அவளைப் புகுந்த வீட்டிலிருந்து அழைத்து நல்ல உடையுடுத்தி, நகைகள் போட்டு, இரண்டு கைகளிலும் வண்ண வண்ண வளையல்களை அணிவித்து, நல்ல விருந்து வைத்து, பரிசுப் பொருள்களை வழங்கி அந்தத் தாயை மகிழ்விப்பதன் ஊடாகச் சில வேளை பிரசவத்தின் போது அந்தத் தாய் இறக்க வேண்டிய சூழல் ஏற்பட்டால் ஏழாவது மாதத்தில் செய்யப்படும் இந்த வளைகாப்புச் சடங்கின் காரணமாக இறந்த பின் அவள் சொர்க்கத்தை அடைவாள் என்கிற நம்பிக்கை இருந்து.

அவளது குடும்பத்தினரின் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இதுவாகவே இருந்தது. இவ்வாறு ஒரு தாய் வயிற்றில் குழந்தையுடன் இறந்தாள் அவள் சுமையுடன் இறந்திருக்கிறாள் என்ற நம்பிக்கையுடன் கட்டப்படும் நினைவுச் சின்னமே சுமைதாங்கிக் கற்கள். ஒவ்வொரு சுமைதாங்கிக் கல்லுக்கும் ஒரு தாயின் பின்னணிக் கதை இருக்கும்.

ஒரு பெண் மருத்துவர்கூட வளைகாப்பு என்ற சடங்கைத் தவிர்க்க முடியாத அளவுக்கு மதம் சார்ந்த, சமூகம் சார்ந்த பிற்போக்குத் தனமான செயற்பாடுகள் தமிழர்களை ஆக்கிரமித்திருக்கின்றன என்பதை இங்கு கவனத்தில்கொள்ளவேண்டும். தற்போதைய கொரோனாத் தொற்றுப் பரவல் சூழலில் மக்கள் ஒன்றுகூடும் எல்லாச் சடங்குகளையும் தவிர்ப்பதே மிக மிக அவசியமாகும். ஒரு சிலரின் விடாப்பிடியான செயற்பாடுகள் குறிப்பாக வயதானவர்கள் கூறும் காரணங்கள் வாழவிருக்கும் மருத்துவர் கார்த்திகா போன்ற இளையவர்களையும் அழித்து அவர்களின் சந்ததியையும் அழிக்கவே செய்யும். எல்லாவற்றுக்கும் மேலாக ஒன்றுகூடுவதைத் தவிர்ப்பதே இன்றுள்ள முக்கியமான தேவையாகும்.

நம்மவூர் சுத்துமாத்து

சென்னையில் நம்மவரின் திருகுதாளம்

கோப்பாயிலிருந்து கண்ணதாசன்



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓர் இளைஞன் வெளிநாடு செல்வதற்காக இந்தியாவின் சென்னைக்குச் சென்று சிலகாலம் அங்கு தங்கியிருந்தான். அந்தக் காலத்தில் அவனது உறவுக்காரர் சிலர் வெளிநாட்டிலிருந்து திருமண வைபவம் ஒன்றுக்காகச் சென்னைக்குச் சென்றவேளை இந்த இளைஞனைச் சந்தித்தார்கள். இரண்டு வருடங்களுக்கு மேலாக அவன் இந்தியாவில் தங்கியிருந்ததால் இந்தியாவின் பல இடங்களையும் அறிந்து வைத்திருந்தான். பல இடங்களிலும், நபர்களுடனும் அதிக தொடர்புகளையும் அவன் ஏற்படுத்தியிருந்தான்.

இந்த நிலையில், சென்னையில் ஒரு வீட்டை விலைக்கு வாங்கும் எண்ணத்தை வெளிநாட்டில் இருந்து வந்தவர்களுக்கு அவன் ஏற்படுத்தினான். அவர்கள் நீண்ட காலமாக வெளிநாட்டில் உழைத்ததால் பல கோடி ரூபா சொத்து ஒன்றை வாங்கும் வல்லமையும் அவர்களுக்கு இருந்தது.

பெரிய வீடு அதனுடன் கூடிய வசதி வாய்ப்புகள் என அவர்களின் பெரும் சொத்துகளைக் கவனித்து வந்த அந்த இளைஞன் திடீரென அந்தச் சொத்துகளை வேறு யாருக்கோ விற்று விட்டான். பல கோடி ரூபா பணத்துடன் பம்பாயிலோ, டில்லியிலோ சென்று ஒளிந்து கொண்டான். வெளிநாட்டு உறவினர்களின் நிலை கையறுநிலையாகியது

ஆனால், இந்தியாவில் சொத்து ஒன்றை வாங்குவதற்குக் குறைந்தது 6 மாதங்களாவது அங்கு வசித்திருக்கவேண்டும். வெளிநாட்டிலிருந்து அங்கு செல்வோர் உடனடியாக அவ்வாறான சொத்தை வாங்க முடியாது என்பதற்கான இந்தியாவின் சட்ட ஏற்பாடு இருந்தது. குறிப்பிட்ட இளைஞன் வெளிநாட்டுக்குச் செல்லப் பல மாதங்கள் ஆகும் என்பதால் அந்தச் சொத்தைத் தற்காலிகமாக அவனது பெயரில் எழுதியெடுத்துவிட்டுப் பின்னர் தங்களின் பெயருக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகளை அவர்கள் செய்தனர்.

சொத்துக் கைமாற்றப்பட்டுவிட்டது. வந்தவர்கள் வெளிநாட்டுக்குத் திரும்பிவிட்டனர். பெரிய வீடு அதனுடன் கூடிய வசதி வாய்ப்புகள் என அவர்களின் பெரும் சொத்துகளைக் கவனித்து வந்த அந்த இளைஞன் திடீரென அந்தச் சொத்துகளை வேறு யாருக்கோ விற்று விட்டான். பல கோடி ரூபா பணத்துடன் பம்பாயிலோ, டில்லியிலோ சென்று ஒளிந்து கொண்டான். வெளிநாட்டு உறவினர்களின் நிலை கையறுநிலையாகியது.

வெளிநாடுகளில் நீண்ட காலம் வாழ்கின்ற நம்மவர்களில் பலர் தாங்கள் ஊரை விட்டுச் சென்றபோது தமது உறவினர்கள், ஊரவர்களிடம் நிலவிய கண்ணியம் தற்போதுள்ள இளைஞர்களுக்கும் இருக்கும் என நம்புகின்றனர். அதன் விளைவே இந்தப் பெரிய சொத்திழப்புக்கு வித்திட்டது.

தற்போது தமிழ்ச் சமூகம் தமது சொந்தக்காரர்களையே நம்ப முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

இவ்வாறான சம்பவங்கள் பலவற்றை அறிந்த வெளிநாட்டிலுள்ள தமிழர்களில் சிலர் இங்குள்ள தமது பாழடைந்த, கவனிப்பாரற்ற சொந்த வீடுகளைச் சொந்தக்காரர்களுக்குத் தற்காலிகமாக இருப்பதற்குக்கூடக் கொடுப்பதில்லை. இங்குள்ள பல சொந்தக்காரர்கள் வெளிநாட்டிலுள்ள தமது உறவுகள் தங்கள் ஒருவருக்கும் உதவுவதில்லை என்று பழி சுமத்துவதையும் காண முடிகிறது. இத்தகைய நம்பிக்கையீனம் இனத்தைத் தாண்டி இன்று குடும்பங்களுக்குள்ளும் புகுந்துள்ளது. இது மிகவும் கொடுமையானது. எதிர்காலத்தில் தமிழர்கள் நம்பிக்கையீனத்துக்குப் பெயர்போனவர்கள் என்று ஏனைய இனங்கள் கூறுமளவுக்கு நம்மவர்களிடையே சுத்துமாத்துகள் அதிகரித்து வருகின்றன.

சிறைக்குள்...

இலங்கைக் காவல்துறை, இராணுவம், சிறைச்சாலை நிர்வாகம், நீதிமன்றம் என எல்லாப் பொறிமுறைகளும் தமிழ் அரசியல் கைதிகளை வேற்று நாடொன்றில் இருந்து இலங்கையைத் தாக்க வந்தவர்களாகவே நடத்தின. இலங்கை ஒரு நாடு என்று சிங்கள ஆட்சியாளர்களால் சொல்லப்பட்டு வருகின்ற போதிலும் இந்த அமைப்புகளின் செயற்பாடுகள் தமிழரின் பிரதேசம் சிங்கள ஆட்சியாளர்களின் ஆளுகைக்கு உட்பட்டதல்ல என்பதைத் தெளிவாகக் காட்டின.

ஒரு கைதிக்குப் பிணை வழங்கிய பின்னர் அந்த நபர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தப்பியோடிவிட்டால் எதுவும் செய்யமுடியாது என்ற பயமும் இவர்களிடம் இருந்தது. இதனால் தான் தமிழ் அரசியல் கைதிகள் இரண்டாவது குடிமக்களாக நடத்தப்பட்டனர்.

2002ஆம் ஆண்டு சித்திரை மாதம் முதலாம் திகதியன்று 5 கைதிகளை கொழும்பின் வெவ்வேறு நீதிமன்றங்களில் விடுதலை செய்திருந்தனர். இந்தச் செய்தி ஏனைய கைதிகளை உற்சாகப்படுத்தியது. ஏனெனில் இதற்கு முன்பு 15 பேருக்கு மேல் வழக்குக்காக நீதிமன்றம் சென்றாலும் ஒருவர்கூட விடுவிக்கப்படுவதில்லை.

சீலன் என்ற ஒருவர் மன்னாரில் கைது செய்யப் பட்டிருந்தார். வவுனியா மேல்நீதிமன்றில் அவரது வழக்கு விசாரணைக்கு வந்தபோது அவருக்குப் பிணை வழங்கப்பட்டது. அவரது குடும்பத்தினர் எல்லோரும் அங்கு வந்திருந்தார்கள். பிணை வழங்கப்பட்டபின் ஏதோ ஒரு தேவைக்காகச் சிறிது நேரம் அவரைக் கூண்டுக்குள் அடைத்தபோது அவர் அழத்தொடங்க அவரது தாய் செபமாலையைக் கைகளுக்குள் பிசைந்த, உருட்டியவாறு அழுதுகொண்டு நின்றார். அவரது தந்தை செய்வதறியாது மௌனமாக நின்றார்.

ஒரு கைதி மீண்டும் வீட்டுக்குப் போவதென்பது அவர் மறுபிறவி எடுப்பதற்கு ஒப்பானதாக இருந்தது. அதன் வேதனையும் மகிழ்ச்சியும் அவன் சார்ந்த குடும்பத்துக்கே புரிவதாக இருந்தது.

சில சந்தர்ப்பங்களில் வழக்கு விசாரணை முடிந்த பின்பும் தீர்ப்புக்காகப் பல தடவைகள் நீதிமன்றத்துக்கு அலையவேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்த விடயத்தில் நான் நான்கு தடவைகள் நீதிமன்றம் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது.

பொதுவாக மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மேல் நீதிமன்றங்களில் வழக்குகள் விசாரிக்கப்பட்டவர்களுக்கு இந்தப் பிரச்சினை அதிகம் எழுந்தது. இந்த இரண்டு இடங்களிலும் இருவேறு நீதிமன்றங்கள் இருந்தபோதிலும் ஒரு நீதிபதியே அவ்விரு நீதிமன்றங்களையும் நடத்தவேண்டியிருந்தது.

ஒரு மாதம் மட்டக்களப்பு நீதிமன்றம் நடைபெற்றால் மறுமாதம் திருகோணமலை நீதிமன்றம் நடக்கும். இதனால் ஏதாவது ஒரு நீதிமன்றில் அடுத்த தவணை போடப்படும்போது இடையில் ஒரு மாத இடைவெளி கட்டாயமாக இருக்கும். எனக்கு மட்டக்களப்பு மேல்நீதிமன்றில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கில் பல தடவைகள் என்னை முன்னிலைப்படுத்தியபோதும், எனது எதிர்த்தரப்பும் அரச தரப்புச் சாட்சியுமாகிய உதவிக் காவல் அத்தியட்சகரான ஆரியப் பெருமடொன் டயானந்த சமரவீர சமூகமளிக்கவில்லை. எனது வழக்கின் முக்கிய சாட்சியாகச் சட்டமா அதிபர் திணைக்களத்தால் எனக்குக் கையளிக்கப்பட்ட குற்றப்பத்திரிகையில் இவரது பெயரே குறிப்பிடப்பட்டிருந்தது.

என் மீதான இந்த வழக்கைத் திருகோணமலை மேல் நீதிமன்றத்துக்கு மாற்றினால் தன்னால் திருகோணமலை மேல் நீதிமன்றில் முன்னிலையாக முடியும் என எழுத்து மூலம் நீதிபதியிடம் கேட்டிருந்தார் அவர் (வடக்குக் கிழக்குத் தவிர்ந்த பகுதிகளில் கைதான பலருக்கு மட்டக்களப்பில் வழக்குத் தொடரப்பட்டால் சாட்சிகள் யாருமே அங்கு வருவதில்லை).

மட்டக்களப்புக்கு அம்பாறையூடாக அல்லது பொலன்னறுவையூடாகப் பயணிக்கும்போது விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும் என்ற பயம் உயர் காவல் அதிகாரிகளுக்கு இருந்தது. அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் 2002ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பும்கூட எனது வழக்குடன் சம்பந்தப்பட்ட எந்தச் சாட்சியும் மட்டக்களப்புக்கு வருவதற்கு முன்வரவில்லை.

(தொடரும்...)

முகத்தை பிரகாசமாக மாற்றும் தேங்காய்..!!

எமது சமையலில் முக்கிய இடம்பெறும் தேங்காய், நமது தேகத்தை அழகாக வைத்துக் கொள்ளவும் உதவுகிறது. தலை முதல் பாதம் வரை மென்மை, பளபளப்பை தேங்காய் ஏற் படுத்தும் என்றால் நம்புவீர்களா?

தேங்காய் எவ்வாறு முக அழகினை பாதுகாக் கின்றது என்று பார்க்கலாம். முதலில் நல்ல வழுக்கல் தேங்காயை எடுத்து நன்கு அரைத்துக் கொள்ளவேண்டும். அதனுடன் சிறிதளவு இளநீர் கலந்து முகத்தில் கீழ் இருந்து மேல்நோக்கி பூசி சிறிது நேரத்தின் பின்னர் அது உலர்ந்ததும் நீர்கொண்டு சுத்தம் செய்துகொள்ளவேண்டும். தினமும் இப்படி செய்து வந்தால் முகத்திலுள்ள அழுக்குகள் நீங்கி, முகம் மிளிரும். கரும் புள்ளிகள் இருந்தால் கூடிய விரைவில் அவை காணாமல் போய்விடும்.

மேலும், வெயில் காலங்களில் சூரியஒளி பட்டு முகம் கறுப்பாவது வழமை. முகம் கறுப்பாவதை தடுக்கவும் தேங்காய் உதவுகிறது. தேங்காய் பால் இரண்டு கரண்டி, கடலை மா ஒரு கரண்டி எடுத்து இரண்டையும் கலந்து பசைபோல ஆக்கிக்கொள்ளவேண்டும். பின்னர் இந்தப் பசையை முகத்தில் பூசிக்கொண்டு, உலர்ந்ததும் தண்ணீர் கொண்டு கழுவிவிட வேண்டும். வாரம் இருமுறை இப்படிச் செய்து வந்தால் முகம் பிரகாசமாகத் தோன்றும்..

எமதூதனாய்..!

இன்னும் என்ன
செய்ய போகிறாய்
கொரோனா? - வயது
இரண்டாகுது உனக்கும்.
கண்டங்கள் அப்பப்ப
முடமாகுது - நீ மட்டும்
எப்பவும் அடங்காமலே
கடல் அலைபோலவே!.

சமத்துவம் தந்தாய்!
சமயங்களை வென்றாய்!
சனிஸ்வரன் கூட
சங்கடம் கண்டார் உன்னாலே!
மங்களமெல்லாம் மௌனமாக
அமங்களம் மட்டுமே
அமந்தறையாக அகிலமெலாம்
அடங்க தாண்டவம் கொண்டாய்.

எங்கோ தொடங்கி..
எம்மூக்கு வரை வந்துவிட்டாய்
நாட்டுக்குள்ள நாமும்
நாட்டு வைத்தியரானோம்
கசாயம் தொட்டு வேப்பம்
குருத்தும் தின்றுமெல்லுறோம்.
பக்கத்து வீடேன்றாலும் பழக
மறுக்கிறோம் பயத்தாலே
இந்த உலகையே வெறுக்கிறோம்.

போதுமென்று எப்ப
சாதுகொள்வாய்? இல்லை
நிரந்தர வதிவிடமினி
அகிலமே என இறைபோல்
கண்ணுக்கு தெரியாமலே
மண்ணுயிரிலும் மானிடர்க்கு
எமதூதனாய் என்றைக்கும்
நிறைந்திருப்பீரோ? நீ.

தரன்யா சிவதாஸ்

தடுப்பூசிக் குற்றங்கள்...!

கொரோனா நுண்தீமிக்கு (வைரஸ்) எதிரான சக்தியைத் தூண்டுகின்ற ரெம்டெசிவிர் என்கிற தடுப்பூசி மருந்தைப் பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்ற சம்பவம் ஒன்று இந்தியாவில் பதிவாகியிருக்கிறது. இந்தக் குற்றத்தை இழைத்தவர்களான இரண்டுபேர் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தில் அங்கு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றுக்குரிய தடுப்பூசிகள் இதுவரையில் வெளிச் சந்தைக்கோ, விற்பனை நிலையங்களுக்கோ வந்திருக்காத சூழலில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. அரச சுகாதார நிறுவனங்கள், அலுவலகங்கள், திணைக்களங்களின் கட்டுப்பாட்டில் மாத்திரமே இருந்து வருகின்ற இந்தத் தடுப்பூசிக்குரிய தட்டுப்பாட்டையும், மக்கள் மத்தியில் நிலவுகின்ற எதிர்பார்ப்பு மற்றும் கேள்விகளையும் பயன்படுத்திச் சட்டவிரோதமாக அதை விற்பனை செய்வதும், போலியான விற்பனை முகவர்கள் அதிகரித்திருப்பதும், போலித் தடுப்பூசிகள் உலாவுவதும் என்று பல சம்பவங்கள் இந்தியாவில் ஆங்காங்கே நடக்க ஆரம்பித்திருக்கின்றன.

இதனால், பொது மக்கள் இந்தத் தடுப்பூசி மருந்தை இணையவர்த்தகம் மூலமாகவோ, சமூக வலைதளத் தகவல்களின் மூலமாகவோ வாங்க வேண்டாம் என்றும் முற்பணம் செலுத்தி ஏமாற வேண்டாம் என்றும் காவல்துறையினர் அறிவிப்பும் விடுத்துள்ளனர்.

இதுவரை இந்தியாவில் ரெம்டெசிவிர் மருந்தைப் போலியான ஆவணங்கள் கொடுத்து வாங்கிப் பதுக்கி வைத்து, அதிக விலைக்கு விற்பனை செய்த 34 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 14 வழக்குகள் இந்தச் சம்பவம் குறித்துப் பதிவாகியிருக்கின்றன.

இந்த நிலையில்தான் இப்போது இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 123 ரெம்டெசிவிர் மருந்துகள், 6 பங்களாதேஷ் ரெம்டெசிவிர் மருந்துகள் மற்றும் 140 நினவீர் மருந்துகள் உட்பட 269 மருந்துப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மருந்து விற்பனை செய்யும் நிறுவனத்தின் உரிமையாளரான புவனேஷ்வர் (வயது36) என்பவரும் இவருடன் தொடர்பிலிருந்த மற்றொரு மருந்து விற்பனை நிறுவனத்தின் உரிமையாளரான நிஷித் பண்டாரி, (வயது32) ஆகிய இருவருமே இப்போது கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கொரோனாத் தடுப்பூசிக்குத் தட்டுப்பாடு நிலவுகின்ற காலத்தில் உழைப்புத்தேட முற்பட்டு மாட்டிக் கொண்டிருந்தாலும் இவர்களைப்போல பலர் இவ்வாறு இயங்காமலில்லை. தடுப்பூசி வெளிச் சந்தைகளில் கிடைக்க ஆரம்பிக்குமானால், இவ்வாறு பல திருகுதாளங்கள் நடக்காமல் விடுமா...? என்ன?

மருந்தோர் அசுரன் இஸ்ரேல்...!

■பொன்வண்டு

1947ஆம் ஆண்டில் தனிநாடாக அங்கீகாரம் பெற்ற நிலமே இன்றைய இஸ்ரேல். அதற்கு முன்னர் புராண, இதிகாச, வரலாற்றுக் குறிப்புகளே இஸ்ரேல் என்று பழைய தேசம் ஒன்று இருந்ததை ஆதாரப்படுத்தக் கிடைத்தன. மற்றும்படி அப்படியொரு அங்கீகரிக்கப்பட்ட நாடு இருக்கவில்லை. தொல்லியல் சான்றின்படி, கி.மு. 1211 காலப்பகுதிக்குரிய எகிப்திய நடுகல் ஒன்றில்தான் இஸ்ரேல் என்ற சொல் காணப்பட்டது.

கொரோனா நுண்தீமியால் (வைரஸ்) உலகமே முடங்கிக் கிடக்கின்ற தருணத்தில் பாலஸ்தீனத்தின் காசாவில் நடக்கின்ற போர் கவலைக்குள் தள்ளுகிறது. பல மனிதப் பேரவலங்கள் அங்கு அரங்கேறுகின்றன. அவ்வப்போது தாக்குதல்கள் நிறுத்தப்பட்டாலும் இன்னும் பதற்றம் தணியாத பகுதியாகத்தான் இருக்கிறது காசா.

இவ்வாறிருக்கக் கொரோனா நுண்தீமியை எதிர்த்துத் திறம்படச் செயலாற்றக்கூடிய புதிய வகை மருந்தொன்றைக் கடந்த மாசி மாதத்தில் கண்டுபிடித்திருந்தது இஸ்ரேல். காசாவை உக்கிரமாகத் தாக்கி வருகின்ற இஸ்ரேல் தன் மீதான தாக்குதல்களையும், தாக்குதல் வியூகங்களையும் சிறப்பான முறையில் முறியடித்து வருவதுடன் மறுபுறம் புதிய மருந்துக் கண்டுபிடிப்பையும் நிகழ்ந்தியிருக்கிறது.

புதிய மருந்தை மட்டுமல்ல அமெரிக்கா, சீனா, ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலவுடனும் போட்டி போட்டு - அவற்றுக்கு ஈடுகொடுக்கத்தக்க விதத்தில் கொரோனா நுண்தீமிக்குரிய தடுப்பூசி மருந்துகள் பலவற்றைக் கண்டுபிடித்திருக்கிறது இஸ்ரேல்.

இவ்வாறு மருத்துவத்திலும், போரிடலும் வெகு முன்னேற்றகரமாகச் செயற்படுவது மத்திய கிழக்கில் இஸ்ரேலாகத்தான் இருக்க முடியும். வளர்ச்சியடைந்த அதிகாரமிக்க நாடுகளுக்கு இணையாகவும் சிலவேளைகளில் போட்டியாகவும்கூடப் பல தளங்களில் பயணிக்கிறது இஸ்ரேல்.

அமெரிக்காவின் ஆதரவுத்தளத்தில் இயங்கி வந்தாலும் இஸ்ரேலின் இந்த வளர்ச்சிகளுக்கு இஸ்ரேலே முழுக் காரணமுமாக இருக்கிறது.

ஜேர்மனியச் சர்வதிகாரி ஹிட்லராலும் அவருடைன நாசிப் படைகளாலும் நசுக்கப்பட்ட யூதர்களின் உலகிலுள்ள ஒரேயொரு தாய் நாடு இந்த இஸ்ரேல்தான். பாலஸ்தீனத்தின் பெரும்பகுதியைக் கைய கப்படுத்தி, அதேபோல லெபனான் போன்ற அயலிலுள்ள அரபு நாடு களின் நிலங்களையும் அபகரித்து உருவாக்கப்பட்டதுதான் இந்த இஸ்ரேல் என்கிற புதிய தேசம். மிகச் சிறியதேசமும்கூட. கிட்டத்தட்ட 1947ஆம் ஆண்டளவில்தான் நாடு என்ற அங்கீகாரம் அதற்குக் கிடைத்தது.

புதிய தனிநாடு

1947ஆம் ஆண்டில் தனிநாடாக அங்கீகாரம் பெற்ற நிலமே இன்றைய இஸ்ரேல். அதற்கு முன்னர் புராண, இதிகாச, வரலாற்றுக் குறிப்புகளே இஸ்ரேல் என்று பழைய தேசம் ஒன்று இருந்ததை ஆதாரப்படுத்தக் கிடைத்தன. மற்றும்படி அப்படியொரு அங்கீகரிக்கப்பட்ட நாடு இருக்கவில்லை. தொல்லியல் சான்றின்படி, கி.மு. 1211 காலப்பகுதிக்குரிய எகிப்திய நடுகல் ஒன்றில்தான் இஸ்ரேல் என்ற சொல் காணப்பட்டது.

3 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக 'இஸ்ரேல்' என்னும் நிலத்தைத் தாயகமாகக் கொண்டு நாம் வாழ்ந்து வந்தோம் என்று இவ்வாறான பல ஆதாரங்களை யூதர்கள் முன்வைக்கிறார்கள். வரலாற்றுக் குறிப்புகளின்படி பார்த்தால், கிட்டத்தட்ட கி.மு. 11ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இந்த இஸ்ரேல் உருவாக்கப்பட்டது. பின்னர் பபிலோனியா, அசிரிய, பாரசீக, கிரேக்க, உரோமானிய, பைசாந்திய அரசுகளின் படையெடுப்புகளால் யூதர்கள் இஸ்ரேலை விட்டு வெளியேறினர். இது வரலாற்றுக் கதைச் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது.

தவிர, 1947இல் தான் இஸ்ரேல் தனிநாடானது.

போரிட்டுப் பறித்த நிலம்

பாலஸ்தீனத்தைத் துண்டாக்கித் தான் இது நிகழ்ந்தது. அதை இரண்டாகப் பிரிப்பது எனும் இஸ்ரேலின் திட்டத்தை ஐ.நா. ஏற்றாலும் பாலஸ்தீனம் உட்பட ஏனைய அரபு நாடுகள் இதை எதிர்த்தன. புதிதாக யூதர்கள் கையகப்படுத்திய அந்த நிலம் மீது அந்த நாடுகள் போர் தொடுத்தன. உள்நாட்டுப் போர்கள் உக்கிரமடைந்தன. இதனால் பிரித்தானியரிடமிருந்து 1948ஆம் ஆண்டில் அந்த நிலப் பகுதி விடுபடுவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்னரே தமது புதிய நாடு உருவான அறிவிப்பை இஸ்ரேல் விடுத்தது.

எகிப்து, சிரியா, யோர்தான், ஈராக் நாடுகள் இஸ்ரேல் மீது போர் தொடுத்தாலும் இஸ்ரேல் தனியாக நின்று சமாளித்தது. கூடவே ஐ.நா. அமெரிக்காவின் பின்புலம் இருந்தது. பல மாதப் போருக்குப் பின்னர் யோர்தானின் நதிக்கு மேற்கேயுள்ள நிலப்பகுதிகள் சிலவற்றைக் கையகப் படுத்தியது இஸ்ரேல்.

இதையடுத்து பல அரபு மக்கள் புதிய இஸ்ரேலில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அதேசமயம் யூதர்கள் அரபு நாடுகளிலிருந்து துரத்தப்பட்டனர். இன அழிப்பிலிருந்து பிழைத்த யூதர்களும் அரபு நாடுகளிலிருந்த வெளியேற்றப்பட்ட யூதர்களும் இஸ்ரேலில் ஒன்று திரண்டனர். இதனால் இஸ்ரேலின் மக்கள் தொகை ஒரே வருடத்தில் இரண்டு மடங்காகியது. இதன் பின்னரும் அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே மோதல்கள் நடந்தன. 1967ஆம் ஆண்டில், சிரியா, யோர்தான், எகிப்து நாடுகளுடன் போர் மூண்டது. அரபு நாடுகள் இணைந்து இஸ்ரேலைத் தாக்கின.

ஆறு நாள்களே நீடித்த இந்தப் போரில், அரபுப் படைகளைத் தோற்கடித்தது இஸ்ரேல்.

கிழக்கு ஜெருசலேம், மேற்குக்கரை, காசா, சைனாய் (எகிப்திலுள்ள தீபகற்பம்), கோலன் சிகரங்கள் ஆகிய பகுதிகளை அரபு நாடுகளிடமிருந்து கைப்பற்றியது. இதன் பின்னரும் இஸ்ரேல், சிரியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கிடையே பற்பல சண்டைகள் நிகழ்ந்தன. அவை எவற்றிலிருந்தும் இஸ்ரேலிடம் இழந்த நிலங்களை அரபு நாடுகளால் மீட்க முடியவில்லை. வடக்கில் லெபனான், கிழக்கில் சிரியா, ஜோர்தான், மற்றும் மேற்குக் கரை, தென்மேற்கில் எகிப்து மற்றும் காசா கரை, மேற்கில் கடலும் தெற்கில் அக்காபா விரிகுடாக் கடற்கரையுமாகப் பல எல்லைகள் சூழ்ந்த நாடாதலால் பல மோதல்கள் - முரண்களுக்கிடையில் உருவாகியிருக்கிறது யூதர்களின் இந்தத் தனித்தேசம்.

பல்துறை வளர்ச்சி

இஸ்ரேலியர்களின் திறமை கருதி அமெரிக்காவின் பல நிறுவனங்களை அவர்கள் நிர்வகிக்கிறார்கள், பல துறைகளில் பணிபுரிகிறார்கள், அமெரிக்க இணைய வழிச் செயற்பாடுகளிலும், புலனாய்வு விடயங்களிலும் கைதேர்ந்திருக்கிறார்கள் என்றெல்லாம் பாராட்டப்படுகிறார்கள். இதனாலோ என்னவோ அமெரிக்காவின் ஆதரவு எப்போதுமே அவர்களுக்கு இருக்கிறது.

(16ம் பக்கம் பார்க்க)

நாவல் மரப் பேய்...!

■ கொடிகாமத்திலிருந்து சுதாகரன்

1990ஆம் ஆண்டில் எனக்குப் பதினொரு வயதாகியிருந்தது. அப்போதெல்லாம் பாடசாலைக்குப் போய்விட்டு வீடு திரும்பும் வழியில் நண்பர்களுடன் உலாவித் திரிந்து மாங்காய்கள், நறுவுளிப் பழங்கள், கொவ்வைப் பழங்கள் பறித்துண்பதும் விழுந்து கிடக்கின்ற நுங்குகளை வாயால் உரித்துக் குடிப்பதும் (இவ்வாறு பற்களால் நுங்கு உரித்துக் குடிப்பதை நொங்கைக் கார்ந்து குடிப்பது என்று சொல்வோம்) அவர்களுடன் அலைந்து திரிந்துவிட்டுப் பசியை ஆற்றிக்கொண்டு நேரந்தாழ்த்தி வீடு சென்று அம்மா, அப்பாவிடம் ஏச்சுக்களை, அடிகளை வாங்குவதும் வழமையாக இருந்தது.

"பாடசாலை முடிந்ததும் நேராக வீட்டுக்கு வந்துவிடவேண்டும், காடு, மேடெல்லாம் திரிந்து உடுப்பை ஊத்தையாக்கிக் கொண்டு வரக்கூடாது" என்ற கண்டிப்புத் தினமும் விடுக்கப்பட்டு வந்தாலும் நாம் அதைப் பொருட்படுத்துவதில்லை. மாங்காய்கள் காய்க்கும் பருவத்தில் மாங்காய்களையும், நுங்குப் பருவத்தில் நுங்குகளையும், இன்னுமின்னும் பருவ காலங்களுக்கு ஏற்ப காய்க்கின்ற காய், கனிகளைப் பறித்துண்பதை எம்மால் தவிர்க்கவும் முடியவில்லை.

எமது இந்தச் செயல்களால் பாடசாலை வெள்ளை ஆடைகள் அழுக்காகி வந்தன. அவற்றைத் தினமும் துவைக்க வேண்டிய கட்டாயம் அம்மாவுக்கு ஏற்பட்டது. அவ்வாறு துவைத்தால்கூட அதிலிருக்கின்ற அழுக்கைப் போக்க அவரால் முடியாதிருந்தது. "நெடுகலும் கயர் பிரட்டிக் கொண்டு வாறதே உனக்கு வேலையாப் போச்சுது" என்று அவற்றைத் துவைக்கும்போதெல்லாம் அம்மா திட்டித் தீர்ப்பார். அவர் என்னதான், எப்படித்தான் சொன்னாலும் நாமோ சொல்லுக்கேட்பதாய் இல்லை. எமது சேட்டைகள் குறைவில்லாது தொடர்ந்தன.

பாடசாலை முடிந்து வீடு திரும்பும்போது மாத்திரமல்லாமல் பாடசாலை விடுமுறைக் காலத்திலும் நண்பர்களுடன் கூடி இவ்வாறான வேலைகளில் ஈடுபடுவது வழமையாகியது. ஊரிலுள்ள நாவல் மரங்கள் காய்த்துப் பழுத்துக் கொட்டியமை எங்களுக்கு இன்னும் ஊக்கமளித்தது. இதைத் தடுப்பதற்கு அம்மா ஓர் உத்தியைக் கையாண்டார். "மத்தியான நேரத்தில மரங்களுக்குக் கீழ நிற்கக்கூடாது. மரங்களிலை ஏறவும்கூடாதடா தம்பி! நாவல் மரத்திலை மத்தியானத்திலை பேய் நிற்குமடா... அது அடிக்கும்;" என்று எச்சரித்தார். மதியத்தில் மரத்தில் பேய் நிற்கும் என்றதும் எங்களுக்கு உள்மனதில் ஒருவித இனம்புரியாத பயம் ஏற்பட்டது. இதையறிந்த எனது நண்பர்களின்

தொகையும் நாளடைவில் குறைந்துபோனது.

இவ்வாறிருக்க ஒரு தடவை எங்களில் மூவர் மாத்திரம் நாவல் பழம் பிடுங்கச் சென்றோம். அப்போது நாவல் பழப் பருவம் குறைவாகிவிட்டதால் நிலத்துக்குச் சமாந்தரமாக சற்றே உயரம் குறைந்தவாறு நீண்டு வளர்ந்திருந்த ஒரு நாவல் மரக் கிளையில் இருந்தவாறு கதைத்துக் கொண்டிருந்தோம். கீழே மணல் தரை ஆதலால் அந்தக் கிளையிலிருந்து குதித்து விளையாடும் எண்ணம் எழுந்தது. மூவரும் குதிப்பதும் பின்னர் மீண்டும் ஏறுவதும் குதிப்பதுமாகத் தொடங்கி யார் மிகத் தூரமாகக் குதிப்பது என்பதுவரை நீடித்தது. இதனால் நாவல் கிளையில் எழுந்து நின்று கைகளை விசுக்கியவாறு தூரமாகக் குதிக்கத் தொடங்கினோம். அந்த முயற்சியின்போது தவறுதலாக நான் மரத்திலிருந்து கீழே விழுந்துவிட்டேன். மணல் தரை ஆதலால் பாதிப்புகள் அதிகம் ஏற்படவில்லை. ஆனாலும் எனது மூக்கு, கை, கால் என்பன மரத்தில் உராய்வடைந்த காரணத்தால் காயங்களுக்கு உள்ளாகிவிட்டன. பொன் மூக்குடைந்து குருதியும் வெளியேறியது. வீட்டுக்குச் சென்றபோது அம்மா திட்டித் தீர்த்தார். அடிக்கவும் செய்தார். "சொல்லச் சொல்லக் கேட்டால்தானே.... இப்ப பாத்தியே பேய் அடிச்சுப் போட்டுது" என்று ஒப்பாரி வைத்தார். அவரிடம் அடி வாங்காமல் இருப்பதற்காக அப்போது வாய் திறக்காமல் இருக்கவேண்டியிருந்தது. ஆனால், என்னை நாவல் மரப் பேய் அடித்துவிட்டது என்றே கதை முடிந்தது. எனக்கும் எனது இரண்டு நண்பர்களுக்குமே நடந்த விடயம் தெரியும். எங்களது குழப்படிகளைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் நாவல் மரத்தில் மதிய நேரங்களில் பேய் நடமாட்டம் இருக்கும் என்று அம்மா சொல்கிறார் என்று அப்போது எங்களுக்குத் தோன்றவில்லை. எனது இந்த அனுபவத்தின் பின்னர்தான், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தாரின் "சின்னப் பயலே, சின்னப் பயலே" என்கிற பாடல் எமக்காகவே எழுதப்பட்டிருக்கிறது என்று புரிந்தது.

"வேப்ப மர உச்சியிலே பேய் ஒன்று ஆடுதென்று, விளையாடப் போகும்போது சொல்லி வைப்பாங்க - உந்தன் வீரத்தைக் கொழுந்திலேயே கிள்ளி வைப்பாங்க - அந்த வேலையற்ற வீணர்களின் முளையற்ற வார்த்தைகளை வேடிக்கையாகக் கூட நம்பி விடாதே - வீட்டுக் குள்ளே பயந்து கிடந்து வெம்பி விடாதே" இதுதான் அவரது அந்தப் பாடலில் வரும் கருத்துகளே.

மற்றோர்...!

அமெரிக்காவின் ஆதரவுடன் செயற்பட்டாலும் மிக நெடுங்கால மாக ஒடுக்கப்பட்டு வந்ததில் இருந்து கற்ற பாடமும், நிலமில்லாமல் அலைந்த அவலங்களும் எனப் பல அனுபவங்களில் இருந்தும் வளர்ந்தவர்கள்தான் இந்த இஸ்ரேலிய யூதர்கள் என்பது பலரின் கணிப்பு. சுற்றிலுமுள்ள நாடுகளுடன் போரிட்டுத் தமக்குரிய இருப்பிடத்தைத் தக்க வைத்துக்கொண்டிருப்பதால் போரிடலில் திறமையடைந்திருக்கிறார்கள். ஆனால், இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் அவர்கள் கண்டு பிடித்திருக்கின்ற மருந்து அவர்களின் மற்றோர் வளர்ச் சிக்கு எடுத்துக்காட்டு.

மருத்துவ வளர்ச்சி

மாசி மாதத்தில் இஸ்ரேல் கண்டுபிடித்த கொரோனா மருந்துக்குப் பெயர் சி.டி.24. அப்போதே அதை முதற்கட்டமாக 30 பேருக்குச் செலுத்தியபோது அதில் 29 பேர் மூன்றிலிருந்து 5 நாள்களுக்குள் தொற்றிலிருந்து மீண்டிருக்கிறார்கள். நோயெதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும் இது டெல் அவாவிலுள்ள இச்சிலோவ் என்கிற மருத்துவ ஆராய்ச்சி மையத்தில் உருவாக்கப்பட்டது.

ஆஸ்துமாக எனப்படுகின்ற சுவாச நோய்க்கு வாய் வழியாக மருந்து எடுத்துக்கொள்வதைப்போல சுவாசப் பாதைக்குள் செலுத்தும் விதமாக இந்த மருந்து தயாரிக்கப்பட்டிருக்கிறது என்கிற செய்தியை இஸ்ரேலிய ஊடகங்களில் காணமுடிகிறது.

இப்போது அந்த மருந்து ஆராய்ச்சிக் கட்டங்களைத் தாண்டிப் பொதுப்பாவனைக்கு வரவிருக்கிறது. பல நாடுகள் அதைப் பெறுவதற்கு இஸ்ரேலுடன் ஒப்பந்தங்களைச் செய்துள்ளன. இவையெல்லாமே இஸ்ரேலில் அசுர வளர்ச்சி மட்டுமல்ல. இஸ்ரேலும் அதிகாரமிக்க நாடுகளைப்போல அசுரத்தனமிக்கது என்பதைக் காட்டுபவையே.

தமன்னாவுக்கு வந்த புரிதல்!

டிஜிட்டல் ஸ்ட்ரீமிங் தளங்களின் வளர்ச்சியால் நட்சத்திர அந்தஸ்தின் தன்மை வேகமாக மாறி வருகிறது என்று நடிகை தமன்னா கூறியுள்ளார்.

தமிழ் மற்றும் தெலுங்குத் திரையுலகில் முன்னணி நட்சத்திரங்களில் ஒருவராக வலம் வருபவர் நடிகை தமன்னா. தற்போது 'நவம்பர் ஸ்டோரி' மூலம் தமிழ் வெப் சீரிஸ் தளத்திலும் கால்பதித்துள்ளார். ஆனால் சினிமாவா, ஓடிடியா இரண்டில் எது என்பதைத் தேர்வு செய்யும் பிரச்சினை தனக்கில்லை என்கிறார் தமன்னா.

"தேர்வு செய்ய ஒன்றுமில்லை. ஏனென்றால் என் கைவசம் இரண்டும் உள்ளன. ஆனால், பத்து வருடங்களுக்கு முன்னால் ஒருவர் பெற்ற ரசிகர் கூட்டத்தை இன்றைய தலைமுறை நடிகர்கள் பெறுவது கடினமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஏனென்றால் தற்போது நிலவும் தொற்று நெருக்கடியில், ஒரு திரைப்படத்தைச் சுற்றியுள்ள உணர்வுகள் மாறியுள்ளன.

இனி திரைப்படங்களைப் பார்க்கும் விதமே மாறும். எனவே நட்சத்திர அந்தஸ்தின் தன்மையே வேகமாக மாறி வருகிறது. ஒரு தனி நபருக்காக மட்டும் யாரும் ஒரு படைப்பைப் பார்க்க விரும்புவதில்லை. அதன் தரத்துக்காகப் பார்க்கிறார்கள். ஆனால், எனக்கென்று ஒரு ரசிகர் கூட்டம் பெற முடிந்தது என் அதிர்ஷ்டமே.

'நவம்பர் ஸ்டோரி' பற்றிப் பேச வேண்டுமென்றால் இதற்கு முன் நான் ஒரு க்ரைம் த்ரில்லரில் நடிக்கவில்லை. எனவே, அந்தக் களமே எனக்குப் புதிது. மகள் - அப்பா உறவின் தன்மையைப் பற்றித் தெரிந்துகொள்ள இந்த அனுபவம் உதவியது. மிகவும் சவாலான கதாபாத்திரமாக இருந்தது" என்று தமன்னா பேசியுள்ளார்.

மருத்துவம்

எந்நாளும் நலம் வாழ

மருத்துவர் -கந்தையா -சோதிதாசன்

காய்ச்சலுக்கான பத்திய உணவுகள்

உணவே மருந்தாகும் என்பது சித்த மருத்துவத்தின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும்.

பத்தியம் என்றழைக்கப்படும் ஒழுங்கமைக்கப்பட்ட உணவுத் திட்ட முறை பாரம்பரியமாக சித்த மருத்துவத்தில் வலியுறுத்தப்படுகிறது.ஒவ்வொரு நோய் நிலைமைக்கேற்பவும் நோயாளியின் தன்மையைப் பொறுத்தும் இந்த பத்திய உணவுகள் தீர்மானிக்

கப்படுகின்றன.

இப்பொழுது கொரோனா பரவி வருவதால் சாதாரண காய்ச்சல் வந்தால் கூட பயப்படவேண்டியிருக்கிறது.அவ்வாறு காய்ச்சல் ஏற்படும்போது என்ன உணவுகளை எடுத்துக்கொள்ளலாம்? பாரம் பரியமாக குறிப்பிடப்படுகின்ற பத்திய உணவுகள் பற்றி இங்கு நோக்கலாம்.

காய்ச்சலின்போது உடல் வெப்பநிலை அதிகரிக்கிறது இதனால் நீரிழப்பு ஏற்படுகிறது இதை ஈடுசெய்ய நீராகாரங்களை அதிகளவு அருந்தக் கொடுக்கவேண்டும்.

காய்ச்சல் அதிகமாக உள்ள தொடக்க நாட்களில் மூன்று மணிக்கு ஒரு தடவை நீராகாரங்களைக் கொடுக்கலாம். இளநீர், எலுமிச்சை , தோடை, பப்பாளி என்பவற்றின் பழரசங்கள் சிறந்ததாகச் சொல்லப்படுகிறது. இது காய்ச்சலின்போது ஏற்படும் விட்டமின்கள் கனியுப்புகளின் இழப்பையும் ஈடு செய்கிறது.

யாழ்ப்பாண பாரம்பரிய மருத்துவத்தின்படி காய்ச்சல் நோய்க்கு காலை உணவிற்கு கஞ்சி சிறந்ததாகப் பரிந்துரைக்கப்படுகிறது. பால் விடாது காய்ச்சப்படும் உப்புக் கஞ்சி அல்லது தூதுவளை, வல்லாரை போன்ற கீரைகளை சேர்த்து காய்ச்சப்படுகின்ற இலைக்கஞ்சி மிகச் சிறந்த காலை உணவாகும்.

காய்ச்சலின்போது ஏற்படும் நீர் இழப்பை ஈடு செய்வதோடு பாதிக்கப்பட்டவருடைய போஷாக்கையும் இது உறுதி செய்கிறது .

இதைவிட சில நாட்களில் இடியப்பம், இட்லி போன்ற ஆவியில் வேக வைத்த உணவுகள் காலை உணவாகக் கொடுக்கப்படலாம். இடியப்பத்தை உணவாக எடுக்கிற போது காரமான குழம்பு வகைகள் தவிர்க்கப்படவேண்டும் வெண்டிக்காய், பீர்க்கங்காய், முருங்கைப் பிஞ்சு என்பவற்றில் வைக்கப்படுகின்ற பால் கறி அல்லது சொதி சிறந்ததாகச் சொல்லப்படுகிறது.

காய்ச்சலின்போது செரிமான கோளாறுகள் ஏற்படுவது இயல்பானது என்பதால் எளிதில் சமிபாடடையக்கூடிய உணவாகவே பரிந்துரைக்கப்படவேண்டும்.மதிய நேரம் அளிக்கப்படும் சோறும் நன்றாக அவிந்த குழைந்த சோறாக இருக்கும்படி பார்த்துக் கொள்வது நல்லது.

முருங்கைக்காய் பிஞ்சு கத்தரிக்காய் புடலங்காய் பருப்பு போன்ற மரக்கறிகள், சிறிய மீன் என்பவற்றை கொண்டு தயாரிக்கப்பட்ட அதிகம் காரமில்லாத கறி வகைகள் மதிய சோற்றுடன் வழங்கப்படலாம்.

சீரகம், மிளகு, மல்லி, உள்ளி கொண்டு அரைத்துத் தயாரிக்கப்படுகின்ற யாழ்ப்பாணத்துக்கே உரிய பத்தியக்கறி மிகச் சிறந்ததாகப் பரிந்துரைக்கப்படுகிறது.

காய்ச்சல் சிறிது குணமான பின் யாழ்ப்பாணத்திற்கே உரிய பாரம்பரிய உணவான ஒடியற்கூழ் சிறந்தது. காய்ச்சலினால் ஏற்பட்ட உணவின் வெறுப்பை நீக்கி நோயாளிக்கு சிறந்த போசாக்கை இது வழங்கும்.

அதிக காய்ச்சலின்போது புரதம் மற்றும் கனிஉப்புக்களும் இழக்கப்படுகின்றன. இதை ஈடுசெய்ய முட்டை, பால், பருப்பு வகைகள் உணவில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் .

காய்ச்சல் அதிகம் இருக்கின்ற நாட்களில் கூடுதலாக நீர் ஆகாரங்கள் சிறந்ததாகச் சொல்லப்படுகிறது, காய்ச்சல் குறைவடைய சத்தான மிதமான காரம் இல்லாத உணவு வகைகளை கொண்டு காய்ச்சல் நோயாளியைப் பராமரிக்கலாம்.

நோயாளி விரைவில் குணமடைய மருந்துகளை அடுத்து உணவு முக்கிய இடத்தைப் பெறுகிறது. அதிக காரம் நிறைந்த மசாலா மற்றும் கொழுப்பு அதிகமுள்ள இறைச்சி உணவுகள் காய்ச்சல் நோயாளிக்கு வழங்கப்பட்டால் வயிற்றோட்டம் வயிற்றுளைவு வாந்தி போன்ற வேறு பல நோய்களையும் அவர் சந்திக்க வேண்டி இருக்கும். அன்போடும் பரிவோடும் வழங்கப்படுகின்ற உணவு நோயாளி குணமாவதில் பெரும் பங்கு அளிக்கிறது.

துறைமுக நகரும்...

ஆட்சியாளர்களைத் தெரிவு செய்கின்றனர். துறைமுக நகரம் பற்றிய அதிக வாதப் பிரதி வாதங்களும் எதிர்ப்புகளும் ஊடகங்களில் வெளியான போதிலும் நாடாளுமன்ற வாக்கெடுப்பில் 148 உறுப்பினர்கள் ஆதரவளித் துள்ளனர். 150 பேர் என்கிற மூன்றிலிரண்டு பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரவளித்தனர் என்கிறது ஆட்சித் தரப்பு வெளிநாட்டுப் படுகடன்களை வட்டியுடன் மீளச் செலுத்தும் விடயத்தில் பொதுமக்களின் வரிப் பணமே அதனை ஈடுசெய்யப்படுகிறது. இதில் பெரும் பகுதி வரிப்பணத்தைச் சிங்கள மக்களே செலுத்துகிறார்கள். ஆனால் அவர்கள் அது பற்றிப் பேசுவதைவிட சிறுபான்மை இனங்களைச் சேர்த்த தமிழ், முஸ்லிம் தலைவர்களே அதிகம் அலட்டிக் கொள்கின்றனர்.

எந்தக் கோணத்தில் பார்த்தாலும் சீனாவின் துறைமுக நகர விடயத்தில் தமிழரின் வகிபாகம் குறைவாகவே உள்ளது. தமிழ் அரசியல்வாதிகள் அரசியல் திட்டம் ஒன்றை எதிர்ப்பதன் மூலம் தமிழர் மத்தியில் தம்மை வீரர்களாகக் காட்டிக் கொள்கின்றனர். ஆகத், தமிழ்த் தலைவர்கள் கோவில் பரப்புரைக்காரர்களைப் போல கதைப்பார்களே தவிர செயற்படப்போகிறவர்கள் இல்லை. வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒருவர் மட்டுமே சிங்கள வருக்கு நிகராகத் தமிழர் முன்னேற வேண்டும் எனச் சிந்தித்து அதற்கான கட்டமைப்புகளை உருவாக்கியவர். அதனால் தான் எல்லோரும் சேர்ந்து அவரைக் களத்திலிருந்து அப்புறப்படுத்தி விட்டார்கள்.

முன்னணி இசையமைப்பாளரான யுவன் சங்கர் ராஜா 2014ஆம் ஆண்டு இஸ்லாம் மதத்தைத் தழுவினார். மேலும், அப்துல் காலிக் என்று தனது பெயரையும் மாற்றினார். 2015ஆம் ஆண்டு ஷாஃப்ரூன் நிஷா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இவர் ஆடை வடிவமைப்பாளராக உள்ளார். இந்தத் தம்பதியினருக்கு ஒரு மகள் இருக்கிறார்.

யுவனின் மனைவி பெரிதாக எந்தவொரு திரையுலக நிகழ்ச்சிக்கும் வருவதில்லை. ஆனால், இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தொடர்ச்சியாக

எங்கள் பேச்சு வழக்கு மொழி ஈழத் தமிழர் போல இருக்கும்

இசையமைப்பாளர் யுவனின் மனைவி பேட்டி

இயங்கி வந்தார். ஊடகங்களுக்கு பெரிதாகப் பேட்டியும் அளித்ததில்லை.

இந்த நிலையில், முதன் முறையாக யூரியூப் தொலைக்காட்சிக்கு அவர் பேட்டி அளித்துள்ளார்.

''உங்களுக்குச் சொந்தமான எது தற்போது யுவனுக்குச் சொந்தமாக மாறியுள்ளது?''

"என் குடும்பம். விளையாட்டாக ஏதாவது வாதிடும்போதுகூட என் குடும்பத்தினர் அவர் பக்கமே நிற்பார்கள். அவர்கள் வீட்டு மகனைப் போல அவரிடம் அவ்வளவு இயல்பாக இருப்பார்கள். என் குடும்பம் அவரது குடும்பம் போல இப்போது மாறிவிட்டது."

''யுவனின் மனைவியாக இருப்பதில் சிறந்த விஷயம் என்ன, மோசமானது என்ன?''

"யுவனின் மனைவி என்பதாலேயே எனக்கு நன்றாகப் பாடத் தெரியும், இசையைப் பற்றி நன்றாகத் தெரியும் என்று நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அதில் உண்மையில்லை. உண்மை இதற்கு நேரதிரானது. எனவே இதுதான் மோசமான விஷயம்.

சிறந்த விஷயமும் இசைதான். ஏனென்றால் அவர் உருவாக்கும் இசையை மற்றவர்கள் கேட்கும் முன்னால் நான் முதலில் கேட்டு அனுபவிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கிறது."

''உங்களுக்குள் நடந்த அபத்தமான விவாதம் என்ன?''

"எங்கள் இருவரின் பேச்சு வழக்கும் வித்தியாசமானது. எங்கள் மகள் ஸியாவுக்கு என்ன தமிழைச் சொல்லித் தர வேண்டும் என்று வாதிடுவோம். நான் ராமேஸ்வரத்துக்கு அருகில் கீழக்கரையைச் சேர்ந்தவள். எங்கள் தமிழ் வித்தியாசமாக, இலங்கைத் தமிழின் தாக்கத்தோடு இருக்கும். தினசரி பேசும் வார்த்தைகள் முற்றிலும் வித்தியாசமான தனித்துவமானதாக இருக்கும். எனது பேச்சுவழக்கு நாட்டுப்புறம் என்று அவர் சொல்வார். நான் அவருடைய பேச்சு வழக்கை அப்படிச் சொல்வேன். இதுதான் வழக்கமாக எங்களுக்குள் விவாதம். இதில் முக்கியமான விஷயம் என்றால் எங்கள் பேச்சு வழக்குகளை என் மாமனார் கிண்டல் செய்வது நகைச்சுவையாக இருக்கும்."

''உங்களை அதிகம் எரிச்சலூட்டுவது எது?''

"தோற்றத்தை மட்டும் வைத்து ஒரு விஷயத்தைப் பற்றித் தீர்மானிப்பது. இந்த ஒட்டுமொத்த உலகத்தையும் நாம் பார்க்கும் ஜன்னல், நாம்தான். இந்தப் பழமொழி எனக்குப் பிடிக்கும். நமது ஜன்னல் அழுக்காக இருந்தால் நாம் பார்க்கும் உலகமும் அழுக்காகத்தான் இருக்கும் என்பதுதான் என் எண்ணம். இன்னொரு விஷயம் பாரபட்சம்.

மற்றவர்களை முன் தீர்மானத்தோடு அணுகுவது. மற்றவர்களின் வாழ்க்கையில் போராட்டமோ, பிரச்சினையோ இல்லை என்று பேசுவது. என் பெயர் ஸஃப்ரூன் நிஸார். உருது, இந்தி போன்ற மொழிகளை நான் பேசுவேன் என்று எனது பெயரை வைத்து மக்கள் நினைப்பார்கள். உண்மை என்னவென்றால் நான் ஒரு தமிழச்சி. தமிழ் என் தாய் மொழி."

''உங்களுக்குப் பிடித்த இசையமைப்பாளர் யார்?''

"இளையராஜா"

''யுவனிடம் இருந்து நீங்கள் கற்றுக்கொண்டது?''

"எதற்கும் அதிகம் எதிர்வினையாற்றுவதில்லை. யாராவது கோபப்படுத்தினாலோ அல்லது சீண்டினாலோ கூட அதற்கு அவர் எதுவும் பதிலளிப்பதில்லை.

(21ம் பக்.பார்க்க)

தோற்றத்தை மட்டும் வைத்து ஒரு விஷயத்தைப் பற்றித் தீர்மானிப்பது. இந்த ஒட்டு மொத்த உலகத்தையும் நாம் பார்க்கும் ஜன்னல், நாம்தான். நமது ஜன்னல் அழுக்காக இருந்தால் நாம் பார்க்கும் உலகமும் அழுக்காகத்தான் இருக்கும்

கொரோனா...

எனினும், குழந்தைகளுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துவதன் மூலம், மற்றவர்களின் உயிரைக் காக்கலாம். குழந்தைகளுக்கு தொற்று பாதிப்பு அதிகம் இல்லாவிட்டாலும், அவர்கள் தொற்றுக்கு உள்ளாகி, அக்குழந்தைகள் மூலம் பிறருக்கு பரவாமல் தடுக்க தடுப்பூசி உதவும்.

"ஏற்கனவே கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களும் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டுமா?"

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அடுத்த சில மாதங்கள் வரை மீண்டும் கொவிட் உண்டாவதற்கான வாய்ப்பு குறைவாக இருப்பதாகவே கருதப்படுகிறது. ஏனென்றால் முதலில் கொவிட் உண்டானபோது அதற்கு எதிரான நோய் எதிர்ப்பான்களை (antibodies) உடல் உற்பத்தி செய்து விடும்.

இதனால் மீண்டும் தொற்று உண்டாகும் பொழுது இந்த நோய் எதிர்ப்பான்கள் கொரோனா வைரஸை எதிர்த்துப் போரிட்டு அழிக்கும். ஆனால் இந்த எதிர்ப்பாற்றல் ஆயுள் முழுவதும் நீடிக்காது. அடுத்த சில மாதங்கள் மட்டுமே நீடிக்கும். எனவே கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களும் தடுப்பூசி எடுத்துக் கொள்வது அவசியமாகிறது.

ஒருவேளை இரண்டாவது முறை தாக்கும் கொரோனா வைரஸ், மரபணு மாற்றமடைந்த வேறு ஒரு திரிபாக இருந்தால் முதலில் தொற்று உண்டானபோது உடலில் உண்டான நோய் எதிர்ப்பான்கள் இரண்டாவது முறை தொற்று வரும்போது உடலுக்குள் வந்த கிருமிகளை எதிர்த்து சிறப்பாக செயல்படும் என்றும் கூற முடியாது.

"தடுப்பூசி எடுத்துக் கொண்டு பின்பு முக கவசம் அணிதல், சமூக விலகல் என்பவற்றைக் கடைபிடிக்க தேவையில்லையா?"

கொரோனா தடுப்பூசி எடுத்துக் கொண்டவர்களுக்கு ஒருவேளை கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டால் அது கோவிட்-19 நோயாக மாறாமல் தடுப்பூசி பாதுகாப்பளிக்கும். எனினும் அவர்களது உடலில் இருக்கும் வைரஸ் பிறருக்கு பரவி அவர்களுக்கு நோயை உண்டாக்க வாய்ப்புண்டு. எனவே தடுப்பூசி போட்டுக் கொண்டாலும் நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்காக சமூக இடைவெளியைப் பின்பற்றுதல், முகக் கவசம் அணிதல், அடிக்கடி கைகளைக் கழுவிக் கொள்ளுதல் போன்றவற்றை முறையாகப் பின்பற்றவேண்டும்.

றுவாண்டா இனப் படுகொலையை தடுக்கத் தவறியது பிரான்ஸ் நாடு

ஏற்றுக்கொண்டார் அதிபர் மக்ரோன்

■ பாரிஸிலிருந்து குமாரதாஸன்

பிரான்ஸின் அதிபர் எமானுவல் மக்ரோன் றுவாண்டாவுக்கு பயணப்பட்டுள்ளார். கடந்த இருபது வருட காலத்தில் அங்கு சென்றுள்ள முதலாவது பிரெஞ்சுத் தலைவர் அவரே ஆவார்.

தலைநகர் கிகாலியில் அவர் நிகழ்த்திய முக்கியத்துவம் மிக்க உரையில், 1994 இல் அங்கு நிகழ்ந்த இனப்படுகொலையில் பிரான்ஸுக்கு உள்ள "பொறுப்பு களை" (responsabilit's) ஏற்றுக்கொண்டார். ஆனால் படுகொலைகளில் பிரான் ஸுக்கு நேரடியான பங்கு ("complicity") இருப்பதை மறுத்த அவர், தனது நாட்டுக்குள்ள பொறுப்புக்களை அங்கீகரிப்பதற் காகவே இங்கு வந்துள்ளேன்" என்று அறிவித்தார்.

வெளிப்படையாக மன்னிப்புக் கோருவதைத் தவிர்த்த அவர் "எங்களுக்கு நாங்களே மறந்து மன் னிப்பை (forgive) பரிசளிப்போம்" என்று கூறி பிரான்ஸின் வருத்தத்தை வெளியிட்டார்.

படுகொலைகள் நிகழ இருப்ப தைத் தெரிந்துகொண்டும் பிரான்ஸ் அதனைத் தடுக்கத் தவறியது என்பதையும் அந்த உண்மையைப் பரிசோதிப்பதில் நீண்ட காலம் நீடித்த "மௌனம்" றுவாண்டா மக்களுக்கு மேலும் துன்பங்களைக் கொடுத்தது என்றும் மக்ரோன் ஒப்புக் கொண்டார்.

"படுகொலையில் ஒரு பங்காளி யாக இல்லாவிடினும் றுவாண்டாவில் பிரான் ஸுக்கு ஒரு முக்கிய பாத்தி ரமும், சரிதமும்,அரசியல் பொறுப் புகளும் இருக்கின்றன. எனவே அதற்கான ஒரு கடமை இருக்கிறது. வரலாற்றுக்கு முகம் கொடுப்பதும் றுவாண்டா மக்களுக்கு அது ஏற் படுத்திய வலிகளின் அளவை அங்கீகரிப்பதும் அந்தக் கடமை ஆகும் "-என்று மக்ரோன் தனது உரையில் குறிப்பிட்டார்.

படுகொலைகள் நிகழ்ந்து 27 ஆண்டுகளுக்குப் பிறகு றுவாண்டா சென்றுள்ள அதிபர் மக்ரோன் அங்கு தலைநகரில் Gisozi என்னும் பகுதியில் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் பேரது எச்சங்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்ற நினைவிடத் தில் (Genocide Memorial) அந்தநாட்டின் அதிபர் போல் கஹமேயுடன் (Paul Kagame) சேர்ந்து அஞ்சலி செலுத்தினார். பிறகு அங்கு உரை நிகழ்த்தினார்.

சமீப வரலாற்றில் உலகை உலுக் கிய றுவாண்டா இனப்படுகொலைக ளில் பிரான்ஸின் பங்கு என்ன என்பது தொடர்பில் நீடித்துவருகின்ற சர்ச்சைகளுக்கு மத்தியில் கொலை கள் நடந்த மண்ணில் பிரெஞ்சு அரசுத் தலைவர் ஆற்றிய உரை முக்கியமான ஒன்றாகப் பார்க்கப்படு கிறது.

ஆனால் சுமார் எட்டு லட்சம் துட்சி மக்களது படுகொலை களைத் தடுப்பதில் அன்றைய பிரான்ஷுவா மித்ரோன் அரசு இழைத்த தவறுக்காக பிரான்ஸின் உத்தியோக பூர்வ ரீதியான ஒரு மன்னிப்பு வார்த்தை யைப் படு கொலையில் உயிர்தப்பிய சிலர் நீண்ட காலமாக எதிர்பார்த்துக் காத்திருக் கின்றனர்.

அவர்க ளுக்கு மக்ரோ னின் இன்றைய உரை ஏமாற் றமாக அமைந் திருக்கிறது. எனினும் மக்ரோனின் வார்த்தைகள் "மன்னிப்பைக் காட்டிலும் மதிப்பு மிக்கவை" என்று றுவாண்டா அதிபர் போல் கமஹே வரவேற் றுள்ளார். பொறுப்புகளை ஏற்றுக் கொண்ட அவரதுசெயல் துணிகர மானது என்றும் கமஹே குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸின் அரசுத் தலைவர் ஒருவர் 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் றுவாண்டாவுக்கு பயணப் படுவது இதுவே முதல் முறையாகும். அங்கு நிகழ்ந்த கொடூர இனப்படு கொலை சம்பந்தமாகக் கடந்த மார்ச்சிலும் ஏப்பிரலிலும் வெளியா கிய இரண்டு விசாரணை அறிக் கைகளின் முடிவுகளே மக்ரோனின் முக்கியத்துவம் வாய்ந்த கிகாலி பயணத்திற்கு வழியேற்படுத்தின.

1994 இல் றுவாண்டாவில் படு கொலைக்கு முன்னரும் பின்னரும் அது நிகழ்ந்தபோதும் பிரான்ஸ் வகித்த பங்கு என்ன என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப் பதற்காக அதிபர் மக்ரோன் நியமித்த வரலாறுத்துறை நிபுணர்கள் அடங் கிய தனிக் குழு அதன் ஆயிரம் பக்கங்கள் கொண்ட அறிக்கையை கடந்த ஏப்ரலில் எலிஸே அதிபர் மாளிகையிடம் கையளித்திருந்தது.

துட்சி இனப்படுகொலையில் பிரான்ஸுக்கு நேரடியான பங்கில் லாவிடினும் தீவிரமான பெரும் பொறுப்பு (heavy and overwhelming responsibilities) இருக்கிறது என்றும்-இனவாதமும் ஊழலும் மிகுந்த ஹுட்டு இன அதிபர் ஜுவனல் ஹபரிமானாவின் அரசுக்கு "அரசியல்" வழிமுறைகளில் "கண்மூடித்தனமாக" வழங்கிய ஆதரவின் மூலம் பிரான்ஸ் படு கொலைகளுக்கான பொறுப்பைச் சுமப்பதாகவும் அந்த அறிக்கை தீர்ப்பளித்திருந்தது.

100 நாட்களில் சுமார் எட்டு லட்சம் துட்சி இன மக்கள் படு கொலை செய்யப்பட்ட சமயத்தில் பிரான்ஸில் ஆட்சியில் இருந்த அதிபர் பிரான்ஷுவா மித்ரோனின் றுவாண்டா தொடர்பான கொள்கை களை அந்த அறிக்கை தத்துவ ரீதியில் "குருட்டுத்தனமானது" (ideologically blind) என்று குறிப்பிட்டிருந்தது.

ஆபிரிக்க நாடான றுவாண்டாவில் 1994 இல் எட்டு லட்சம் துட்சி இன மக்கள் வெட்டிக் கொன்று குவிக்கப்பட்ட பெரும் படுகொலைக் களுக்குப் பிறகு பிரான்ஸுக்கும் அந்த நாட்டுக்கும் இடையிலான உறவுகள் முறிந்தன. படுகொலைகள் நிகழ்ந்த சமயம் பிரான்ஸில் அதிகா ரத்தில் இருந்த அதிபர் பிரான்ஷுவா மித்ரோனின் அரசு துட்சி மக்களைப் படுகொலை செய்த ஹுட்டு இன ஆட்சியாளர்களுக்கு ஆதரவளித்து வந்தது. இதனால் படுகொலைகளில் பிரான்ஸுக்கும் பங்கு உள்ளது என்ற

குற்றச்சாட்டு நீண்ட காலமாக உள்ளது. ஆனால் பிரான்ஸ் தனது பங்கு பற்றித் தொடர்ந்தும் மௌன மாக இருந்து வந்தது. படுகொலை களுக்காக மன்னிப்புக் கோர வேண்டும் என்று விடுக்கப்பட்டு வந்த வேண்டுகோள்களுக்கும் அது செவிசாய்க்கவில்லை.

றுவாண்டா படுகொலைகளை இனப்படுகொலையாக உலகம் அங்கீகரித்த போதிலும் அதில் பிரான்ஸின் பங்கு என்ன என்ற கேள்வி சர்ச்சைக்குரிய ஒன்றாக இருந்து வருகிறது. இந்த நிலையில் அதிபர் மக்ரோன் பதவிக்கு வந்த பிறகு றுவாண்டாவுடனான உறவையும் இரு தரப்பு நம்பிக்கை களையும் மீளவும் கட்டியெழுப்பு வதற்காகப் பல நடவடிக்கைகளை எடுத்து வந்தார். அவற்றில் ஏற்பட்ட முன்னேற்றங்களே அவரது தற்போ தைய பயணத்துக்கான பாதையைத் திறந்தது.

படுகொலைகள் நிகழ்ந்து 27 ஆண்டுகளுக்குப் பிறகு றுவாண்டா சென்றுள்ள அதிபர் மக்ரோன் அங்கு தலைநகரில் Gisozi என்னும் பகுதியில் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் பேரது எச்சங்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்ற நினைவிடத் தில் (Genocide Memorial) அந்தநாட்டின் அதிபர் போல் கஹமேயுடன் (Paul Kagame) சேர்ந்து அஞ்சலி செலுத்தினார்

கொரோனா தடுப்பூசிகளை மருத்துவர்கள் முறைகேடாக எடுத்துக்கொண்டார்களா?

■ கரிகாலன் ■

கொரோனா பெருந்தொற்றின் மூன்றாம் அலை தனது வீரியத்தை இலங்கையில் காட்டியதைத் தொடர்ந்து ஒட்டுமொத்த மக்களும் ஆடிப்போயிருக்கிறார்கள். இதுவரையில் கொரோனாவைக் கடந்துவிடலாம் அல்லது அதனோடு வாழ்ந்துவிடலாம் என்கிற அசட்டுத் துணிச்சலோடு இருந்தவர்கள்கூட இப்போது அடக்க ஒடுக்கமாக இருப்பதற்கு முயற்சிக்கிறார்கள்.

இந்தப் பேராபத்தில் இருந்து தப்புவதற்கான தடுப்பூசிகளை அரசு முதலிலேயே கொண்டுவராமல் விட்டமை தவறு என்று குறைசொல்லவும் குற்றஞ்சாட்டவும் தொடங்கியிருக்கிறார்கள். இந்த நிலையில்தான் ஏற்கனவே வந்த தடுப்பூசிகள் மருத்துவர்களால் முறைகேடாகத் தமது குடும்பத்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் ஏற்றப்பட்டிருக்கின்றன என்கிற குற்றச்சாட்டு எழுந்திருக்கின்றது.



கொழும்பு டெலிகிராப் இணையத் தளம் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தி ஒரு கட்டுரையை வெளியிட்டுள்ளது. இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உள்ளேயே இருந்து சிலரால் வழங்கப்பட்டவை என்று அந்தத் தளம் தெரிவிக்கும் சில ஆவணங்களையும் இதற்கு ஆதாரமாக அது வெளியிட்டுள்ளது.

அந்த ஆவணங்களில் மருத்துவர்கள் தமது மனைவி, பிள்ளைகள், தாய், தந்தையர், மனைவியின் தாய் தந்தையர் என்று பலருக்குமாக தடுப்பூசியைப் பெற்றிருக்கின்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதிலும் தடுப்பூசியின் முதலாவது டோஸை எடுத்துக்கொண்டவர்களுக்குப் போடுவதற்காக வழங்கப்பட்ட இரண்டாவது டோஸ் தடுப்பூசிகள் உரியவர்களுக்குப் போடப்படாமல் மருத்துவர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்குப் போடப்பட்டிருப்பதாக கொழும்பு டெலிகிராப் தெரிவிக்கின்றது.

தடுப்பூசித் திட்டம்

இலங்கைக்கு கொரோனா தடுப்பூசிகளை இந்தியா முதலில் வழங்கியிருந்தது. அது ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அஸ்டரா ஸெனேக்கா தடுப்பூசி. இது இரு கட்டங்களாகப் போடப்படவேண்டிய தடுப்பூசி.

இந்தியா கொடுத்த தடுப்பூசிகளை கொரோனா போராட்டத்தில் முன்களப் பணியாற்றி வருபவர்களான மருத்துவர்கள் மற்றும் சுகா தாரத்துறையினருக்கு ஏற்றுவது என்று ஆட்சியாளர்களால் கொள்கை முடிவு எடுக்கப்பட்டது. அதன் பின்னர் வயதானவர்களுக்கும் முதலில் தடுப்பூசி ஏற்றுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி தடுப்பூசிச் செயற்றிட்டம் தொடங்கப்பட்டது.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை தொடங்கப்பட்ட நிலையில் இந்தியாவில் திடீரென கொரோனா பாதிப்பு அதிகரித்ததை அடுத்து அங்கு தடுப்பூசிகளுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் இந்த இலங்கைக்கு உரிய நேரத்தில் அடுத்தடுத்த கட்ட தடுப்பூசிகள் கிடைப்பது சிக்கலுக்குள்ளானது.

அதற்கிடையில் 9 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு அஸ்ட்ரா ஸெனேக்கா தடுப்பூசிகள் போடப்பட்டிருந்தன. அவற்றை ஏற்றியவர்களில் பெரும்பாலானவர்கள் நாட்டின் வயது முதிர்ந்த குடிமக்கள்.

> **தடுப்பூசியின் முதலாவது டோஸை எடுத்துக்கொண்டவர்களுக்குப் போடுவதற்காக வழங்கப்பட்ட இரண்டாவது டோஸ் தடுப்பூசிகள் உரியவர்களுக்குப் போடப்படாமல் மருத்துவர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்குப் போடப்பட்டிருப்பதாக கொழும்பு டெலிகிராப் தெரிவிக்கின்றது**

தடுப்பூசித் திட்டம் செயற்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தபோதே மீதி தடுப்பூசிகளைப் பெறமுடியாத சிக்கல் ஏற்பட்டதால் அதுவரை போடப்படாது இருந்த தடுப்பூசிகளை நிறுத்தி வைத்த சுகாதார அமைச்சு அவற்றை ஏற்கனவே முதல் டோஸ் ஏற்றிக்கொண்ட வர்களுக்கான இரண்டாவது டோஸாகப் பயன்படுத்தத் தீர்மானித்து.

இவ்வாறு இரண்டாவது டோஸாகப் போடுவதற்கென வழங்கப்பட்ட தடுப்பூசிகளே மருத்துவர்களின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்குமாக எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதே இப்போது எழுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டு.

பொதுமக்களுக்கு சீன மற்றும் ரஷ்ய தடுப்பூசிகளை வழங்கி விட்டு தமக்கும் குடும்பத்தினருக்கும் மட்டும் அஸ்ட்ரா ஸெனேக்கா தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதற்கு மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் முற்படுவது எந்த வகையில் நியாயமானது என்று கொழும்பு டெலிகிராப் கேள்வி எழுப்பியிருக்கின்றது.

மருத்துவர்களின் குடும்பங்கள் மட்டும் பாதுகாப்பாக இருந்தால் போதுமானதா என்றும் அது கேள்வி எழுப்பியிருக்கின்றது.

அமேசானில் அடங்கிய எம்.ஜி.எம்.

உலக இணையவழிச் சந்தையை ஆட்சி செய்துவரும் அமேசான் நிறுவனம், ஓடிடி துறையிலும் கோலோச்சி வருகிறது. இந்நிலையில் 4 ஆயிரம் ஹாலிவுட் திரைப்படங்கள், 17 ஆயிரம் மணிநேர தொலைக்காட்சி தொடர்கள், நிகழ்ச்சிகளை தன்வசம் வைத்திருக்கும் எம்.ஜி.எம். நிறுவனத்தை 8.45 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு விலைபேசி முடித்து அதிகாரபூர்வமாக அமேசன் வாங்கிவிட்டதாக அறிவித்துவிட்டார்கள். இனி ஜேம்ஸ் பாண்ட் படங்களையும் '12 ஆங்கிரி மென்' போன்ற அட்டகாசமான ஆக்‌ஷன் காவியங்களையும் அமேசானில் ரசிகர்கள் காணலாம். இந்த டீல் , நெட்ஃபிளிக்ஸ், டிஸ்னி + ஹாட் ஸ்டார் ஆகிய நிறுவனங்களுக்கு பலவீனம் என்று கூவுகிறார்கள் ஓடிடி மீடியேட்டர்கள்.

உந்தக் கொரோனா மாதிரி பார்த்ததில்ல..!

19

என்.குமரன்

வெளுத்துவாங்கும் மகேந்திரத்தார்

மகேந்திரத்தாரின்ர வீட்டு வளவுக்குள்ள நான் நுழைந்தபோது வாழைக்குத் தண்ணி கட்டிக் கொண்டு நிண்டார் அவர். "என்ன தம்பி உந்தக் கொரோனா என்ன சொல்லுது? ஊரடங்கும் எடுக்கமாட்டாங்கள் போலக் கிடக்கு, சனங்களும் சாப்பாட்டுக்கு என்ன செய்யிறதெண்டு தெரியாமல் நிக்குதுகள்... அடுத்த கட்டம் என்ன செய்யப் போறமோ தெரியேல்ல.." என்று சொல்லியபடியே வந்தமர்ந்தார்.

காற்றோட்டமாக நாள்காலியில் அமர்ந்த உடனேயே கள நிலவரத்தைப் பிய்த்து உதறத் தொடங்கிவிட்டார்.

"உந்தச் சண்டையில எங்கடையாக்கள்பட்ட கஸ்டத்தைவிட உந்தக் கொரோனாவால படுற கஸ்டம் அதிகமா வரப்போகுது போல கிடக்குது, என்ன தம்பி? உப்பிடியே போனால் எல்லாற்றை பாடும் கரைச்சல்தான்.. என்னதான் பணக்காரரா இருந்தாலும் வருத்தம் எண்டு வந்திட்டால் எல்லாரும் சமம்தான் தம்பி..

பத்து வருசத்துக்கு முன்னுக்கு சண்டை நடந்திச்சுது. அந்தச் சண்டையில துவக்குச் சூட்டுக்கும், செல்லடிக்கும் சாகிறாக்கள் சாக மிச்சம் இருந்ததுகள் தப்பி ஓடி வந்திச்சுதுகள். அப்பிடி வந்ததுகள் கடைசி நேரம் கையில ஒண்டும் இல்லாமலுக்குப் பட்டினியால கஸ்ரப் பட்டுதுகள். அதுக்குப் பிறகு ஓரளவுக்கு எல்லாம் சரியாகி நிம்மதியா வாழவெளிக்கிட இப்ப உந்தக் கொரோனா வந்து நிக்குது. கொரோனாவும் எங்கட சனத்தைப் பட்டினியாக்கப் போகுதோ எண்டுதான் பயமாக் கிடக்குது.

நான் தனியா எங்கட நாட்டையும் எங்கடை பிரதேசத்தையும் பற்றிக் கதைக்ககூடாது. ஏனென்டா இண்டைக்கு பெரிய பெரிய நாடுகள் குடுத்தி கொரோனாவை கட்டுப்படுத்த முடியாமல் படாதபாடு படுகினம்.. அப்பிடிப் பாக்கப் போனால் உந்த முதலாவது அலை, இரண்டாவது அலை எண்டு வரேக்க எங்கடை நாடு ஓரளவுக்கு எண்டாலும் கட்டுப்பாட்டுக்குள்ள வச்சிருந்தது எண்டது பெருமைதான். இருந்தாலும் இப்ப வந்திருக்கிற மூண்டாவது அலையில நாளுக்கு ரண்டாயிரம், மூவாயிரம் எண்டெல்லோ தொற்று கண்டுபிடிக்கினம், உப்பிடி நாளுக்கு நாள் கூடிக் கொண்டு போனால் என்ன செய்யிறது எண்டதுதான் சனத்துக்குப் பயம்.

தங்களில எத்தினை பேருக்கு கொரொனா இருக்குது எண்டு சந்தேகத்தோடைதான் சனம் அலையிது. ஆனாலும் போய்ச் சோதிக்கப் பயப்பிடுதுகள், பிடிச்சு அடைச்சுப் போடுவாங்கள் எண்டதுதான் காரணம். அண்டைக்குச் சந்தைக்குப் போகவே பயமாக் கிடந்தது அங்க. ஆர் ஆருக்கு வருத்தம் இருக்குதோ எண்டு நினைச்சுப் பாக்க. என்ன செய்யிறது கிடக்கிறதுகளை கொண்டுபோய் குடுத்தால்தான் காசு வரும் எண்டு போட்டு வாழைக்குலையை கொண்டு போனான். அங்க கதைச்சாங்கள் பண்டத்தரிப்புச் சந்தையிலயும் ஆருக்கோ கொரோனாவாம் எண்டு.. நான் அதுக்குப் பிறகு ஒரு நிமிசமும் நிக்கேல்ல வந்திட்டன்.

> **கடைசி நேரம் கையில ஒண்டும் இல்லாமலுக்குப் பட்டினியால கஸ்ரப்பட்டுதுகள். அதுக்குப் பிறகு ஓரளவுக்கு எல்லாம் சரியாகி நிம்மதியா வாழவெளிக்கிட இப்ப உந்தக் கொரோனா வந்து நிக்குது.**

இதுக்கு முதலும் டெங்கு, சிக்கன்குனியா, மலேரியா, கொலோறா எண்டு கன வருத்தம் வந்ததுதான் ஆனாலும் உந்தக் கொரோனா மாதிரி ஒரு வருத்தமும் இதுக்கு முதல் வரேல்ல. அதுகள் வந்து கொஞ்சக் காலம் உலுப்பினதுதான் எண்டாலும் கொரோனா எங்கட சனத்தைப் போட்டு உலுப்புமாப் போல இல்ல.

கொரோனா கொஞ்சம் கூடினதும் எங்கடை ஆட்சியாளர்கள் ஊரடங்கு, பயணத்தடை கட்டுப்பாடு எண்டு அடிக்கடி போடுகினை. அப்பிடிப் போடுறது எங்கட பாதுகாப்புக்காக இருந்தாலும், அது தொடர்ந்து இருக்கேக்க சாதாரண வாழ்க்கைய வாழுற ஒரு குடும்பத்தின்ர நிலமை சரியான கஸ்ரம்தானே தம்பி. இருக்கிறதை வச்சு ஒரு கிழமை ரண்டு கிழமை சமாளிக்கலாம். தொடர்ந்து உப்பிடியே போனால் என்ன செய்யிறது?

போனமுறை ஊரடங்கு போட்டிருக்கேக்க வீடு வீடா சாமானுகள் குடுத்தவை. அதுவும் எத்தினை நாளுக்கெண்டு காணும்? சரி சாப்பாட்டு விசயத்தை ஓரளவுக்கு சமாளிக்கலாம் எண்டு பார்த்தாலும், விவசாயம் தொடங்கி வியாபாரம் வரைக்கும் இலாபம் கிடைக்கும் எண்டு நம்பி ஆயிரக்கணக்கில இருந்து லட்சக்கணக்கு வரைக்கும் காசை முதலிட்டவையின்ர நிலைமை என்னாகிறது தம்பி?

சித்திரை முடிஞ்சு வைகாசி தொடங்கேக்கதான் பெரும்பாலும் எங்கடையாக்கள் வெங்காயம், மிளகாய், தக்காளி எண்டு பல பயிர்களையும் நடுவினை. ஆனால் உந்தக் கொரோனா வந்து இந்த நேரத்திலதான் போனமுறையும் ஒண்டுமில்லாமல் பண்ணிச்சுது, இந்த முறையும் வந்து நிக்குது. உதாலை விவசாயத்தையே நம்பி குடும்பத்தை கொண்டு போறவைக்கு பெரிய இழப்புத்தான். வியாபாரங்கள் செய்யிறவையும், கடன் பட்டோ இல்லாட்டிக்கு வட்டிக்கு காசு வாங்கியோ சின்ன முதல் போட்டு சாமானுகளை வாங்கி வியாபாரம் தொடங்கின பலபேரும் கொரோனா வந்ததால சாமானுகள் விக்கேலாமலுக்கு கடையைப் பூட்டினதால என்ன செய்யிறது எண்டு தெரியாமல் நிக்கினம். உப்பிடிப் பலரும் தங்கட நிலமையை நினைச்சுக் கவலைப்படுகினம்.

ஒரு பக்கத்தால வருத்தம் கூடிக்கொண்டே போகுது. அதைக் கட்டுப்படுத்திறதுக்கு என்ன செய்யிறது எண்டு தெரியாமலுக்கு அரசாங்கம் முழிக்கினம். அதேபோல சனத்தின்ர பாடும் கஸ்ரமாக் கிடக்கு. ஒருபக்கம் இனிவரப் போற நாள்களை பசியில்லாமலுக்கு எப்பிடி கொண்டு போப்போறம் எண்டு நினைக்கிற ஏழை மக்கள் இருக்கினம். அதேபோல தங்கடை கடன், வட்டி எண்டு அதுகளை என்ன செய்யிறது எண்டு முதலாளிமாரும், வியாபாரம் செய்யிறவையும் யோசிக்கினம். இது எல்லாத்துக்கும் கடவுளாப் பாத்து நல்ல வழி ஒண்டைக் காட்டினால்தான் உண்டு, இல்லாட்டிக்கு நான் முதலே சொன்ன மாதிரி அடுத்த கட்டம் என்ன செய்யிறது எண்டு தெரியாது!

மூச்சு விடாமல் மளமளவென்று சொல்லி முடித்தார் மகேந்திரத்தார். எதிர்காலம் குறித்த கேள்விக்குறி அவர் முகத்தில் இருக்கும் வழக்கமான உற்சாகத்தைத் தொலைத்திருந்தது.

(தொடரும்)

எங்கள் பேச்சு வழக்கு ....

நான் கூடப் பல தடவைகள் நீங்கள் என்ன சாமியாரா என்று அவரைக் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். ஆனால் காலப் போக்கில் அவரிடமிருந்து அந்தக் குணத்தைக் கற்றுக்கொள்வதற்கு முயற்சிக்கின்றேன்."

''உங்களை கடுமையாகப் பாதித்த பாடல் என்றால் எதைச் சொல்வீர்கள்"

''பேரன்பு படத்தில் வந்த செத்துப் போச்சு மனசு என்கிற பாடல்தான். மிகவும் மனச்சோர்வான ஒரு நிலையிலிருந்து தொடங்கும் இந்தப் பாடல் பின்னர் ஒரு நேர்ச் சிந்தனையோடு முடிவுறும்."

"யுவனின் ரசிகர்களை வியக்க வைக்கும்படி அவரைப் பற்றி நீங்கள் சொல்லக்கூடிய இரகசியம்?"

"விரைவில் யுவனின் தயாரிப்பில் தனிப்பட்டவர்கள் பலரையும் அறிமுகப்படுத்தவுள்ளார். அதற்காகத்தான் யுவன் ரெக்கோர்ட்ஸைத் தொடக்கியுள்ளார். அது அவரையும் அவரது ரசிகர்களையும் இன்னும் நெருக்கமாகக் கொண்டுவரும் என்று நினைக்கிறேன்."

''யுவன் அப்பாவித்தனமாக மேற்கொள்ளக்கூடிய தவறு என்ன?"

"அவருக்கு மிக நெருக்கமானவர்களிடம் வம்பிழுப்பார். வேடிக்கைக்காகத்தான் அப்படிச் செய்வார். அடுத்தவர் அழும் வரைக்கும் வம்பிழுப்பார். கடைசியில் சிறிய சண்டையில் அது முடியும். ஆனால் தனக்கு மிக நெருக்கமானவர்களிடம் மட்டும்தான் அவர் இதைச் செய்வார். இது எல்லோருக்கும் தெரியாது."

"யுவனிடம் நீங்கள் கண்ட மிகச் சிறந்த வேடிக்கைக் குணம் என்றால் எதைச் சொல்வீர்கள்?"

"நிறைய உண்டு. இந்த முடக்க காலத்தில் எல்லோரும் வெளியே போக முடியாதிருந்தபோது ஒருநாள் ட்ரிம்மரை வைத்து தலை முடியைச் சரியாக்கிக்கொண்டிருந்தார். திடீரென என் பெயரைச் சொல்லி கத்தினார். நான் என்னவோ ஏதோவென்று பதறிப் போய்ப் பார்த்தால், ட்ரிம்மரை சரியாகப் பிடிக்காததால், அது ஒரு பக்கத்து முடியை அப்படியே வழித்தெடுத்து விட்டது. பிறகு அவன், இவன் பட ஆரியா மாதிரி சிகை அலங்கா ரத்துடன் கொஞ்ச நாள் சுற்றிக் கொண்டிருந்தார்."

கோ கோ

சிறப்புத் தினங்களையொட்டி

இறந்தவர்களுக்கு உணவு வகைகளைச் சமைத்துப் படையல் ஆக்குகின்ற நம்மவர்களின் நம்பிக்கைச் சடங்கைப்போலதான், மெக்சிக்கோ மக்கள் மத்தியிலும் இறந்தவர்களை நினைந்துருகும் பொதுவான நாளொன்று உள்ளது.

ஆடி அமவாசை, சித்திராப் பௌர்ணமிபோல என்று அதை எண்ணிக்கொண்டாலும் தவறில்லை. அத்தகையதொரு இறந்தோர் நாள் குறித்த பாரம்பரிய விடயத்துடன் இன்னும்பல சம்பவங்களைக் கோர்த்துத் திரைக்கதையாக்கியதில் அது ஒஸ்கார் உட்படப் பல விருதுகளையும் வென்றிருக்கிறது. அதுவும் அனிமேசன் என்கிற அசைவூட்டத் திரைமொழியால்.

அந்தத் திரைப்படம்தான் கோ கோ. அசைவூட்டத் திரைப்படமான இதை இயக்கியிருக்கிறார் லீ அன்கிறிச்.

இறந்தவர்களை நினைந்துருகும் நாளன்று மிகெல் என்ற 12 வயதுச் சிறுவன் தற்செயலாக இறந்தவர்களின் உலகுக்குச் சென்று விடுகிறான். அங்கு அவன் எப்படிச் செல்கிறான் என்பது படத்தின் பிரதான கதையுடன் பொருந்தியிருக்கின்ற விடயம். அங்கு அவன் தனது மூதாதையரும் இசைக்கலைஞருமான எர்னஸ்டோ என்பவரைத் தேடுகிறான். அங்கு அவரைக் கண்டுபிடித்தானா? அங்கு நடந்த திருப்பங்கள் - மாற்றங்கள் யாவை...? அவன் கண்டறிந்த உண்மை என்ன? பின்னர் அவன் உலகுக்குத் திரும்பினானா இல்லையா? என்பதே மீதிக் கதை.

இதைச் சுவாரசியம் மிக்கதாகவும், இசையால் இலயித்துப்போக வைக்கும் திறனுடனும் அசைவூட்டத்தில் அசத்தலாகச் சித்திரித்துள்ளார்கள் திரைப்படக் குழுவினர். இதனால் தான் சிறந்த அசைவூட்டத் திரைப்படம் மற்றும் சிறந்த பாடல் என இரண்டு ஒஸ்கார்கள் இதற்குக் கிடைத்திருக்கின்றன.

படத்தின் கதை ஜேசன் காட்ஸ், ஆல்ட்ரிக் ஆகியோரின் சிறு கதையை அடிப்படையாகக் கொண்டது. இதற்கு திரைக்கதையானது, மொனினா மற்றும் மத்தேயு ஆல்ட்ரிக் ஆகியோரால் எழுதப்பட்டுள்ளது. ஒஸ்கார் மாத்திரமன்றி சிறந்த அனிமேஷன், குரல் தேர்வு, இசை, பாடல்கள், உணர்ச்சிபூர்வமான கதை, மெக்சிக்கன் கலாச்சாரத்துக்குரிய மரியாதை ஆகியவற்றால் விமர்சகர்களால் பாராட்டவும்படுகிறது.

காலணிகள் தயாரிப்பது மிகெல் குடும்பத்தின் பரம்பரைத் தொழில் ஆனாலும் மிகெல்லுக்குப் பிரபல மெக்சிகன் இசையமைப்பாளரான எர்னஸ்டோவைப்போலவே பாடகராகவும் கிற்றார் இசைக் கலைஞராகவும் ஆகவேண்டு மென்று ஆசை. அந்த ஆசையின் பின்னால்தான் அவனது குடும்பமே இசைக்குப் பிரபலம்பெற்றது என்கிற மறை தகவலும் இருக்கிறது. அதைத்தான் அவன் மறு உலகில் கண்டறிகிறான். ஆனால், இங்கோ, (உலகில்) அவனது குடும்பத்தினருக்கு இசை என்றால் பிடிக்காது.



யாருக்கும் தெரியாமல் கிற்றார் வாங்கி, பயிற்சி செய்கிறான். இவனுக்கு 'டான்டே' என்ற நாய் நண்பனாக இருக்கிறது.

இறந்தவர்களின் உலகுக்கும் நிஜ உலகுக்கும் இடையே ஒரு பாலம் இருக்கிறது. முன்னோர்களின் தினத்தன்று அவர்களின் கல்லறையில் பூக்களை வைத்து அன்புடன் நினைவு கூர்ந்தால், அவர்கள் அந்தப் பாலத்தைக் கடந்து நம் உலகுக்கு வரமுடியும் என்பது மெக்சிக்கோ மக்களின் நம்பிக்கை. அப்படி ஒரு முன்னோர்களுக்கான தினத்தில் மிகெல்லின் பாட்டியின் பாட்டியான கோகோ வீட்டுக்கு வருகிறார். அப்போது பழைய படத்தில் ஒருவரது தலை கிழிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறான் மிகெல். அவர் அவனது தாத்தாவுக்கும் தாத்தா என்பதையும், அவர்தான் பிரபல இசைக்கலைஞர் எர்னஸ்டோ என்பதையும் கண்டுபிடிக்கிறான்.

அதே நேரத்தில், மிகெல்லின் கிற்றாரை அவனது குடும்பத்தினர் கண்டுபிடித்து, உடைத்துவிடுகிறார்கள். கோபத்துடன் வெளியேறும் மிகெல், எர்னஸ்டோவின் அருங்காட்சியகத்துக்குள் நுழைகிறான். அங்கே ஒரு பாலத்தில் ஏறி, இறந்தவர்களின் உலகுக்குச் சென்றுவிடுகிறான். அவனுடனே அவனது நாயான டான்டேவும் நுழைந்துவிடுகிறது. அங்கே, ஹெக்டார் என்பவரின் உதவியுடன் தனது மூதாதையரான எர்னஸ்டோவைத் தேடுகிறான். முன்னோர்களின் தினம் ஒரே ஒருநாள் மட்டும் கடைப்பிடிக்கப்படுவதால், விடிவதற்குள்ளாக அவன் மறுபடியும் பாலத்தைக் கடந்து, நமது உலகுக்கு வந்தாகவேண்டும். இல்லையென்றால் அந்த உலகிலேயே தங்கிவிட நேரும் என்பதால், மிகெல் விரைவாகச் செயல்படுகிறான். இறுதியில் என்ன ஆனது என்பதே மீதி கதை.

உலகப் புகழ்பெற்ற - மறைந்த கிற்றார் இசைக் கலைஞரின் போலி முகம் வெளிச்சத்துக்கு வருவதுடன் அது நிறைவடைகிறது.

■

108 ரூபாய்

சூரியனில் இரண்டு நிம்மதி அற்ற ஐதரசன் அணுக்கருக்களை இணைத்து நிம்மதியான ஹீலியம் அணுக்கருவை பிறப்பிப்பதன் பொருட்டு வெளிப்படும் அதீத சக்தியில் ஒரு துளியே இவ் ஜகத்தின் தொடக்கம்.

ஆனால் இதுவரை போதுமானளவு வெற்றிகரமான அணுக்கரு இணைப்பை எம்மால் பூமியில் உருவாக்க முடியவில்லை.

அதாவது ஒரு குட்டிச் சூரியனை உருவாக்க முடியவில்லை. எம்மால் செய்யமுடிந்ததெல்லாம் அணுக்கருப் பிளப்பில் செயற்படும் அணுகுண்டும் அணுமின்னிலையமும் மட்டுமே. இவ்வாறு அளவற்ற சக்திகொண்ட இறைவி இன்னும் ஏன் இத்தனை ஏற்றத்தாழ்வுகளை சகித்துக்கொள்கிறாள். ஒன்று இந்தச் சிறுமிக்கும் வைத்தியர் ஆகும் வாய்ப்புக் கிட்டவேண்டும். இல்லை துப்பரவுத் தொழிலாளியும் வைத்தியத் தொழிலாளியும் சமமாக இந்தச் சமூகத்தினால் மதிக்கப்படவேண்டும்.

"ஹீ ஹீ ஹீ ரஷ்யாவில் மருத்துவம் படித்த உன்னையே இங்கு மருத்துவம் படித்தவர்கள் சமமாய் மதிக்க மாட்டார்கள். இதில் நீ துப்பரவுத் தொழிலாளிக்கு வக்காளத்துக்குப் போறியா?" என்மனக்குரல் சிரித்தது.

அவளைத் தூக்கி முத்தம் கொடுத்து வீட்டிற்குள் விட்டுவிட்டு மீண்டும் முச்சக்கரவண்டியை எடுத்தார். அறியாத அவ்வீதியிலிருந்து பரீட்சையமான 'ஹம்டன்' வீதியில் சென்று மிதந்தது. பயம் நீங்கியது.

"உங்கட டொக்டர்மார் என்னதான் செய்யினம் கொரோனாக்கு? ஒண்ணும் செய்யாம கொரோனாவால சாகிற எண்ணிக்கை கூடிட்டே போகுதே?" அவர் என்னிடம் பேச்சுக்கொடுத்தார்.

"ஹ்ம், இப்ப உங்கட பிள்ளையத் தூக்கி முத்தம் குடுத்தீங்களே, நீங்களோ றோட்டு றோட்டா திரியிறீங்கள்…"இருந்த கோபம் வெறுப்பெல்லாம் என் வார்த்தைகளில் உரைக்கத் தொடங்கியது.

"அது காலம்புர நல்லா அடிச்சுப்போட்டன்மா…"

அவரை பேசவிடாமல் தொடர்ந்தேன்.

"வருமுன் காப்போம் எண்டு அந்தகாலத்தில சொன்னதெல்லாம் சும்மாவோ? இங்கு எத்தனை பேர் சுகாதார முறைகளை பேணுறம்? தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தாதான் தெரியும் என்றது எவ்வளவு உண்மை? எனக்கு என்ன இன்னும் வரலதானே என்றதுதான் பல பேரோட நினைப்பு… அதால நாங்க எப்படியும் திரியலாம். முகக்கவசம் தேவையில்லை, தேவையற்ற ஒன்றுகூடல்கள்… நீங்கள் கொரோனா தொற்றுக்குள்ளாவதற்கான காலம் வெகு தொலைவில் இல்லை.. நீங்கள் செய்யவேண்டியத செய்யாமல் விட்டிட்டு சுகாதார ஊழியர்களிடம் கேள்வி கேட்பதில அர்த்தமில்லை.

உங்களுக்கு தொற்று ஏற்பட்டால் உங்கட பக்கத்தில பொஞ்சாதி பிள்ளைகளே வரத் தயங்கு கிறபோது தம் பணிக்காய் தொற்றுக்குள்ளானவர்களை பராமரிப்பதற்காக PPE kitம் போட்டுக்கொண்டு அந்த உஷ்ணத்தையும் தாண்டி பராமரிப்பது என்பது சின்ன விஷயமில்லை… ஏனென்டா ஒவ்வொரு சுகாதார ஊழியருக்கும் அம்மா அப்பா கணவன் மனைவி பிள்ளைகள் என குடும்பம் இருக்கு. தங்களிட்டயிருந்து தங்கட குடும்பத்துக்கு பரவிடுமோ என்ற பயத்தோடதான் ஒவ்வொரு நாளும் வேலை செய்யிறார்கள்" .

"ஐயோ நான் சும்மா முசுப்பாத்தியாக் கேட்டன் தங்கச்சி, நீங்கள் கோபிக்காதீங்கோ!"

"சொறி அண்ணா, நேட்டு முழுக்க கிளினிக்கி லதான், நித்திரையும் இல்ல, அதான் கண்டபடி கத்திப்போட்டன், மன்னிச்சுடுங்கோ"

"அது பரவாய்யில்ல தங்கச்சி, நானும் உப்படித் தான், ட்ராபிக்கில நிக்கும்போது பத்திக்கொண்டு வரும், அந்த நேரம் றோட்டுல போறவறவ னுக்கெல்லாம் பூசைதான். உந்த லொக்டவுன் போடாம சமாளிக்கேளாதோ?"

"கஷ்டம் அண்ண, நாளைக்கு போடுறப் படியாத்தான் கொஞ்சம் சமாளிக்கலாம்."

"லொக்டவுன் போட்டா எங்கட பாடு சிரிப்பா சிரிச்சிடும். நான் பேய்மாறி ஓட்டோ ஓடி, மனுசியும் உங்க ஒரு பெரிய கொம்பெனில கூட்டுற கழுவுற வேலைக்கு போய்யே கையுல காசு நிக்குது இல்ல. இப்பையும் பாருங்கோ, பிள்ளைண்ட பால்மா இப்பதான் கொண்டுபோய்க் குடுத்துட்டு வர்றன்"

"கொஞ்ச நாளைக்கு போட்டுத்தான் ஆகோணும், இல்லாட்டி இந்தியாண்ட நிலைமை தான் வரும்"

"அதுவும் எண்ட மனுசின்ட கொம்பெனிக்காரன் ஒரு கஞ்ச பயல், போனமுறை லொக்டவுன காட்டி அந்த வருஷம் குடுக்கிற சம்பளக்கூட்டுத்தொகையக் குடுக்கல்ல, அதுவே ஐநூறோ ஆயிரமோதான். இந்த வருசமும் அதே பாட்டுத்தான் பாடப் போறான். எதோ கடவுள் விட்ட வழி"

"அட போங்கண்ணா, கிருஷ்ணர், புத்தர், மகாவீரர், எல்லாரும் பிறந்த இந்தியாவிலையே எவ்வளவு அழிவும் அட்டூழியமும். நாங்களோ வெறும் மாம்பழத்தீவு, முருகனும் பிள்ளையாரும் உனக்கா எனக்காண்டு போட்டிபோட்டுக் காப்பாத்தினாத்தான் உண்டு, இரக்கபட்டு எந்தச் சாமியும் காப்பாத்தப்போற மாதிரித் தெரியல்ல. நல்லா பிக்பாஸ் பார்த்தமாறி நம்மள அழவிட்டு வேடிக்கை பார்க்கினம் கடவுள்மார்."

"தங்கச்சி எத்தின வயசு?"

"இருபத்தேழண்ணா"

"கல்யாணமாயிடுச்சோ?"

"எங்கண்ணா, நாங்கல்லாம் 90ஸ் கிட்ஸ், சிங்கிள்தான் கெத்து"

"நாளைக்கு கல்யாணம் ஆகிக் குழந்தை குட்டின்னு வந்தாத்தான் கடவுளும் வேணும் கடன்கொடுக்கிறவனும் வேணும்"

"ச்சேய், இல்ல நான் தெரியாமத்தான் கேக்கிறன், இப்பிடி கொரோனாவை வரபண்ணதுக்கு, கொலை பண்றவனையும் ரேப் பன்றவனையும் கொல்றமாறி ஒரு வைரஸ உருவாக்கிவிட்டிருக்கலாமே, நல்லவங்களாவது நல்லா இருந்திருப்பாங்களே"

"எந்தக் கெட்டவன் எப்ப நல்லவனா மாறுவான், எந்த நல்லவன் எப்ப கெட்டவனா மாறுவான் எண்டு கடவுளுக்கே தெரியாது போல"

"சரி அப்பிடியே இருக்கட்டும், ஆனா கொலைபண்ணப் போகும்போதும் ரேப் பண்ண போகும் போதும் அவன் மூளைல சில இரசாயனங்கள் சுரக்கும். அவை சுரக்கும்போது மட்டும் அவன் மயங்கி விழுற மாறி அவன் நரம்பு மண்டலத்தில ஒரு வைரஸ பரப்பியிருக்கலாமே, அவன் நல்லவனா இருக்கும் வரைக்கும் அந்த வைரஸ௱ம் வெளிப்படாம அஸிம்டொட்டிக்கா இருக்கும்"

"அஸிம்டொ.. இண்டா என்னம்மா?"

"வெளிப்படாம, இப்ப பலபேருக்கு கொரோனா இருந்தும் காச்சல் தலையிடி எண்டு எந்த அறிகுறியும் இல்லாம இருக்கே, அப்பிடி"

"என்னமோ, நீங்க சொல்றதே எனக்குப் புரியமாட்டன்குது, இதுல கடவுளோட காரணத்தை புரிஞ்சுக்கிற அளவுக்கு எனக் கேதம்மா புத்திசாலித்தனம். கண்ணமூடிட்டு நம்பவேண்டியதுதான்."

வீடு வந்தது. மீட்டர் 108 ரூபாய் காட்டியது. என்னிடம் நூறு ரூபாய்த் தாளும் 20 ரூபாய்த்தாளும், இரண்டு 50 ரூபாய்த்தாளும் மூன்று ஆயிரம் ரூபாய்த் தாள்களும் ஒரு ஐயாயிரம் ரூபாய் தாளும் இருந்தன. அவரின் கைத்தொலைபேசி வெளிச்சத்திலேயே அவற்றைத் தேடினேன். நூறு ரூபாய்த் தாளையும் இருபது ரூபாய்த் தாளையும் எடுத்துக் கொடுத்தேன்.

"இல்ல தங்கச்சி , வீட்டடில வெயிட் பண்ணதில, உண்மையா நூறுதான் வரும்" என்று கூறி இருபது ரூபாய்த்தாளை திருப்பித் தந்தார்.

அந்த நேர்மையும் நாளைய லொக்டௌனும் என்னை பயம் சேர்ந்த மௌனத்திற்கு அழைத்துச்சென்றது. ஒரு ஆயிரம் ரூபாய்த் தாளை எடுத்துக் கொடுத்தேன். அவர் ஏற்க மறுத்தார். வற்புறுத்திக் கைகளில் திணித்து விட்டு இறங்கினேன். முச்சக்கரவண்டியின் சிகப்பு நிறம் இருளிலும், இயந்திரச் சத்தம் மழையிலும் நசுக்கப்பட்டது.

படலையைத் திறந்துகொண்டு வீட்டிற்குள் போகும்போது என் கால்களை உரசிக்கொண்டு ஏதோ ஓடியது. பயந்து பாய்ந்தடித்து வாங்கிய அத்தனை பொருட்களையும் போட்டடித்தேன். அனைத்தும் நிலத்தில் பரந்து கிடந்தது. பொதிசெய்யப்பட்ட வெங்காயச் சம்பல் போத்தில், 7 கோல்ட் மாரி பிஸ்கட் பக்கெட்டுகள், சாண்ட்விச் பாண், சீனிப் பக்கெட், 5 சமபோசாப் பக்கெட்டுகள், 4 லைப் பாய், ஒரு கிழமைக்குப் போதுமான கத்தரிக்காய், மிளகாய், போஞ்சி, தக்காளி, அரிசி, கரட், கிழங்கு, பட்டர், முட்டை, பருப்பு , புடிங் பக்கெட்டுகள் … லொக்கடவுன் என்ன, உலகப்போரே வந்தாலும் பார்த்துக் கொள்ளலாம். அப்பொழுதே கவனித்தேன், வீதியின் முனையில் மழையில் நனைந்தபடி ஒரு எலி ஓடிக்கொண்டிருந்தது.

இந்த வார சுடோக்கு - 39

3		2		6				
		1	2	5				
5			9	8	1		7	
		6						1
	2	7				3	5	
1						7		
	4		1	2	8			6
				3	5	8		
				9		5		7

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்கு வதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந் தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடு களிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

செம்மண்
சுடோக்கு,
551 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையங் கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்ற வரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

1	7	3	2	4	6	9	5	8
8	5	2	1	7	9	3	4	6
4	6	9	8	5	3	1	7	2
9	1	7	6	3	8	5	2	4
6	2	4	5	9	1	8	3	7
3	8	5	7	2	4	6	9	1
5	9	6	4	8	7	2	1	3
2	4	1	3	6	5	7	8	9
7	3	8	9	1	2	4	6	5

குறிப்பு: கிரீன் மீடியா கவுஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் சக நிறுவன ஊழியர்கள் இப் போட்டியில் கலந்துகொள்ளமுடியாது.

கடலையும் கரையையும் நாசமாக்கிவிட்ட விபத்து

இலங்கையின் மேற்குக் கடலில் தீ விபத்துக்குள்ளான எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து கடலில் விழுந்த பொருள்களால் கடல்வாழ் உயிரிகளுக்கும் கரையோரத்திற்கும் பெரும் சுற்றுச்சூழல் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுகத்திற்குள் நுழைவதற்காகத் தரித்து நின்ற சமயம் கப்பலில் ஏற்றப்பட்டிருந்த நைத்திரிக் அமில கொள்கலனில் ஏற்பட்ட கசிவு இந்தத் தீ விபத்துக்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது.

சிங்கப்பூரைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான பேர்ள் கப்பல் 1486 கொள்கலன்களுடன் பயணித்துக்கொண்டிருந்தபோது தீ விபத்துக்குள்ளாகி இருக்கின்றது. புதிதாகக் கட்டப்பட்ட இந்தக் கப்பல் விபத்துக்குள்ளாகும் போதே தனது மூன்றாவது கடல் பயணத்தில் ஈடுபட்டிருந்தது.

கப்பலில் ஏற்பட்ட தீயை அணைக்க இலங்கை மற்றும் இந்திய கடற்படைக் கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. இரண்டு நாட்கள் போராட்டத்திற்குப் பின்னர் வியாழக்கிழமை தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. ஆனால் அதற்கிடையில் கப்பலில் இருந்து விழுந்த பொருள்கள் கொழும்பின் கரையோரங்களை வந்தடைந்தது.

முக்கியமாக நெகிழி (பிளாஸ்ரிக்) பொருட்களைத் தயாரிப்பதற்கான அடிப்படை மூலப்பொருள் கொள்கலன் கப்பலில் வெடித்ததை அடுத்து அது கடலில் கொட்டி கரையோரத்தை மூழ்கடித்துள்ளது. கப்பலில் தலா 26 ஆயிரம் கிலோ நிறைகொண்ட நெகிழி மூலக்கூறுகள் மூன்று கொள்கலன்கள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் மூன்று கொல்கலன்களுமே வெடித்துச் சிதறி நெகிழி மூலப் பொருட்கள் கடலில் கொட்டினவா இல்லையா என்பது அதிகாரிகளுக்கு உறுதியாகத் தெரியவில்லை.

பேர்ள் கப்பலின் இந்த விபத்தால் இலங்கையின் 42 கிலோ மீற்றர்கள் நீளமான கடற்கரை சுற்றுச்சூழல் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றது என்று கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்திருக்கின்றது. கப்பலில் இருந்து சிதறி கரையோரத்தில் ஒதுங்கியிருக்கும் பொருள்களை அகற்றும் பணியை அதிகார சபை உடனடியாகத் தொடக்கி யுள்ளது.

கப்பலில் 300 மெற்றிக் தொண் எண்ணெய் இருந்துள்ளது. அடுத்த கட்டமாக அதுவும் கட லில் கசியுமா என்கிற அச்சத்தோடு அதிகாரிகள் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றார்கள். இதுவரை எண்ணெய் கசிவு ஏற்பட்டதற்கான ஆதாரங்களைக் காண வில்லை என்று வெள்ளிக் கிழமை வரை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அப்படி எண்ணெய் கசிவு நடந்தால் அது மிகப் பெரும் சுற்றுச்சூழல் பாதிப்பை இலங்கைக்கு ஏற்படுத்தும் என்று சுற்றுச்சூழலியலாளர்கள் கூறுகின்றனர். 2012ஆம் ஆண்டு கொங்கொங் கடலில் நடந்த இது போன்றதொரு விபத்தை அதற்கு உதாரண மாகக் காட்டுகின்றார். முத்துப் பாதுகாப்பு என்கிற சுற்றுச்சூழல் அமைப்பின் ஒருங்கிணைப் பாளர் முடித்த கட்டுவாவல.

நெகிழி மூலக்கூறுகளால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பும் பாரதூரமானது என்கிறார் அவர். கொங்கொங்கில் ஏற்பட்ட பாதிப்பு 9 வருடங்கள் கடந்து இன்றும் தொடர்வதாகவும் அவர் தெரிவித்தார். கரையொதுங்கும் நெகிழி மூலக்கூறுகள்

அடங்கிய பொதிகளை மக்கள் எடுத்துச் செல்வதைத் தவிர்க்கவேண்டும் என்று கூறிய அவர், அவை குடிமனைகளுக்குள் எடுத்துச் செல்லப்படுவதன் மூலம் சுற்றுச் சூழலுக்கு மேலும் பாதிப்பு ஏற்படும் என்றார்.

பேர்ள் கப்பலின் இந்த விபத்தால் இலங்கையின் 42 கிலோ மீற்றர்கள் நீளமான கடற்கரை சுற்றுச்சூழல் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றது என்று கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்திருக்கின்றது. கப்பலில் இருந்து சிதறி கரையோரத்தில் ஒதுங்கியிருக்கும் பொருள்களை அகற்றும் பணியை அதிகார சபை உடனடியாகத் தொடக்கி யுள்ளது

கடலில் கொட்டப்பட்டுள்ள நெகிழி மூலக்கூறுகளால் கடல்வாழ் உயிரிகளுக்கும் பெரும் பாதிப்பு என்று தெரிவித்தார் பேர்ள் பாதுகாப்பு கொள்கை பரப்பு அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான மலிஷா குணவர்த்தன. கடலில் கிடக்கும் பிளாஸ்டிக் மூலக்கூறுகளை உண்ணும் மீன், ஆமை, கடல் பறவைகள் அவற்றைச் செரிக்க முடியாமல் அதேநேரம் பசியும் எடுக்காமல் பட்டினி கிடந்தே இறக்கப் போகின்றன என்று எச்சரித்திருக்கின்றார்.

இந்த நெகிழி மூலக் கூறுகள் கடலில் மிதக் கும்போது அது வேறு எண்ணெய் வகைகள் எல்லாவற்றும் தன்னுள் ஈர்த்துக்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார். இது நிலமையை மேலும் மோசமாக்கும் என்றும் தெரிவித்தார்.

இதனால் மீன்பிடித் துறை பெரும் பாதிப் புக்குள்ளாகும் என்பது அவரது எதிர்வகூறல். நீர்கொழும்பில் இருந்து இந்தப் பகுதிக்கு மீன் பிடிக்கச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்வளவு மோச மான சுற்றுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்தி யுள்ள பேர்ள் கப்பல் உரிமையாளர்களிடம் இருந்து அதற்கான நட்ட ஈட்டை பெறுவதற்கான நடவடிக்கை களை அரசு தொடங்கி யுள்ளது.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.05.2021 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781